வெளியீடு—31—1—1968]
Issued—31—1—1968]

# தமிழகச் சட்டப் பேரவை நடவடிக்கைகள்
# MADRAS LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு
## OFFICIAL REPORT

*வெள்ளிக்கிழமை, 1967 ஜூன் 23*

**Friday, 23rd June 1967**

தொகுதி II—எண் 5

**Volume II—No. 5**

©
தமிழக அரசு
1968
©
GOVERNMENT OF MADRAS
1968

*சட்டப் பேரவைத் துறை*
*சென்னை-9.*
*Legislative Assembly Department*
*Fort St. George, Madras-9*

V211,31 N67
N67.2.5

## உள்ளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1 | வினாக்கள்-விடைகள் .. .. .. .. | 465–490 |
| 2 | ஒத்திவைப்புத் தீர்மானம்— | |
| | கோவையில் பஞ்சாலைகள் மூடப்பட்டதும், தொழிலாளர் பிரச்சினையும் .. .. .. .. .. | 490–491 |
| 3 | அறிவிப்புகள்— | |
| | (அ) பேரவை அலுவல் .. .. .. .. | 491 |
| | (இ) 1967-ம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்த) மசோதா .. .. .. .. .. | 491 |
| | (உ) 1967-ம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்த) மசோதா .. .. .. .. | 492 |
| | (எ) 1967-ம் ஆண்டு தமிழ் நாடு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்பு (திருத்த) மசோதா .. .. | 492 |
| 4 | அரசினர் மசோதாக்கள்— | |
| | (அ) 1967-ம் ஆண்டு தமிழ் நாடு மதுவிலக்கு (திருத்த) மசோதா .. .. .. .. .. | 491 |
| | (இ) 1967-ம் ஆண்டு தமிழ் நாடு பொது விற்பனை வரி (திருத்த) மசோதா .. .. .. .. | 492 |
| | (உ) 1967-ம் ஆண்டு தமிழ் நாடு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்பு (திருத்த) மசோதா .. .. | 493 |
| 5 | 1967-68-ம் ஆண்டிற்கான திருத்த வரவு-செலவுத் திட்டத்தின் மீது பொது விவாதம்—தொடர்ச்சி .. .. | 493–560 |
| 6 | பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள் .. .. .. | 561–563 |


65002



V211, 31 N67
N67 · 2·5

**வெள்ளிக்கிழமை, 1967 ஜூன் 23.**

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில், மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. சி. ப. ஆதித்தனார் அவர்கள் தலைமையில், பேரவை கூடியது.

## 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

**மாண்புமிகு பேரவைத்தலைவர் :** இப் பேரவைக் கூட்டத்தின் முதல் அலுவல் "வினாக்கள்—விடைகள்". மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்கின்ற கேள்விகளுக்கு மாண்புமிகு அமைச்சர்கள் பதில் அளிப்பார்கள்.

### *Madras-Pallipet Express bus.*

* 47 Q.—THIRU K. VINAYAKAM : Will the hon. the Minister for Public Works be pleased to state whether there is any proposal to run express bus service between Madras and Pallipet (Chingleput district) via Tiruttani and Ramakrishnarajupet?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தமிழக அரசு இரு மாநிலங்களுக்கிடையில் மேற்காணும் இரு பஸ் வழித்தடங்களில் போக்குவரத்துத் துறையின் சாதாரண பஸ்களை விடுவது குறித்து ஆலோசித்து வருகிறது.

(1) சென்னை-பள்ளிப்பட்டு :

வழி : பரங்கிமலை, பூவிருந்தவல்லி, திருவள்ளூர், திருத்தணி, ராமகிருஷ்ணராஜுபேட்டை (79.4 மைல்).

(2) சென்னை-பள்ளிப்பட்டு :

வழி : அமைந்தகரை, பூவிருந்தவல்லி, திருவள்ளூர், திருத்தணி, நகரி (74.4 மைல்).

**திரு. கே. விநாயகம் :** முதலில் கூறிய ரூட் பூராவும் நம்முடைய மாகாணத்திலே போவதினாலே இந்த ரூட்டில் பஸ் விடுவதற்கு எந்த விதமான தடங்கலும் இருக்காது என்று நினைக்கிறேன். இரண்டாவது ரூட் ஆந்திர பிரதேசத்தை ஒட்டி அதைத் தொட்டுக் கொண்டு போகவேண்டும். சென்னையிலிருந்து பூந்தமல்லி, திருவள்ளூர், திருத்தணி, ராமகிருஷ்ணராஜுபேட்டை வழியாகப் பள்ளிப்பட்டுக்கு உடனடியாக ஒரு எக்ஸ்பிரஸ் பஸ் விடுவதற்கு அரசாங்கம் யோசிக்குமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** விரைவு பேருந்து வண்டி போடுவது பற்றி யோசிக்கப்பட்டது. இயக்குநர் இது சம்பந்தமாக ஆராய்ந்து பார்த்து விரைவு வண்டியாக இருந்தால் 35 இடங்கள்

தான் போடவேண்டியிருக்கும். அப்படி போட்டால் அது லாபகரமாக இருக்காது என்ற காரணத்தால் சாதாரண வண்டியாக, அதாவது 60 இடங்கள் உள்ள வண்டியாகப் போடுவதற்கு யோசிக்கப்படுகிறது. இதைப்பற்றி கவனிக்கப்படும்.

**திரு. ந. தருமலிங்கம் :** திருத்துறைப்பூண்டியிலிருந்து திருச்சிக்கும், திருத்துறைப்பூண்டியிலிருந்து சென்னைக்கும் நம்முடைய சர்க்கார் பேருந்து விடவேண்டுமென்ற யோசனை இருக்கிறதா? இதைப்பற்றி அங்கேயிருந்து ஏதாவது விண்ணப்பம் வந்திருக்கிறதா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பு இல்லாவிட்டாலும் அங்கத்தினருடைய யோசனை கவனிக்கப்படும்.

**திரு. ஆ. கோவிந்தராசன் :** நெல்லிக்குப்பம் முனிசிபாலிடியாகவும் தொழில் நிறைந்த இடமாகவும் இருப்பதால் சென்னையிலிருந்து இராமநாதபுரத்திற்கும், இராமநாதபுரத்திலிருந்து சென்னைக்கும் நெல்லிக்குப்பம் வழியாகத் தங்கி செல்வதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** பரிசீலிக்கப்படும்.

**திரு. கே. விநாயகம் :** பள்ளிப்பட்டு நம்முடைய மாகாணத்தின் கோடியில் இருக்கிறது. அதற்கப்புறம் இரண்டு பர்லாங்க் தூரத்தில் ஆந்திர பிரதேசம் ஆரம்பிக்கிறது. அங்கிருந்து பள்ளிப்பட்டுக்கோ அல்லது பள்ளிப்பட்டிலிருந்து சென்னைக்கோ வர வேண்டுமென்றால் ஒரே அடியாக நேராக வரமுடியாமல் இரண்டு மூன்று இடங்களில் ஏறவேண்டி இருக்கிறது. அதனால் மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். பொதுமக்களுக்காக பஸ் விடுவதால் அதில் லாபமோ நஷ்டமோ ஏற்படுவதுபற்றி கவனிக்காமல் பஸ் விடவேண்டும். ஏனென்றால் இப்போதுள்ள அரசாங்கம் எவ்வளவு நஷ்டம் ஏற்பட்டாலும்கூட அதைப்பற்றிக் கவலைப்படுவதில்லை. ஆகையால், மக்களுடைய வசதிக்காக நஷ்டம் வந்தாலும் பள்ளிப்பட்டிலிருந்து சென்னைக்கு நேரடியாக பஸ் விட அரசாங்கம் யோசிக்குமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இரண்டு வழிகளைப்பற்றி அரசாங்கம் யோசித்துக்கொண்டிருப்பதாகக் குறிப்பிட்டேன். இப்பொழுது அங்கத்தினர் சொன்ன பாதையை மாத்திரம் விரைவிலே கவனிக்க பரிசீலிக்கப்படும்.

**திரு. ஆ. கோவிந்தராசன் :** மதுரையிலிருந்து நெய்வேலி வரையிலும் செல்லுகின்ற பஸ்ஸை மதுரையிலிருந்து சென்னைக்கு விடுவதற்கு உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இதற்கு தனிக்கேள்வி வேண்டும்.



**திரு. நா. காசிராமன் :** கும்பகோணத்திலிருந்து பண்ருட்டி வழியாக சென்னைக்கு பஸ் விட்டால் தூரமும் குறையும், கட்டணமும் குறையும். ஆகையால் அந்த வழியாக பஸ் விடுவதற்கு யோசிப்பார்களா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தனிக்கேள்வி போடவும்.

## அரசாங்க பஸ்கள் விற்பனை

*48 வினா.—**திரு. ஆ. கு. சுப்பையா :** மதிப்பிற்குரிய பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அரசாங்கத்திற்குச் சொந்தமான பஸ்கள் சமீபத்தில் விற்பனைச் செய்யப்பட்டனவா?

(இ) ஆம் எனில், எத்தனை பஸ்கள் எவ்வளவு ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டன?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** (அ) ஆம்.

(இ) 1967-ம் ஆண்டு மார்ச் திங்களில் 36 பஸ்கள் ரூ. 3,84,872-க்கு விற்கப்பட்டன.

**திரு. ஆ. கு. சுப்பையா :** தலைவர் அவர்களே, இந்த பஸ்களை விற்பனை செய்கின்ற காலத்தில் டெண்டர் கால்பார் செய்து விற்பனை செய்யப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அவைகளெல்லாம் ஏலத்தில் விடப்படுகின்றன. வண்டியினுடைய விலையை நிர்ணயித்து அதற்குமேலே அதிகமாக ஏலம் கேட்பவர்களுக்கு விற்கப்படுகிறது.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** பஸ்களை விற்பனை செய்வதற்கு உரியவை என்று தீர்மானிப்பதற்குத் தனி அதிகாரி இருக்கிறாரா அல்லது ஏதாவது குழு இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இப்போது தனி அதிகாரிதான் கவனித்துக்கொண்டிருக்கிறார்.

**திரு. க. ந. இராமச்சந்திரன் :** இப்போது அரசாங்க பஸ்களை விற்கவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதா? ஏற்கனவே விற்பனையான பஸ்கள் விலை எவ்வாறு நிர்ணயம் செய்யப்பட்டது?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அவசியம் ஏற்படும்போது பஸ்கள் பழுதாகிவிட்டால் அவைகள் ஏலத்திற்கு விடப்படுகின்றன.

THIRU T. MARTIN : Mr. Speaker, may I request the Hon. Minister for Transport to state whether two Government buses were sold to Swamy Motor Service, Tanjore with brand new tyres?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** மொத்தம் 36 பேர்கள் இருக்கிறார்கள். அவைகளிலே சாமி மோட்டார் பஸ் சர்விஸ்லும் ஒன்றாக இருக்கிறது.

**திரு. முனு. ஆதி :** பஸ்களை எல்லாம் 5 ஆண்டுகள் வரை வைத்திருந்து தள்ளிவிடலாமா என்றிருக்கிறது. சர்வீஸ் டைம் கூடுதலாகக் கொடுத்து ஏலம் விடலாம். ஏன் அப்படிச்செய்யக் கூடாது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** லேலண்ட் பஸ்ஸின் உழைப்புக் காலம் 5 ஆண்டுகள் பென்ஸுக்கு 5 ஆண்டுகள், பார்கோவிற்கு உழைக்கும் காலம் 4 ஆண்டுகள் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. லேலண்ட் பஸ்ஸுக்கும் பென்ஸ் பஸ்ஸுக்கும் உழைக்கும் காலத்தை 6 ஆண்டு காலமாகவும் பார்கோவிற்கு 5 ஆண்டு காலமாகவும் நிர்ணயிக்க யோசனை இருக்கிறது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** ஏலத்திற்கு விடுவதற்கு முன்பு பத்திரிகைகளில் விளம்பரம் செய்து பிறகு ஏலத்தில் விடுவது நல்லதல்லவா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** சென்ற அரசு கையாண்ட முறையை ஒட்டிதான் செயலாற்றப்படுகிறது. இனிமேல் அங்கத்தினர் அவர்களுடைய யோசனைப்படியும் கவனிக்கப்படும்.

**திரு. கே. கேசவலு :** தனியார் துறையிலே வேலை செய்கின்ற டிரைவர்களும் கண்டக்டர்களும் இருக்கிறார்கள். தனியார் பஸ்களை அரசாங்கம் எடுத்துக்கொண்டால் அவர்களையும் எடுத்துக் கொள்ள உத்தேசம் இருக்கிறதா?

(பதில் இல்லை).

**திரு. பி. ஐயயாஸ் :** தலைவர் அவர்களே, தஞ்சை ஜில்லாவில் யார் யாருக்கு பஸ் விற்கப்பட்டது என்று அமைச்சர் அவர்கள் கூறுவார்களா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** பெரிய பட்டியல் இருக்கிறது. படிக்கவேண்டுமென்றால் படிக்கிறேன்.

| | | | |
|---|---|---|---|
| 8—3—1967 | .. | என். பி. அர்த்தநாரி | .. நாமக்கல், சேலம். |
| | | ஆர். எஸ். முத்துசாமி | .. அய்யம்பேட்டை, தஞ்சாவூர். |
| | | டி. கருப்பசாமி | .. சென்னை. |
| | | என். சண்முகம் | .. சென்னை. |
| | | சி. வாசு | .. சென்னை. |
| | | எ. தண்டபாணி | .. சென்னை. |
| | | டி. கருப்பசாமி | .. சென்னை. |
| | | பாண்டியன் | .. சென்னை. |
| | | கே. கருப்பண்ணன் | .. சென்னை. |





| | | |
|---|---|---|
| 8—3—1967— தொடர்ச்சி. | எ. வெங்கடேசன் | .. சென்னை |
| | ஆர். எஸ். முத்துசாமி | .. அய்யம்பேட்டை, தஞ்சாவூர் |
| | டி. செல்வராஜ், சுவாமி மோட்டார் டிரான்ஸ் போர்ட். | தஞ்சாவூர் |
| | ஆர். வரதராஜன், ஜெய விலாஸ் மோட்டார் சர்வீஸ். | தஞ்சாவூர் |
| | ரங்கம் செட்டியார் | .. சென்னை |
| 18—3—1967 .. | லக்ஷ்மி அண்டு கம்பெனி | ஆரணி |
| | ஏ. எம். நஜீம் | .. சென்னை |
| | வி. பி. சாமி | .. சென்னை |
| | நரசிம்மம் | .. சென்னை |
| | பி. கே டிரேடர்ஸ் | .. பம்பாய் |
| | முதலிய 36 பேர்கள் | |

**திரு. இராம. அரங்கண்ணல் :** தலைவர் அவர்களே, முன்பு இருந்த அரசு முதலாளிகளுக்குச் சலுகை காட்டி பஸ்களை விற்றதாகப் புகார் இருந்ததே, அதைப்பற்றி என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சொன்னதுபோல் பகிரங்கமாக விளம்பரம் செய்து விற்பனை செய்யலாம் என்பது யோசிக்கப்படும். அப்போது பஸ் முதலாளிகள் ஒன்று சேர்ந்து முன்கூட்டியே பேசிவைத்து ஏலம் எடுப்பதற்கு முயற்சி செய்தார்கள். அதைத் தவிர்ப்பதற்கு வழி செய்யப்படும்.

**திரு. என். சங்கரய்யா :** இந்த அரசாங்கம் பஸ் ஒன்றை வாங்கிய விலையில் இப்போது ஏலத்தில் விற்கப்பட்ட விலை உத்தேசமாக எவ்வளவு சதவிகிதம் இருக்கும் ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** உதாரணமாக ஒரு பஸ் 30,000 ரூபாய் மதிப்பீடு போடப்பட்டு ஏலத்தில் கொடுக்கலாம், அது 31,000 ரூபாய்க்கு போயிருக்கிறது. சில 10,000 ரூபாய் என்றால் 9,500 ரூபாய்க்கு போயிருக்கிறது. ஒன்று 30,000-க்கு போயிருக்கிறது, ஒன்று 7,000-க்கு போயிருக்கிறது, ஒன்று 9,000 ரூபாய்க்கு போயிருக்கிறது. ஆகவே, மொத்தத்தில் சதவிகிதம் என்ன என்று சொல்லமுடியாது.

**திரு. ஆர். நாகசுந்தரம் :** ஐயா, இந்த அமைச்சரவை வந்த பிறகு ஸ்டேட் பஸ்களில் லாபமா, நஷ்டமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** வருமானம் அதிகம். லாப நஷ்டக் கணக்கு பார்க்கவில்லை.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** இதில் லேலண்ட் அதிக விலைக்குப் போகிறதா, அல்லது பென்ஸ் அதிக விலைக்குப் போகிறதா? லேலண்ட் கூடுதல் விலைக்குப் போனால் அதை வாங்க ஆவன செய்வார்களா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இரண்டு வகை பஸ்களும் ஏறத்தாழ நல்ல விலைக்குப் போகிறது.

**திரு. கே. விநாயகம்:** ஏலத்தில் விடப்பட்ட இந்த பஸ்களின் மொத்தத்தொகை இவ்வளவுதான் இருக்கவேண்டும் என்று மதிப்பீடு இருக்கவேண்டும். ஏலத்தில் எடுத்ததில் அரசாங்கத்திற்கு நஷ்டம் வந்திருக்கிறதா? அல்லது லாபம் வந்திருக்கிறதா? நஷ்டம் வந்திருந்தால் போன சர்க்காரைப் பற்றி ஏதாவது குறை சொல்லலாம், நஷ்டம் இல்லை என்று சொன்னால் சர்க்கார் நேர்மையாக நடந்தது என்று எடுத்து பதில் சொல்வார்களா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** போன அரசாங்கம் நடத்திய ஏலங்கள் பற்றி இன்னும் விசாரணை நடைபெறவில்லை.

**திரு. வி. எஸ். எஸ். மணி:** ஏலத்தில் விடக்கூடிய பஸ்களை கல்வி நிறுவனங்களுக்கு சலுகை காட்டி கொடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** யோசிக்கப்படும்.

### இலஞ்ச ஊழல்கள்

*53 வினா.—திரு. எஸ். சிவசுப்பிரமணியன்: மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

இம்மாநிலத்தில் இலஞ்ச ஊழல்களை விசாரிக்க 'தனி நிறுவனம்' ( Independent Body ) அமைக்கும் திட்டம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனையிலிருக்கிறதா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** இல்லை.

**திரு. எஸ். சிவசுப்பிரமணியன்:** இந்த அரசுக்கு இனிமேலாவது அப்படி அமைக்கும் உத்தேசமுண்டா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** இதுபற்றி விரிவான முறையிலே மத்திய அரசாங்கத்திலே 'ஆம்புட்ஸ்மன்' என்ற அமைப்பை ஏற்படுத்துவதற்கு யோசனை செய்து கொண்டிருக்கிறார்கள். அதுபற்றி எல்லா மாநில அரசாங்கங்களின் கருத்துக்களையும் அறிந்துகொண்டிருக்கிறார்கள். அதன் அடிப்படையில் எதிர்காலத்தில் ஏதாவது நல்ல அமைப்பு ஏற்படக்கூடும்.

**திரு ஈ. ஆர். கிருஷ்ணன்:** சதாசார் சமிதி என்று எல்லா ஜில்லாக்களிலும் ஏற்படுத்தப்பட்டது என்னவாயிற்று? அதில் உள்ளவர்கள் எல்லோரும் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் தான். தற்போதுள்ள விஜிலன்ஸ் டிபார்ட்மெண்டால் போலீஸ் அதிகாரிகளே இருப்பதால் இலஞ்ச ஊழலில் ஈடுபடுகிற போலீஸ் அதிகாரிகள் தப்பித்துக்கொள்கிறார்கள் என்பது உண்மையா? அப்படியானால் ஒரு தனி நிறுவனம் ஏற்படுத்தப்பட்டால் அப்படி ஏற்படுத்தும்போது அதில் உயர்மட்ட ஐ.ஏ.எஸ். அதிகாரிகளைப் போடும் உத்தேசமுண்டா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** அங்கத்தினர் அவர்களின் கருத்து, இப்போது இருக்கிற அமைப்புகளில் நீதிபதிகள் இல்லை என்ற எண்ணத்தில் பேசுகிறார்கள் என்று கருதுகிறேன்.



பல அமைப்புக்களில் உயர்நீதிபதிகள் ட்ரிப்யூனல்களாக பணியாற்றியிருக்கிறார்கள். சில அதிகாரிகள் தப்பித்துக்கொண்டு போகிறார்கள் என்று சொல்கிறார்கள். எவ்வளவு இறுக்கமாக வலை பின்னினாலும் சில மீன்கள் தப்பித்துக் கொள்வது இயற்கை.

DR. H. V. HANDE: Will the Ministry come forward to constitute a high power committee to go into the various charges of corruption against the previous Ministry so that at least hereafter politicians will be careful before indulging in corrupt practices? There are a number of charges against the authorities in the previous Ministry. Will this Ministry constitute a committee, like the one constituted in Orissa, to go into corruption charges, and book the persons responsible for corruption and see that there is no political corruption?

THE HON. THIRU C. N. ANNADURAI: I do not think charges were specifically laid about any Minister in the previous Ministry. If at all there is any apprehension in the minds of the people about the activities of the previous Ministry apart from corruption there is no need for a high power committee because the people are the high power committee and they have decided.

**திரு. ஆலடி அருணா:** ஊழல்களில் ஈடுபட்டவர்களை தண்டிப்பதுடன் ஊழல்கள் மூலம் அவர்கள் சம்பாதித்த பொருள்களை பறிமுதல் செய்வதற்கு சட்டத்தில் புதிய வழிகள் உருவாக்கப்படுமா?

(பதில் இல்லை.)

**திரு. செ. பாலசுப்பிரமணியன்:** சென்ற ஆட்சி காலத்தில் இருந்தது போலவே அரசியல் கட்சிகளுக்கு வரும் கடிதங்களை சென்சார் செய்வது, அரசியல் கட்சி முக்கியஸ்தர்களுக்கு வரும் கடிதங்களை சென்சார் செய்வது, இதைத் தொடர்ந்து நடத்துவதற்கு அரசு அனுமதித்து இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** அதுபற்றிய தகவல் எதுவும் இப்போது தருவதற்கில்லை.

THIRU K. VINAYAKAM: The object of the Ombudsman constituted in countries like the United Kingdom is to get the public in touch with the Government departments for the amelioration of their grievances. Is it the intention of our Government to constitute an Ombudsman to go into corruption charges, whereas it is not the main function of the Ombudsman in other countries?

THE HON. THIRU C. N. ANNADURAI: There is vast literature on Ombudsman and Britain was the last to follow. It was only in Mid-European countries that Ombudsman was first constituted and its main purpose was to enquire into mal-administration and corruption of high officials. My hon. Friend wants to know whether we are going to constitute a committee on the same basis.

As I have stated earlier, the Central Government are thinking about it and they have called for the opinion of the State Governments. At the Chief Ministers Conference, many States including our State wanted time to study the problem and the question is under examination.

**திரு. பெ. சௌந்திரபாண்டியன்:** புது அரசு பொறுப்பேற்ற பிறகு லஞ்ச ஊழல் குறைந்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** புதிய அரசைக் கேட்டால் ஆம் என்றுதான் சொல்வார்கள் என்பது அங்கத்தினருக்குத் தெரியும்.

THIRU R. PONNAPPA NADAR: Has this Government submitted any proposals to the Central Government regarding this matter?

THE HON. THIRU C. N. ANNADURAI: I have stated earlier that the question is under examination.

DR. H. V. HANDE: Is the Ministry aware that the main cause for official corruption is delay in passing orders and meeting the requirements of the public? In other words, delayed administration of laws is the main source of corruption. What steps does the Hon. Chief Minister propose to take to avoid delay?

THE HON. THIRU C. N. ANNADURAI: My hon. Friend has only given an explanation of the age-old dictum that justice delayed is justice denied.

**திரு. இல. பலராமன்:** ஊழல் என்பது மக்களிடையேயும், அதிகாரிகளிடையேயும் பரவலாக இருப்பதைத் தடுக்க நியாயமும் நேர்மையும் விளங்க அது குறித்து விளக்குவதற்கு படமாகவோ அல்லது அறிக்கை விட்டோ இந்த அரசு ஏதாவது நடவடிக்கைகள் எடுத்திருக்கிறதா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** அங்கத்தினர் அவர்களின் சுவையான யோசனை பரிசீலிக்கப்படும்.

**அரசியல் கட்சிகள் மீது ஒற்றுடல்**

*54 வினா.—**திரு. வி. கே. கோதண்டராமன்:** மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நமது ராஜ்யத்திலுள்ள எல்லா அரசியல் கட்சிகளின் நடவடிக்கைகளையும் கண்காணித்து வந்த ஸ்பெஷல் பிராஞ்சு வேலை ரத்து செய்யப்பட்டது உண்மையா?

(இ) ஆம் எனில், அதற்கான காரணம் என்ன?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** சி.ஐ.டி. சிறப்புக் கிளையின் அலுவல்கள் குறித்த விவரங்களைப்பற்றி விவாதிப்பது பொதுநலனைக் கருதி விரும்பத்தக்கதன்று.



**திரு. வி. கே. கோதண்டராமன்:** பொது நலனைக் கருதி நாம் மேற்கொண்டு கேள்விகள் கேட்க முடியவில்லை என்று சொன்னாலும் கூட, அதில் ஈடுபட்டிருக்கக் கூடியவர்களுக்கு மேற்கொண்டு தொடர்ந்து வேலை வாய்ப்பு கொடுப்பதற்கான ஏற்பாடுகள் உண்டா?

THE HON. THIRU C. N. ANNADURAI: The main question is whether the work of watching the activities of all the political parties in the State which was done by the Special Branch has been cancelled. அங்கத்தினர், வேலைவாய்ப்பு என்று சொல்லியிருக்கிறார்கள். வேலைவாய்ப்பு விஷயம்பற்றி இதில் ஒன்றுமில்லை.

**திரு. வி. கே. கோதண்டராமன்:** அதிலுள்ளவர்களுக்கு தொடர்ந்து வேலை கொடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** வேலை போய்விட்டதாக பதில் அளிக்கவில்லை. இதுபற்றி விவாதிப்பது பொது நன்மைக்கு உகந்ததல்ல என்று மட்டும் சொல்லியிருக்கிறேன்.

DR. H. V. HANDE: Sir, during the last five years the speeches made by a number of non-Congress leaders were collected by the previous Ministry and I do not know where they have been secreted. Will the Government come forward to see, what has happened to the plethora of such literature collected by them?

THE HON. THIRU C. N. ANNADURAI: I think they are being filed and kept and I do not know exactly about it.

**திரு. இராம. அரங்கண்ணல்:** தலைவர் அவர்களே, தற்போது நடைபெறுகிற காங்கிரஸ் கட்சிக் கூட்டங்களில் சர்க்கார் விரோதமாக வார்த்தைகளையெல்லாம் உபயோகப்படுத்தி பேசப்பட்டு வருகின்றன. அதைக் கவனிப்பதற்கென்று போலீஸ் சுருக்கெழுத்தாளர்களை அனுப்புகிற உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** இப்போது அதற்கென சுருக்கெழுத்தாளர்கள் அனுப்பப்படுவதில்லை. ஆனால், சில காங்கிரஸ் தலைவர்கள் அப்படி அனுப்பவேண்டுமென்று கோரிக்கை விடுத்திருக்கிறார்கள். பொறுப்புள்ள சில காங்கிரஸ் தலைவர்கள் அந்தக் கோரிக்கையை விடுவார்களானால் அது கவனிக்கப்படும்.

THIRU K. VINAYAKAM: Sir, is it not the duty of any Government to have a Branch of this type to watch the political activities of any Party—whatever it may be—and see whether it is a just party or an unjust party and whether it indulges in subversive activities, etc., and if so, do the present Government think that what the previous Government did in maintaining the records of political activities was wrong and whether this Government are going to give up that kind of practice?

THE HON. THIRU C. N. ANNADURAI: My hon. Friend's explanation—to put it in a nutshell—means that necessity knows no law and every law is to be based on necessity and I appreciate that sentiment.

[1967 ஜூன் 23

**திரு. மு. ச. சிவசாமி:** தலைவர் அவர்களே, முந்திய அரசாங்கத்தில் எதிர்க்கட்சிகளின் கூட்டங்களுக்குச் சுருக்கெழுத்தாளர்களை அனுப்பி அதன் அடிப்படையில் வழக்குகளெல்லாம் தொடர்ந்தார்களே; இப்போது பிரதான எதிர்க்கட்சியாக இருக்கும் காங்கிரஸ் கட்சிக் கூட்டங்களுக்குச் சுருக்கெழுத்தாளர்களை அனுப்பாத காரணம் என்ன?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** இந்த அரசாங்கம் பதுக்கல்காரர்கள், கள்ளமார்க்கெட்காரர்கள், சமூக விரோதிகள் பேரிலே வழக்குத் தொடுப்பதை தேவையானதாகக் கருதுகிறது. தாறுமாறாகப் பேசுகிறவர்களைப் பொறுத்த வரையில் ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு தடவை அந்த வழக்கு தொடுக்கப்பட்டு வெற்றிகரமாக நடைபெற்றுவருகிறது. (ஆரவாரம்.)

**திரு. இ. ஆர். கிருஷ்ணன்:** தலைவர் அவர்களே, இப்போது அரசியல் கட்சிக் கூட்டங்களுக்கு ஸ்பெஷல் பிராஞ்சுக்காரர்களை அனுப்புவதில்லை என்ற காரணத்தினால், காங்கிரஸ் கட்சிக்காரர்கள் கண்டபடிப் பேசுகிறார்கள் என்பது அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** கனம் உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்விக்குத் தொடர்பான பதிலை நான் தர விரும்புகிறேன். எந்த அரசியல் கட்சியின் கூட்டத்திலேயும் யார் சற்றுத் தாறுமாறாகப் பேசினாலும், அந்தப் பேச்சின் சுருக்கத்தை அந்தக் கட்சியின் தலைவருக்கு அனுப்பும்படி நான் சொல்லியிருக்கிறேன். அதன்படி திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்களில் சிலர் கூட கட்டுக்கு மீறிப் பேசினால் உடனடியாக எனக்கு அனுப்பப்படுகிறது. காங்கிரஸ் கட்சியின் மேடையில் பேசப்படுவது அகில இந்திய காங்கிரஸ் தலைவருக்கு அனுப்பப்படுகிறது.

*Cement factory.*

* 55 Q.—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Education and Industries be pleased to state whether there is any proposal to explore the possibilities of starting a cement factory or sugar factory either in public sector, co-operative sector or private sector in Tiruttani taluk, Chingleput district?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள திருத்தணித் தாலூக்காவில் சிமெண்டுத் தொழிற்சாலை அல்லது சர்க்கரை ஆலை நிறுவும் திட்டம் எதுவும் இல்லை.

THIRU K. VINAYAKAM: Sir, even if there is no proposal of that kind at present, will the Government examine the possibility of starting a sugar factory in that area, considering its backwardness and the large growth of sugarcane in that area, which is now being sent for consumption by the sugar factories in other taluks?

THE HON. THIRU C. N. ANNADURAI: The position as regards the sugar mills, already-functioning does not encourage the sudden opening of sugar mills in areas whose only qualification is that they are backward.



1967 ஜூன் 23]

DR. H. V. HANDE: Will the Government be pleased to state whether there is any proposal to start any other cement factory in any part of the Madras State? Also, what is the total output of cement in the Madras Stat ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** அவைத் தலைவர் அவர்களே. ஏற்கெனவே ஐந்து சிமெண்ட் தொழிற்சாலைகள் உற்பத்தியில் இருந்துகொண்டிருக்கின்றன. இன்னும் இரண்டு, உற்பத்தி ஆகிற நிலையில் அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. ஒன்று, அரசாங்கத்தின் சார்பாக இராமநாதபுரத்தில் உருவாக்கப்பட்டு, அதற்கான அடிப்படை வேலைகள் நடைபெற்று வருகின்றன. சிறு அளவில் சிமெண்ட் தொழிற்சாலைகளை உருவாக்குவதற்கு ஒன்பது இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, நான்கு இடங்களில் துவக்குவதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறது. கயத்தாறு, அம்பாசமுத்திரம், மேலூருக்கு அருகில் சுன்னம்பூர், அரியலூர்-ரெட்டிபாளையம் பகுதி, காரைக்குடி—அறந்தாங்கிப் பகுதி, ஜாலர்பேட்டைக்கு அருகில் சாமல்பட்டி, வாளையார், பாண்டிச்சேரிக்கு அருகில் சேதாரப்பட்டும் வானூரும், குளித்தலைக்கு அருகில் சிந்தாமணிப்பட்டி ஆகிய இந்த ஒன்பது இடங்களிலும் சிறு சிறு சிமெண்ட் தொழிற்சாலைகள், 30,000 டன், 50,000 டன் அளவுக்கு அமைப்பதற்கான கூறுகள் இருக்கின்றன என்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. நான்கு இடங்களில் அமைப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. மற்ற ஐந்து இடங்களில் தொழிற்சாலைகளை வைப்பதற்கான கூறுகள் ஆராயப்பட்டு வருகின்றன. அங்கெல்லாம் வைக்கப்பட முடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது.

**திரு. ஆர். கருப்பையா:** தலைவர் அவர்களே, அரியலூர்-ரெட்டிபாளையம் அருகில் அமைக்கப்படும் தொழிற்சாலை எப்போது வேலை துவங்கும் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** அரியலூர்-ரெட்டிபாளையம் பகுதியிலே ஒரு சிறு சிமெண்ட் தொழிற்சாலை வைப்பதற்கான அளவுக்கு மூலப்பொருள் இருக்கிறது என்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. யார் அதை ஏற்று நடத்த வருகிறார்கள் என்பது இனிமேல்தான் தெரியும்.

**திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன்:** தலைவர் அவர்களே, ஒன்பது சிறு தொழிற்சாலைகள், சிமெண்ட் தொழிற்சாலைகள், ஏற்படுத்தப்படும் என்று சொன்னார்கள். அந்தச் சிறு தொழிற்சாலைகளின் மதிப்பீடு எவ்வளவு இருக்கும் என்று அறியலாமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** ஒன்பதும் ஏற்படுத்தப்படும் என்ற நிலைமையில் இல்லை. ஆங்காங்கு கூறுபாடுகள் இருக்கின்றன. கயத்தாரில் 4 மில்லியன் டன்கள் மூலப்பொருள் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அம்பாசமுத்திரத்தில் 5 அல்லது 6 மில்லியன் டன்கள் இருக்கும் என்று ஆராயப்பட்டிருக்கிறது. சுன்னம்பூரிலே 1,14 மில்லியன் டன் அளவுக்கு இருக்கக்

கூடும் என்று ஆராயப்பட்டிருக்கிறது. அரியலூர்-ரெட்டிபாளையம் ஏரியாவில் 2½ லட்சம் டன்னும், கைருலாபாத்-அமினாபாத் ஏரியாவில் 17 மிலியன் டன்னும் இருக்கக்கூடும் என்று தெரிகிறது. ஜோலார்பேட்டைக்கு அருகில் சாமல்பட்டியில் 7.5 லட்சம் டன் சுண்ணாம்புக் கல்லும், 18 லட்சம் டன் கங்காரும் இருக்கக்கூடும் என்று தெரிகிறது. வாளயாரில் 3 மிலியன் டன்னும், சேதாரப்பட்டி-வானூர் பகுதியில் 3.5 மிலியன் டன்னும், சிந்தாமணிப்பட்டியில் 2.75 மிலியன் டன்னும் இருக்கும் என்று ஆராயப்பட்டிருக்கிறது.

திரு. பி. வேலுசாமி: தலைவர் அவர்களே, தமிழகத்திலே சிமென்ட் உற்பத்தி பற்றாக்குறையா? உபரியா? பற்றாக்குறையானால் எவ்வளவு? உபரியானால் எவ்வளவு?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** அதுபற்றி விவரம் இல்லை. தனிக் கேள்வி போடவேண்டும்.

THIRU K. VINAYAKAM : Sir, is the Hon. Minister aware of the fact that according to the latest Geological Survey of that area in the Tiruttani taluk under reference, suitable sand and lime have been found there and the Geological Survey of India have suggested to the Madras Government that a cement factory on a small scale could be established. So, will the Government consider the possibility of establishing a cement factory either in the public sector or in the co-operative sector or in the private sector. In the event of the proposal re. a sugar or cement factory not being considered favourably, will the Government come forward to start any other factory to ameliorate the conditions of the people in that economically backward area?

THE HON. THIRU C. N. ANNADURAI : We shall try to accommodate the hon. Member's anxiety in as good a form as possible.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, திருத்தணி தாலூகாவைப் பொறுத்த வரையில்—சிமென்ட் தொழிற்சாலைக்குத் தேவையான மூலப்பொருள் லைம்ஸ்டோன்—போதுமான லைம்ஸ்டோன் இல்லை என்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

'There are no adequate limestones in the Tirutani taluk of the Chingleput district.'

எனவே, அங்கு சிமென்ட் தொழிற்சாலை வர வழி இல்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தது போன்று, சர்க்கரை ஆலையைப் பொறுத்த வரையில், 400 ஏக்கர் அளவுக்குத் தான் திருத்தணியைச் சுற்றி கரும்பு பயிரிட முடியும் என்பதால் சர்க்கரை ஆலை வைக்க வழி இல்லை என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. பள்ளிப்பட்டு என்ற இடத்தில் இருக்கிற தொழிற்சாலைக்குப் போதுமான கரும்பு இல்லாது கஷ்டப்படுகிற காரணத்தினால், மேலும் சர்க்கரை ஆலை செங்கற்பட்டு மாவட்டத்தில் வைக்க வழி இல்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்ன மாதிரி



வேறு ஏதாவது தொழிற்சாலை ஆரம்பிக்க இயலுமா, அதற்கு வழி இருக்கிறதா என்பதைப்பற்றி உறுப்பினர் அவர்களும் சொன்னால் ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கலாம்.

* 56. வினா.—**திரு. வி. கே. கோதண்டராமன்:** மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டத்தில் சிமென்ட் பாக்டரி ஆரம்பிக்கும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தமிழக அரசுக்கு முழுவதும் சொந்தமான தமிழகத் தொழில் வளர்ச்சிக் கார்ப்பரேஷன் லிமிடெட் என்கிற கம்பெனி இராமநாதபுரம் மாவட்டம் ஆலங்குளத்தில் சிமென்ட் தொழிற்சாலை ஒன்றை நிறுவி வருகிறது.

திரு. முனு. ஆதி: தலைவர் அவர்களே, சிமென்டு தொழிற்சாலையில் உற்பத்தி ஆகின்ற அத்தனை மூட்டைகளையும் விநியோகம் செய்யும் உரிமை மாநில சர்க்காருக்கா அல்லது மத்திய சர்க்காருக்கா என்று அறிய விரும்புகிறேன். மு. ப. 9-00

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** மூலக் கேள்விக்கும் இந்த உப கேள்விக்கும் தொடர்பு இல்லை.

**திரு. வி. கே. கோதண்டராமன்:** இராமநாதபுரம் மாவட்டத்தில் ஒரு சிமென்டு தொழிற்சாலை ஆரம்பிக்க வேண்டும் என்று நீண்ட நெடுங்காலமாக கோரிக்கை இருந்து வருகிறது. அதற்கு ஏற்பாடு ஆகிவருகிறது என்று சொன்னாலும், இன்னும் ஆரம்பிப்பதற்கு எவ்வளவு நாட்கள் ஆகும்?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** அதற்குத் தேவைப்படுகிற அடிப்படை வேலைகள், அதாவது இடம் வாங்குவது பெரும்பாலும் முடிவடைந்துவிட்டது. மெஷின்கள் ஆர்டர் செய்யப்பட்டிருக்கின்றன. அவை வந்து சேர்ந்ததும் ஆரம்பிக்கப்படும். நாள் ஒன்றுக்கு 1,600 டன் உற்பத்தி செய்யக்கூடிய திட்டமாக அது அமையும். ஏறத்தாழ அதற்கு ரூ. 6 கோடி ஆகக்கூடும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. மெட்ராஸ் ஸ்டேட் இண்டஸ்ட்ரியல் டெவலப்மெண்டு கார்ப்பரேஷன் லிமிடெட் இதனுடைய முழுப் பொறுப்பையும் ஏற்று நடத்த இருக்கிறது.

**திரு. நா. காசிராமன்:** தஞ்சாவூர் ஜில்லாவில் இதுபோன்ற சிமென்டு தொழிற்சாலைகளை சிறிய அளவிலானாலும் ஆரம்பிப்பதற்கு சாத்தியக்கூறுகள் ஏதேனும் உண்டா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** நான் இதற்கு முன்பு எடுத்துச் சொன்னது போல, இதற்கு மூலப்பொருளான சுண்ணாம்பு கற்கள் தேவைப்படுகிறது. தஞ்சை மாவட்டத்தில் வேண்டிய அளவு இந்த மூலப்பொருள் கிடைக்குமானால் அதற்கான சாத்தியக் கூறுகளை ஆராயலாம்.

[1967 ஜூலை 23

திரு. கரு. சீமைச்சாமி : கிழக்கு இராமநாதபுரத்தில் இராமேசுவரம் தீவில் சிமெண்டு தொழிற்சாலை ஏற்படுத்துவதற்கு நில ஆர்ஜிதம் செய்யப்பட்டு அது சம்பந்தமாக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அங்கே ராமசுப்பிரமணியம், ராதாவுக்கு அனுமதி வழங்கப்பட்டது என்ன நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அதைப்பற்றி விவரம் இல்லை. தனிக்கேள்வி வேண்டும்.

திரு. கே. சகாதேவ கண்டர் : [illegible] 9 தொழிற்சாலைகள் தனியார் துறையிலா, [illegible] அரசாங்கத் துறையிலா என்பதைத் தெரிந்துகொள்ள ஆவல் படுகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : [illegible] பதில் அளிக்கும்போது அரசாங்கத் துறையிலே இராமநாதபுரம் பக்கத்தில் ஆலங்குளத்தில் ஒரு தொழிற்சாலை ஆரம்பிக்கப்படும் என்று சொன்னேன். மற்றவைகள் சிறிய தொழிற்சாலைகள் தனியார் துறைக்கு விடப்பட்டிருக்கின்றன.

திரு. நா. சௌந்தரபாண்டியன் : வள்ளுரில் ஒரு சிமெண்டு தொழிற்சாலை தனியார் துறையில் ஆரம்பிப்பதற்கு லைசென்ஸ் வழங்கப்பட்டது. அவர்கள் அதை ஏற்று நடத்தவில்லை. அரசாங்கமே அதை ஏற்று நடத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : வள்ளுரில் தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கு லைசென்ஸ், அனுமதி வழங்கப்பட்டது. இப்பொழுது இந்திய அரசு சிமெண்டு தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கு, லைசென்ஸ் தேவையில்லை என்று ரத்து செய்திருக்கிறது. யார் வேண்டுமானாலும் ஆரம்பிக்கலாம்

திரு. எம். சுரேந்திரன் : [illegible] சுண்ணாம்புக் கற்கள் கிடைக்கின்றன. ஆகவே, அங்கு சிமெண்டு தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கு முயற்சி எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அதைப்பற்றி விவரம் கொடுத்தால் ஆராயப்படும்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: தஞ்சை மாவட்டத்தின் பக்கத்தில் திருச்சி மாவட்டத்தை ஒட்டி ஆலங்குடியில் சுண்ணாம்புக் கற்கள் மிக அதிகமாகக் கிடைக்கின்றன. அதைப்பற்றி பரிசிலனை செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அதைப்பற்றி விவரம் தந்தால், ஆராய்வதற்கு முயற்சி செய்யலாம்.



[1967 ஜூலை 23

திரு. கரு. சீமைச்சாமி : கிழக்கு இராமநாதபுரத்தில் இராமேசுவரம் தீவில் ஒரு சிமெண்டு தொழிற்சாலை ஆரம்பிப்பதாகச் சொல்லப்பட்டு, மறுபடியும் அது மற்ற ஜில்லாக்களுக்குப் போய் விடுகிறது. கிழக்கு இராமநாதபுரத்தில் இராமேசுவரம் தீவில் ஒரு தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் இனிமேலாவது ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அதைப்பற்றிய விவரம் என்னிடம் இல்லை. தனியாக விவரத்தை எழுதி அனுப்பினால் ஆராய்ந்து என்ன செய்யலாம் என்று முடிவு செய்யலாம்.

## சிதம்பரம்—நடராசபுரம் சாலை

* 57 வினா.—திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : மதிப்பிற்குரிய பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சிதம்பரம் தாலூக்காவில், சிதம்பரம்—நடராஜபுரம், போகும் ரோட்டில் சிதம்பரநாதன் பேட்டை அருகிலுள்ள கலுங்கு மருங்கு பஸ் போக்குவரத்துக்கு அதிக இடைஞ்சலாக குறுகி இருப்பதனால் அதை இடித்துவிட்டு விஸ்தரிக்கும் உத்தேசம் உண்டா ?

(இ) ஆம் எனில், எப்போது வேலை மேற்கொள்ளப்படும் ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) பரிசீலிக்கப்படும்.

(இ) பரிசீலனை முடிந்ததும் வேலை மேற்கொள்ள முயற்சி எடுக்கப்படும்.

## தமிழ்நாட்டில் வறட்சிப் பகுதிகள்

* 58 திரு. கரு. சீமைச்சாமி :<br>திரு. ஆ. துரையரசன் :<br>திரு. வி. கே. கோதண்டராமன் . } மதிப்பிற்குரிய உணவு வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசு வறட்சிப் பகுதிகளை பார்வையிட குழு ஏதேனும் நியமித்ததா ?

(இ) ஆம் என்றால், அக்குழுவின் அறிக்கை சபை முன் வைக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) ஆம்.

(இ) ஆய்வுக்குழுவின் அறிக்கை இன்னும் முடிவு பெறவில்லை.

திரு. கரு. சீமைச்சாமி : கிழக்கு இராமநாதபுரம் மாவட்டத்தைப் பற்றி எல்லா அமைச்சர்களுக்கும் தெரியும். அது மானாவாரி பிரதேசம், வறட்சிப் பிரதேசம். நல்ல செழிப்புள்ள மாவட்டங்களாகிய தஞ்சை, கோவை போன்ற இடங்களில்தான் கிணறுகள் வெட்டுவது, மானியங்கள் கொடுப்பது போன்ற உதவிகள், மற்றக் காரியங்கள் செய்யப்படுகின்றன. பிற்பட்ட மாவட்டமாகிய

[1967 ஜூன் 23

கிழக்கு இராமநாதபுரம், வட ஆற்காடு போன்ற மாவட்டங்களுக்கு தனிச் சலுகைகளைக் கொடுத்து, உணவு உற்பத்தியைப் பெருக்கு வதற்கு வசதிகள் செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தைப்பற்றி இறுதி முடிவு எடுக்கப்பட்டபொழுது இப்படிப் பட்ட வறட்சித் தாலுகாக்களுக்கு, 34 தாலுகாக்களுக்கு மத்திய சர்க்கார் நிதி உதவி அளிக்கவேண்டும் என்பதாகவும் கோரப் பட்டது. ஆனால், மத்திய அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் இப்படிப்பட்ட வறட்சிப் பிரதேசங்கள் மைசூர், ஆந்திரா மாநிலம் இவைகளையொட்டி தொடர்ச்சியாக இருக்கிற ஒரு பகுதிக்கு மட்டும்தான் மத்திய அரசு நிதி உதவி கொடுக்கும் என்று கூறியதா லால், இப்படிப்பட்ட ஒரு செயல் குறிப்பு ஒன்றை தயார்செய்து மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பியிருக்கிறோம்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** அந்தக் குழுவில் உள்ள நிபுணர்கள் யார்? நம் நாட்டிலுள்ள நிபுணர்கள் மட்டும்தான் இருக்கிறார்களா அல்லது வெளி நாட்டு நிபுணர்களும் இருக்கிறார்களா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அந்த ஆய்வுக் குழு நம்முடைய மாநில அளவில் மண்வளப் பரிசோதனை இலாகாவினர், சிறிய நீர்ப்பாசன இலாகா அதிகாரிகள், புள்ளிவிவர இலாகா அதிகாரி, விவசாய இலாகா அதிகாரி ஆகியோர்களைக் கொண்டது. மேலும் இவர்களோடுகூட நிர்வாக சிக்கன சீரமைப்புக் குழுவின் ஜாயிண்டு செக்ரடரி இந்தக் குழுவிற்குத் தலைவர். அதோடு எல்லா மாவட்டங்களிலுள்ள பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள், மற்றும் கலெக்டர்கள் அதிகாரிகள் இவர்களெல்லாம் சேர்ந்து ஒரு குறிப்பைத் தயாரித்திருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல் மாநிலம் முழுவதற்கும் ஒரு குழு ஒரு உருப்படியான செயல் திட்டத்தை தயாரித்துக் கொடுக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு எந்தெந்த தாலுகாவில் எந்தெந்த அளவுக்கு இந்த வேலைகளை எடுத்துக்கொள்ளலாம் என்பது முடிவு செய்யப்படும்.

**திரு. க. ரா. நல்லசிவம் :** ஒரு தாலுகாவை பஞ்சப் பிரதேசம் என்று நிர்ணயிக்கும்பொழுது ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள மழை அளவு என்ன என்பதைக் கணக்கில் எடுத்துக்கொண்டுதான் செய்கிறார்கள். தற்பொழுதுள்ள முறை என்னவென்றால், ஏதோ பல வருஷங்களுக்கு முன்னால் ஒவ்வொரு மாவட்டத்திலும் எவ்வளவு அங்குலம் மழை பெய்தது என்பதை கணக்கில் எடுத்துக்கொண்டு, அந்த அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்டிருக் கிறது. சமீப காலத்தில் ஜனத்தொகை பெருக்கத்தின் காரண மாகவும், காடுகள் சாகுபடி நிலங்களாக ஆக்கப்பட்டு விட்டதினாலும், மழை விகிதாசாரம் ஒவ்வொரு மாவட்டத்திலும்



1967 ஜூன் 23]

குறைந்துவிட்டது. ஆகவே, புதியதாக கணக்கெடுத்து, அந்தக் கணக்கின் அடிப்படையில் பஞ்சப் பிரதேசங்களை நிர்ணயிப்பதற்கு ஒரு திட்டம் வகுக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** கனம் உறுப்பினர் அவர்கள் என்ன கோரிக்கை தெரிவித்திருக்கிறார்களோ, அதனை நிறைவேற்றித் தருவதற்குத்தான் மண்வள ஆராய்ச்சி இலாகா அதிகாரி, சிறிய நீர்ப்பாசன இலாகா அதிகாரி, புள்ளி விவர இலாகா அதிகாரி, விவசாயத் துறை அதிகாரி ஆகியோர்கள் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டு, எந்த அளவுக்கு உற்பத்தித் திட்டம் இருக் கிறது என்பதை கணக்கெடுத்து, அந்தக் குழு ஏறக்குறைய தன்னுடைய அறிக்கையை முடிவு செய்யும் தருவாயில் இருக்கிறது. அது அல்லாமல் மாநில மட்டத்தில் ஒரு குழு யோசனை சொல்லும். அந்த யோசனைக்குப்பின் இந்த மன்றத்தின் முன்னாலும் விவாதிப்ப தற்கு வாய்ப்பு இருக்கிறது. அந்த நேரத்தில் எந்த இடங்கள் என்பதைப்பற்றி முடிவு செய்யப்படும்.

**திரு. ந. தருமலிங்கம் :** திருத்துறைப்பூண்டி வேதாரண்யம் பகுதி கடற்கரைப் பகுதியாக இருப்பதால், வறட்சிப் பகுதியாக இருக் கிறது. அதையும் வறட்சிப் பகுதியாக சேர்த்துக்கொள்ள அரசாங்கம் முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** கனம் உறுப்பினர் அவர் களின் யோசனை கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படும்.

THIRU K. VINAYAKAM : Pending receipt of the report from the Special Officer about the drought areas in our State and arising out of the answers given by the Hon. Minister, may I know what the special features of these drought areas are and what type of succour the Government want to give to these areas? Areas contiguous to the Andhra Pradesh are classified by both the Governments as drought areas. Does Tiruttani form part of those areas?

THE HON. THIRU K. A. MATHIALAGAN : I understand that it does not form part. 'Contiguous areas' means contiguous drought areas which encroach on other States, for example Mysore. The contiguous areas that have been included are Tiruppattur, Hosur, Avinashi, Dharapuram, Vellakoil and Karur. These areas have been decided upon at the Chief Minister's Conference held at Tirupati. But the hon. Member's point of view can be taken into consideration while we finalise our State Plan.

**புலவர் பொ. பொன்னம்பலம் :** மதிப்பிற்குரிய சட்ட மன்றத் தலைவரவர்களே, புதுக்கோட்டை, திருமயம், அறந்தாங்கி போன்ற வறட்சிப் பகுதிகளையும் சீர்படுத்தத் திட்டம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** ஏற்கனவே நான் பதிலுரைத்தேன். முப்பத்து நான்கு தாலுகாக்கள் நீர்ப்பாசன வசதிகள் இல்லாததால், அவை தனியாகக் கவனிக்கப்படவேண்டும் என்று மத்திய சர்க்காரிடமும், திட்டக் கமிஷனிடமும் வற்புறுத்தப்

பட்டிருக்கிறது. மத்திய சர்க்கார் உதவி மூன்று மாநிலங்களிலும் ஓட்டிய தொடர்பு கொண்ட பிரதேசங்களாக இருப்பவற்றிற்கு முதல் கட்டமாக உதவி அளிக்க வேண்டும் என்று இருக்கிறது. அந்த வகையில் வட ஆற்காடு மாவட்டத்தில திருப்பத்தூரும் தர்மபுரி மாவட்டத்தில் ஓசூர், அரூர், கிருஷ்ணகிரி, தர்மபுரி தாலூகாக்களும், சேலம் மாவட்டத்தில் ஓமலூர், சங்கரி, திருச்செங்கோடு தாலூகாக்களும், கோயம்புத்தூர் மாவட்டத்தில் அவனாசி, பல்லடம், தாராபுரம் தாலூகாக்களும், மதுரை மாவட்டத்தில் பழனி, திண்டுக்கல்லும், திருச்சி மாவட்டத்தில் கரூர் தாலூகாவும் முதல் கட்ட உதவி பெறக்கூடியவைகளாக அரசு தேர்ந்தெடுத்திருக்கிறது.

**திரு. நா. காசிராமன் :** தஞ்சை மாவட்டத்தில் அறந்தாங்கி வட்டம் இந்தப் பட்டியலில் சேர்க்கப்பட்டிருக்கிறதா?

(பதில் இல்லை.)

DR. H. V. HANDE : Mr. Speaker, I am quite sure that the Hon. Minister for Food will agree that Ramanathapuram district is the worst drought-affected area in the entire State and if any place can be called a drought area, it is the Ramanathapuram district. In view of that, will the Government come forward to give immediate succour or help to this district without waiting for the finalisation of the report?

THE HON. THIRU K. A. MATHIALAGAN : It is already being given. To the extent the financial resources admit, steps are being taken in that direction.

(திரு. கரு. சீமைச்சாமி எழுந்தார்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. மார்ட்டின் அவர்கள்.

THIRU T. MARTIN : May I request the Hon. Minister to state.

**மாண்புமிகு பேரவைத்தலைவர்:** துணைக்கேள்விகள் கட்சி வாரியாக மாறி மாறிக் கேட்க அனுமதிக்கப்படுகிறார்கள். திரு. ஹாண்டே, சுதந்திரா கட்சி உறுப்பினர் கேட்டவுடன்; திரு. சீமைச்சாமிக்கு கேள்வி கேட்க மறுப்பதற்கு வருந்தவேண்டாம் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்

THIRU T. MARTIN : Sir, may I request the Hon. Minister to state, what report has been submitted by the Committee regarding Sattangulam and Oddangudi area?

THE HON. THIRU K. A. MATHIALAGAN : I have already answered that the report has not yet been finalised. It is in the finalisation stage and the Government are expected to receive it soon.





**திரு. கரு. சீமைச்சாமி :** சார், ரிப்போர்ட் பைனலைஸ் ஆகவில்லை என்றாலும் கூட, இந்த 34 தாலூகாக்களில், இராமநாதபுரம் வறட்சிப் பகுதியாக இருந்தும், அந்த மாவட்டப் பகுதி சேர்க்கப் படாமல் இருப்பது அநியாயம். இராமநாதபுரத்திலிருந்துதான் பிழைப்புக்காக எங்கும் மக்கள் செல்லுகிறார்கள். இராமநாதபுரம் பகுதி அபிவிருத்திக்குச் சேர்க்கப்படவில்லை என்றால் உண்மையிலேயே வருத்தமாக இருக்கிறது. அது சேர்க்கப்படுமா, என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** திரு. சீமைச்சாமி அவர்கள் இராமநாதபுரத்தில் மட்டும் அக்கறை கொண்டவர்கள். நான் இப்பொழுது சொன்ன பதில்களை வைத்துக் கொண்டு பேசுகிறார்கள். ஏற்கனவேயே வறட்சியான பகுதிகளுக்கு அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொண்டு இருக்கிறோம். அதில் இராமநாதபுரம் சேர்ந்திருக்கிறது. இப்பொழுது சொல்வது மத்திய சர்க்கார் உதவி கிடைப்பதில், விதிமுறைகள்படி, மூன்று மாநிலங்களிலும் ஒன்றாக ஓட்டிய நிலப்பிரதேசங்களுக்கு முதல் கட்ட உதவி கொடுப்பதைக் கேட்கும் அளவில் பட்டியலைப் படித்தேன். ஏற்கனவே பல அபிவிருத்தித் திட்டங்களைப்பற்றி நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறது, செய்யப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** கனம் உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொன்னபடி, இராமநாதபுரம் மாவட்டத்தை, வறட்சி மாவட்டம் என்ற பிரிவில், சேர்க்காதது பொருத்தமானது அல்ல. மத்திய சர்க்காருடன் தொடர்பு கொண்டு தெரிவிக்கலாம் என்று கருதுகிறேன்.

### Self-respect marriages.

*59 Q.—THIRU K. VINAYAKAM :
THIRU A. K. SUBBIAH :
THIRU V. K. KOTHANDARAMAN : Will the Hon. the Minister for Law and Co-operation be pleased to state whether there is any proposal to bring legislation to legalise self-respect marriages?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** ஆம் ஐயா.

**திரு. ஆ. கு. சுப்பையா :** சார், இந்த சுயமரியாதைத் திருமணச் சட்டத்தை நடப்பு ஆண்டிலேயே கொண்டுவர ஏற்பாடு உண்டா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** விரைவில் கொண்டுவர முயற்சி எடுக்கப்படுகிறது.

[1967 ஜூன் 23

THIRU K. VINAYAKAM: Sir, what type of marriages are considered to be self-respect marriages? Are those marriages that were conducted by social service leaders including leaders of all parties irrespective of their political affiliations and even the marriages not in conformity with the Hindu Marriage Act or the Special Marriages Act, considered to be self-respect marriages and if so, will the Government legalise all types of marriages? Also, from which date is it going to be legalised? Is it from the date on which the Self-Respect Movement was started or from the date on which the Party in power has come to powers?

THE HON. THIRU C. N. ANNADURAI: I can very well appreciate the anxiety of my hon. Friend. All kinds of marriages will be legalised. Marriages conducted under the leadership of all party leaders—big, small, medium and everything—will be taken into consideration.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** ஏற்கனவே இந்து திருமண சட்டமும், ஸ்பெஷல் மாரியேஜஸ் சட்டமும் கொண்டுவரப்பட்டிருக்கிறது அங்கத்தினர்களுக்குத் தெரியும். இப்பொழுது புதிதாக சுயமரியாதைத் திருமணச் சட்டம், தமிழ் பண்பாட்டைக் காப்பதற்காக கொண்டுவரப்படும். அதில் எந்தெந்த திருமணங்கள் சேர்க்கப்படும் என்பது பரிசீலிக்கப்படும், அதற்கான விளக்கங்கள் கொடுக்கப்படும். சட்டம் வரும்போது, அதற்கு திருத்தங்கள் கொடுக்கவும் அங்கத்தினர்களுக்கு வாய்ப்பு இருக்கிறது.

**திரு. வி. கே. கோதண்டராமன்:** இப்பொழுது நடைபெறும் கூட்டத்திலேயே சட்டம் வருமா அல்லது எவ்வளவு நாட்கள் ஆகும் என்று சொல்ல முடியுமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** அந்த முயற்சியில்தான் ஈடுபட்டிருக்கிறது சர்க்கார்.

**திரு. ஈ. எம். நடராசன்:** தலைவர் அவர்களே, சுயமரியாதைத் திருமணங்கள் அதிகமாக நடக்க ஊக்கம் அளிக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** நிதிநிலை அறிக்கையிலேயே குறிப்பிட்டிருக்கிறது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** கன்கரன்ட் லிஸ்டில் ஐந்தாவது எண்ணுகை, மேரியேஜ் அண்ட் டைவர்ஸ் என்று இருக்கிறது. இதில் மத்திய சர்க்காரின் ஆலோசனை இந்த சட்டத்திற்கு கோரப்பட்டிருக்கிறதா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** அரசியல் சட்டப்படி, இந்து திருமணச் சட்டத்தைத் திருத்த மாநிலங்களுக்கு உரிமை உண்டு. அதன்படித்தான் இந்து மேரியேஜ் சட்டம் நிறைவேற்றப்பட்டது நினைவு இருக்கலாம். ஆகவே, அரசியல் சட்டப்படிதான் இதுவும் செய்யப்படுகிறது.



1967 ஜூன் 23]

**திரு. இல. பலராமன்:** தலைவர் அவர்களே, இந்த சுயமரியாதைத் திருமணம் பற்றிய சட்டம் கொண்டு வந்த பிறகு ஏற்கனவே நடந்த திருமணங்களுக்கும் அந்தச் சட்டம் பொருந்துமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** ஏற்கனவே நடைபெற்ற திருமணங்களைச் செல்லுபடியாக்க வேண்டும் என்பதுதான் கருத்து. சட்டம் வரும்போது விளக்கங்கள் கொடுக்கப்படும்.

**திரு. பி. வேலுசாமி:** இந்து திருமணங்கள் நடக்கும்போது, பெண்களுக்குப் பிடிக்காதவர்களோடு கட்டாயமாக திருமணம் செய்துவிடுவது வழக்கமாக இருக்கிறது. அதற்கு ஏதாகிலும் பாதுகாப்பு உண்டா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இந்தியன் பீனல் கோட் விதிகள்படி கட்டாயத் திருமணம் நடந்தால் நடவடிக்கை எடுக்கச் சட்டத்தில் இடம் இருக்கிறது.

**திரு. க. மு. ராஜகோபால்:** தலைவர் அவர்களே, சுயமரியாதைத் திருமணங்கள் சட்டபூர்வமாக ஆக்கப்படும்போது, புரோகிதத் திருமணங்கள் தடை செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** சுயமரியாதைத் திருமணம் என்றால் என்ன என்று சட்டத்தில் விளக்கம் கொடுக்கப்படும். அதற்கு மேல் அங்கத்தினர்களும் விரும்பினால் திருத்தம் கொடுக்கலாம்.

**திரு. ம. பொ. சிவஞானம்:** சுயமரியாதைத் திருமணம் செய்து கொண்டவர்கள், இந்து மதத்தை ஏற்காதவர்கள் என்பதுதான் நான் அறிந்தது. அப்படியானால், அந்தத் திருமணச் சட்டத் திருத்தமும் இந்து திருமணச் சட்டத்தை அனுசரித்துத்தானா கொண்டுவரப்படுகிறது என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இந்து மணச் சட்டம் பற்றி ஆராயும்போது இந்த நாடு முழுவதுமே இந்து மதம் என்ற நிலைமையை எடுத்துக்கொண்டு, அந்தந்தப் பகுதியிலே உள்ள—தமிழ்ப் பகுதியிலே உள்ள—மக்களுடைய கருத்துக்களை ஏற்றுக் கொண்டுதான் இந்து மணச் சட்டம் உருவாகியுள்ளது. இந்து மணச் சட்டத்திலே பல பிரிவுகள் இருக்கின்றன. தமிழ் மாநிலத்தைப் பொறுத்த அளவிற்குத் தமிழ்ப் பண்பாட்டை அனுசரித்த கருத்துக்களையும் கொண்டது இந்து மணச் சட்டம் என்று ஏற்கனவே ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. ஆகவே, இப்பொழுது வர இருக்கிற திருமணச் சட்டம், இந்துக்களிலே தமிழ்ப் பண்பாட்டை, தமிழ்க் கொள்கைகளை ஏற்றுக்கொள்ளக் கூடியவர்களுக்குத்தான் பொருத்தமாகும்.

[1967 ஜூன் 23

**திரு. மா. இராசாங்கம் :** தலைவர் அவர்களே, சுயமரியாதை கலப்புத் திருமணங்கள் முடிந்தபின் பின்தங்கிய வகுப்பினருக்குக் கிடைக்கும் சர்க்கார் சலுகைகள், உதவிப் பணம் போன்றவைகளில் ஏதாவது சிக்கல் ஏற்படுமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அப்படிப்பட்ட சிக்கல் இருந்தால் அது பரிசீலிக்கப்படும்.

## பெண்களின் திருமண வயது

* 60. வினா.—திரு. கரு. சீமைச்சாமி : மகிமைக்குரிய சட்ட கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து பின்வரும் கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பெண்களின் திருமண வயதை உயர்த்தும் உத்தேசம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் என்றால் அதன் விபரம் என்ன ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடம் இல்லை.

**திரு. கரு. சீமைச்சாமி :** குடும்பக் கட்டுப்பாடு குறித்துத் தீவிரமான பிரசாரம் செய்யப்பட்டுக் கொண்டு வருகிறது. அதனால் பெண்களின் திருமண வயதை உயர்த்தினால் ஓரளவிற்கு ஜனத் தொகைப் பெருக்கம் குறையும் என்று சொல்லப்படுகிறதே, இது சம்பந்தமாக அமைச்சர் அவர்களுடைய கருத்து என்ன ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** பெண்களுடைய திருமண வயது, பெண்களுடைய உணர்ச்சி, உடல் கட்டு இவற்றைப் பொருத்திருக்கிறது. இது அவரவருடைய விருப்பத்தை ஒட்டியது. பொதுவாக வயதில் குறைந்த பெண்களுக்குத் திருமணம் செய்வது 1929-ம் ஆண்டு சட்டப்படி தடை செய்யப்பட்டிருக்கிறது. அதற்குப் பின்னர், 1955-ம் ஆண்டு இந்துச் சட்டங்களெல்லாம் தொகுக்கப்பட்டபோது, இந்த வயது வரம்பு விதிக்கப்பட்டிருக்கிறது. மத்திய சர்க்கார், குடும்பக் கட்டுப்பாட்டுடன் இணைத்து இதைப் பரிசீலித்து வருகிறார்கள். இந்த அரசாங்கத்திடம் அது பற்றி யோசனை கேட்டால் அப்பொழுது பரிசீலிக்கப்படும்.

**திரு. டி. எஸ். ஆதிமூலம் :** இந்தக் குடும்பக் கட்டுப்பாட்டைத் தீவிரப்படுத்த வேண்டும் என்ற ஒரு முறையில்தான் இந்தக் கேள்வி என்று நான் நினைக்கிறேன். ஜில்லா போர்டு இருந்த காலத்தில், கணவனும் மனைவியுமாக ஆசிரியர்கள் இருந்தால், அவர்கள் இருவரையும் ஒரே பள்ளியில் வைத்திராமல், மலைக்கும் மடுவுக்கும் உள்ள தூரத்தைப் போல, ஆசிரியரை ஜில்லாவின் ஒரு மூலைக்கும், ஆசிரியையை இன்னொரு மூலைக்கும் மாற்றி மாற்றிப் போடுவார்கள்.



1967 ஜூன் 23]

அம்மாதிரியே இந்த அரசாங்கமும் கணவனையும் மனைவியையும் பிரித்து, ஆசிரிய ஆசிரியைகளை வெவ்வேறு இடங்களில் பிரித்து வைத்துக்கொள்ளுவதற்கு முயற்சி செய்யுமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அப்படிப்பட்ட கொடுமைகளை இந்த அரசாங்கம் செய்யத் தயாராக இல்லை.

THIRU K. VINAYAKAM : Before embarking on a legislation of this kind or before the Government take a decision to raise the age of marriage for girls, will the Government consult the girls, of this State and ascertain their opinion whether they wish to be married at a later age?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இப்போதே அரசாங்கத்திற்குப் பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவிக்கலாம். மகளிர்களுடைய பிரதிநிதிகள் இங்கு இருக்கிறார்கள். அவர்களுடைய கருத்துக்களைத் தெரிந்துகொள்ளுவதற்கு வாய்ப்பு இருக்கிறது.

**திரு. கு. கிருஷ்ணமூர்த்தி :** தாழ்த்தப்பட்ட ஜாதியில் திருமணம் செய்துகொண்ட மணமகன், மனைவியின் சம்மதமில்லாமல், மறுமணம் செய்து கொள்ளுகிறார். அந்த நிலையில் பெண்களுக்கு வசதி இல்லாத காரணத்தால் நீதி மன்றங்களுக்குச் செல்ல முடிவதில்லை. அவர்கள் நீதிமன்றங்களுக்கு செல்வதற்கு இலவசமாக வசதியளிக்க சர்க்காருக்கு உத்தேசம் உண்டா என அறிய விரும்புகிறேன்.

(பதில் இல்லை.)

**திரு. ப. மகாதேவன் :** காதலர் இருவர் கருத்தொருமித்து காதலி கருத்தறிக்கிற நேரத்தில், குறிப்பிட்ட வயது குறுக்கிடுகிற காரணத்தால், அந்தக் கல்யாணம் நடக்க முடியாதிருக்கும்போது விதி விலக்கு கொடுக்க வேண்டியிருக்கும், அல்லது குறிப்பிட்ட வயதிற்குக் கீழ் காதலிக்கக் கூடாது என்று சட்டம் இயற்ற வேண்டி வரும். இந்த நிலையில் பெண்களின் கல்யாண வயதை உயர்த்த மாட்டோம் என்று அமைச்சர் அவர்கள் உறுதி கூறுவார்களா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** காதல் வயதை மட்டும் பொருத்தது என்று இந்த அரசாங்கம் கருதவில்லை. பொதுவாக, சமுதாயத்திலே ஒரு கட்டுப்பாடு வேண்டும் என்ற எண்ணத்தில் தான் வயது நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

**திரு. தி. பொன்னுமலை :** ஐயா, கள்ளுக் கடை இருந்தால் குழந்தை கம்மியாகப் பிறக்கும் என்பது சர்க்காருடைய கவனத்திற்கு வந்திருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** கள் குடித்தால் உணர்ச்சி வேறு பக்கத்திலே கொண்டுபோகப்படும் என்று அவர்கள் கருதுகிறார்கள். அதுபற்றி ஆராய்ச்சி அரசாங்கம் நடத்தவில்லை.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** தலைவர் அவர்களே, பெண்களின் திருமண வயது, சுயமரியாதைத் திருமணங்கள் ஆகிய இந்த இரண்டையும் இந்து மதத்தினுடைய சீர்திருத்தப் பணியிலே இந்த

சட்டங்களையெல்லாம் திருத்தியமைக்க அரசாங்கத்திற்கு எண்ணம் உண்டா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இந்து மணச் சட்டத்தைச் சீர்திருத்தவேண்டும் என்ற எண்ணத்திலேதான் 1955-ஆம் ஆண்டில் பாராளுமன்றத்தில் இந்தச் சட்டம் உருவாக்கப்பட்டது. இதிலே மேலும் திருத்தங்கள் வேண்டுமென்றால், அவற்றை மாநில அரசு பரிசீலிக்கத் தயாராக இருக்கிறது. கனம் உறுப்பினரும் அவருடைய யோசனையை தெரிவிக்கலாம்.

THIRU T. MARTIN: May I request the Hon. Minister for Law to state whether the State Government has received any proposal from the Central Government regarding the age of marriage for girls?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** பத்திரிகைச் செய்தி தவிர வேறு செய்தி எங்களிடத்தில் இல்லை.

## பெருந்துறைக்குக் குடி-நீர்

*61. வினா.—திரு. செ. பாலசுப்பிரமணியன்: மதிப்பிற்குரிய பொதுச் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், ஈரோடு தாலுகாவில் காவிரியிலிருந்து பெருந்துறைக்குக் குடித் தண்ணீர் கொண்டுவரும் திட்டம் ஏற்கனவே அனுமதிக்கப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், அதை நிறைவேற்றுவதில் காலதாமதமேற்படுவதற்குக் காரணங்கள் யாவை?

(உ) அதன் மூலம் பயன் பெறும் பஞ்சாயத்துக்கள் எவை?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** (அ) ஆம்.

(இ) & (உ) கீழ்க்கண்டுள்ள பஞ்சாயத்துக்களுக்கு நீர் வழங்கும் திட்டம் ஒன்றுக்கு 1967, ஜனவரி மாதத்தில்தான் ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கு எடுத்துக்கொள்வதில் காலதாமதம் ஏதுமில்லை.—

பெருந்துறை.

கருமாண்டி செல்லிபாளையம்.

சென்னிமலை.

சித்தோடு.

குமிழம்பரப்பு.

கங்காபுரம்.

நசியனூர்.

தாதுப்பட்டி.

ஈங்கூர்.





மூகாகிப்பிடாரியூர்.

ஒற்றைப்பாறை.

அம்மாப்பாளையம்.

**திரு. செ. பாலசுப்ரமணியன்:** இக் குடிதண்ணீர்த் திட்டத்தைக் காங்கயத்திற்கு விஸ்தரிக்கும் நோக்கம் சர்க்காருக்கு உண்டா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** அது இந்தத் திட்டத்தில் சேர்க்கப்படவில்லை.

**திரு. ஈ. எம். நடராசன்:** கோவை மாவட்டம் அந்தியூர் நகரப் பஞ்சாயத்திற்குப் பவானி ஆற்றிலிருந்து தண்ணீர் கொண்டுவரப் படுமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** தனிக் கேள்வி போடவும்.

DR. H. V. HANDE: What is the amount earmarked for this scheme?

THE HON. THIRU S. J. SADIQ PASHA: The estimated cost is Rs. 42.45 lakhs installed and Rs. 1,72,000 to maintain.

**திரு. என். துரைபாண்டியன்:** நாங்குனேரிக் குடிதண்ணீர்த் திட்டம் இந்த ஆண்டில் நிறைவேற்றப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** அதற்குத் தனிக் கேள்வி வேண்டும்.

## சிதம்பரம் புதை சாக்கடைத் திட்டம்

*62. வினா.—திரு. எஸ். சிவசுப்ரமணியன்: மதிப்பிற்குரிய பொதுச் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சிதம்பரத்தில் பாதாள சாக்கடை நிறுவும் திட்ட வேலை தற்போது எந்த நிலைமையிலுள்ளது?

(இ) எப்போது முடிவு பெறும்?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** (அ) சிதம்பரம் புதைவடிகால் திட்டம் தனித்தனிக் கழிவு நீர்ப்பகுதிகளைக் கொண்ட மூன்று மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு மண்டலத்திலும் ஒரு வடி நீர் இறைக்கும் நிலையம் அமைக்கப்பட்டு வருகிறது. ஒரு மண்டலத்தில் வடிகால் திட்ட வேலை ஏறத்தாழ முடிவு பெறும் நிலையிலுள்ளது. மற்ற இரு மண்டலங்களிலும் வேலை நடைபெற்று வருகிறது.

(இ) இத்திட்டம் இந்த ஆண்டு இறுதிக்குள் முடிவு பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

[1967 ஜூன் 23

மு.ப. 10-00 DR. H. V. HANDE: What is the arrangement for the disposal of the sewage water?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தனிக் கேள்வி போடவும்.

திரு. பெ. மலைச்சாமி : தலைவர் அவர்களே, புதிதாக எத்தனை நகரங்களில் சாக்கடைத் திட்டம் அமைப்பதாக இந்த அரசு கருதியிருக்கிறது ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தனிக் கேள்வி போடவும்.

மாண்புமிகு பேரவைத்தலைவர் : வினாக்கள் விடைகள் முடிவடைந்தன.

[குறிப்பு.—ஒரு உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பட்டிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. ஒத்திவைப்புத் தீர்மானம்.

### கோவையில் பஞ்சாலைகள் மூடப்பட்டதும், தொழிலாளர் பிரச்சினையும்.

மாண்புமிகு பேரவைத்தலைவர்: அவையின் அலுவலை ஒத்திவைப்பதற்கு அனுமதி கோரி, திரு. கே. என். குமாரசாமி அவர்கள் கொடுத்துள்ள தீர்மானத்தை இப்பொழுது படிப்பார்கள்.

* திரு. கே. என். குமாரசாமி : தலைவர் அவர்களே, அவசர மானதும், பொது முக்கியத்துவம் வாய்ந்ததும், நியாயமானதுமான அடியிற்கண்ட விஷயத்தை விவாதிப்பதற்காக சபையின் அலுவல் களை ஒத்திவைக்க வேண்டுமென்று இதன் மூலம் அறிவிப்புக் கொடுக்கிறேன்.

" கோவை மாவட்டத்தில் அண்மையில் மில்கள் மூடப்பட்டு அதனால் பாதிக்கப்பட்டுள்ள 10,000 தொழிலாளரைத் தவிர, மேலும் தொழிலாளர்கள் பாதிக்கப்படுகின்ற நிலை உருவாகி யுள்ளதை விவாதிக்க ஒத்தி வைப்பு தீர்மானத்தைக் கொடுத்திருக் கிறேன்".

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நிதி ஒதுக்கும் மசோதா நிறை வேற்றப்படும் வரையில் தனி உறுப்பினர்களின் தீர்மானங்களையும், ஒத்திவைப்புத் தீர்மானங்களையும் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள நடைமுறையில் இடம் இல்லை என்பதை, ஏற்கெனவே திரு. கருத் திருமன் அவர்கள் கொண்டுவந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மீது 20—6—1967-லும், திரு. சுப்பராஜா அவர்கள் கொண்டுவந்த தீர்மானத்தின்மீது 22—6—1967-லும் தீர்ப்பு அளிக்கிறபோது, விரிவாக விளக்கப்படுத்தியிருக்கிறேன். அரசினருக்கு நிதி ஒதுக்கு கின்ற வரையில், பேரவையின் நடவடிக்கைகளைத் தள்ளிவைக்கும் தீர்மானங்கள் கொண்டுவரக் கூடாது என்பதற்கு முக்கிய காரணம் இருக்கிறது. பேரவை, நிதியைக் கொடுத்தால்தான்,



1967 ஜூன் 23]

[பேரவைத் தலைவர்]

அரசு நடைபெற முடியும். அரசினருக்குப் பணம் கொடுப்பதற் கான உரிமை பேரவைக்கு மட்டுமே இருக்கிறது. தமிழக மக்க ளால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட இப் பேரவை, நிதி ஒதுக்கிக் கொடுக்கவில்லையென்றால், அரசினரின் ஊழியர்களுக்குக் கூட ஊதியம் கொடுக்க முடியாது.

எனவேதான், நிதி ஒதுக்கும் மசோதா நிறைவேற்றப்படும் வரை, பேரவை தங்குதடையின்றி நடைபெற வேண்டும் என்பதற் காக, பேரவையின் நடவடிக்கைகளைத் தள்ளிவைக்க வேண்டு மென்ற தீர்மானம் அனுமதிக்கப்படுவதற்கில்லை. ஏனவே, பேரவைத் தலைமையுடன், இதில் ஒத்துழைக்குமாறு மாண்புமிகு உறுப்பினர் களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன். திரு. குமாரசாமி அவர்கள் கோரிய அனுமதி மறுக்கப்படுகிறது.

## 3. அறிவிப்புகள்.

### (அ) பேரவை அலுவல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, அறிவிப்பு ஒன்று உள்ளது. 22-6-67-ல் கூடிய அலுவல் ஆய்வுக்குழு 1967-68-ம் ஆண்டுக் கான மானியக் கோரிக்கைகளின் மீது வாக்கெடுப்பதற்காக, உறுப்பினர்கள் எல்லோரும் அச்சிட்டு வழங்கப்பட்டுள்ளபடி 28-6-67-லிருந்து, 15-7-67-வரை நிகழ்ச்சி நிரலைத் தீர்மானித்திருக் கிறது என்பதை அறிவிக்கிறேன்.

### (இ) 1967-ம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்த) மசோதா.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1967-ம் ஆண்டு மதுவிலக்கு (திருத்த) மசோதாவை, இந்த அவைக்குக் கொண்டுவருவதற்கு மேன்மைமிகு கவர்னர் அவர்கள் தம் இசைவைத் தெரிவித் திருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அம்மசோதாவை அறிமுகப்படுத்த பேரவையின் அனுமதியைக் கோருவார்கள்.

## 4. அரசினர் மசோதாக்கள்.

### (அ) 1967-ம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்த) மசோதா.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : 1967-ம் ஆண்டு தமிழ் நாடு மதுவிலக்கு (திருத்த) மசோதாவை அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : மசோதாவை அறிமுகப் படுத்துகிறேன்.

மாண்பமிகு பேரவைத்தலைவர்: மசோதா அறிமுகப்படுத்தப் பட்டிருக்கிறது.

3. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

**(உ) 1967-ம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்த) மசோதா.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்த மசோதா, 1967-ம் ஆண்டு தமிழ் நாடு பொது விற்பனை வரி (திருத்த) மசோதாவை இந்த அவைக்குக் கொண்டு வருவதற்கு மேன்மைமிகு கவர்னர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் அம்மசோதாவை அறிமுகப்படுத்த பேரவையின் அனுமதி கோருவார்கள்.

4. அரசினர் மசோதாக்கள்—தொடர்ச்சி.

**(இ) 1967-ம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்த) மசோதா.**

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1967-ம் ஆண்டு தமிழ் நாடு பொது விற்பனை வரி (திருத்த) மசோதாவை இந்த மன்றத்தின்முன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சித் தலைவர்களில் ஒருவர் சுருக்கமாக ஏதாவது சொல்ல வேண்டுமானால் அவர்களுக்கு அனுமதி உண்டு.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** மசோதாவை மன்றத்தின் முன் அறிமுகப்படுத்துகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மசோதா அறிமுகப்படுத்தப் பட்டிருக்கிறது.

3. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

**(ஏ) 1967-ம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்பு (திருத்த) மசோதா.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1967-ம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்பு (திருத்த) மசோதாவை இந்த அவைக்குக் கொண்டு வருவதற்கு மேன்மைமிகு கவர்னர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அம்மசோதாவை அறிமுகப் படுத்த பேரவையின் அனுமதி கோருவார்கள்.



4. அரசினர் மசோதாக்கள்—தொடர்ச்சி.

**(உ) 1967-ம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்பு (திருத்த) மசோதா.**

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, 1967-ம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்பு (திருத்த) மசோதாவை அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, மசோதாவை அறிமுகப்படுத்துகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மசோதா அறிமுகப்படுத்தப் பட்டிருக்கிறது.

**5. 1967-68-ம் ஆண்டிற்கான திருத்த வரவு-செலவுத் திட்டத்தின்மீது பொது விவாதம் (தொடர்ச்சி).**

***திரு. கா. வேழவேந்தன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, 1967-68-ம் ஆண்டு வரவு செலவுத் திட்ட நிதி நிலை அறிக்கையின் மேல் எனக்கும் பேசுவதற்கு வாய்ப்பளித்ததற்காக முதலில் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். கடந்த இருபது ஆண்டுகளாகத் தயாரிக்கப்பட்ட திட்டம் போல் இல்லாமல், இந்த வரவு செலவுத் திட்டம் ஏழை எளிய மக்களுக்கும் நடுத்தர வர்க்கத்தினருக்கும் மகிழ்ச்சியை ஊட்டுகின்ற திட்டமாக அமைந்திருக்கிறதென்பதை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்கு முக்கியமாக நான்கு காரணங்கள் இருக்கின்றன. முதற் காரணம் இந்த வரவு செலவுத் திட்டம்தான் அடிமட்டத்தில் இருப்பவர்களுக்கு நன்மை செய்வதாக இருக்கிறது. இரண்டாவது காரணம், வரி விதிப்பதிலே பொருத்தமான, புரட்சிகரமான அளவில் யார் யார் தாங்கிக்கொள்ள முடியுமோ அவர்கள் பேரிலேயும், யார் யார் தாங்கிக்கொள்ள முடியாதோ அவர்களை நீக்கியும் இருக்கும்படியான நிலைமையை இந்த வரவு செலவுத் திட்டத்திலே காண முடிகிறது. மூன்றாவது காரணம், இந்த வரவு செலவு அறிக்கையில் சமுதாய சமத்துவத்தைப்பற்றி குறிப்பான அம்சங்கள் இருக்கின்றன. நான்காவதாக, இதுவரைக்கும் இந்த மாநில அரசு மத்திய அரசின் எதேச்சாதிகாரப் போக்கைத் தட்டிக் கேட்காமல் இருந்ததைச் சுட்டிக்காட்டி, மாநில அரசுக்கும் மத்திய அரசுக்கும் உள்ள உறவு முறைகள் என்னென்ன என்பதை முதன்முதலாக தமிழக அரசுதான் எடுத்துக்காட்டி மற்ற மாநிலங்களுக்கெல்லாம் வழிகாட்டியாக இருக்கிறது. உதாரணமாக, நேற்றையதினம் ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த காங்கிரஸ் தோழர் ஒருவர், "தமிழகத்தை வழிகாட்டியாக ஏற்றுக் கொள்ளுங்கள். ஆந்திராவில் கொமிங்சாலை அமையவில்லையானால், அனிச்சலாக அறிஞர் அண்ணா வழியில் சென்று, பதவித் துறப்பு போன்ற

[திரு. கா. வேழவேந்தன்]

[1967 ஜூன் 23

தியாகங்களைச் செய்ய முன்வாருங்கள். நம் மாநில அரசு இதற்கு பின்வாங்கினால் என்னை நானே தியாகம் செய்து கொள்ளும்முறையில் தீக்குளித்துச் சாவேன்" என்று கூறியிருக்கிறார். ஆகவே தமிழகத்திலே ஏற்றி வைக்கப்பட்ட விளக்குதான் மற்றப் பகுதிகளுக்கெல்லாம் சென்றிருக்கிறது என்பதற்குச் சான்று இருக்கிறது. அடிமட்டத்தில் இருப்பவர்களுக்கு நன்மை செய்யும் வகையில்தான் தமிழக அரசு அமைந்திருக்கிறது என்று மீண்டும் கூறிக்கொள்கிறேன். "நீங்கள் புஞ்சை நிலத்திற்குத்தானே வரி நீக்கம் செய்திருக்கிறீர்கள், நஞ்சை நிலத்திற்கு வரி நீக்கம் செய்வதுதானே?" என்று காங்கிரஸ் உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். நிதி நிலை அறிக்கையை வெளியிட்ட அறிஞர் அண்ணா அவர்கள், 'இந்த நாட்டிலுள்ள பெருவாரியான மக்களின் துன்ப நிலையைப் போக்குவதுதான் அரசின் நோக்கம்" என்று குறிப்பிட்டுள்ளார்கள். இன்றைக்கு இருக்கும் 60 லட்சம் பட்டாதாரர்களில் 40 லட்சம் பேர்களுக்கு வரி நீக்கப்பட்டிருக்கிறது.

(மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர் தலைமை.)

ஆகவே, தமிழகத்தில் இருக்கிற நூற்றுக்கு எழுபத்தைந்து விவசாயிகளுடைய துன்பம் துடைக்கப்பட்டிருக்கிறது. அதை மனதில் கொள்ளவேண்டும். தஞ்சையிலே நஞ்சை நிலத்தை வைத்து இருப்பவர்களால் கொஞ்சம் வரியைத் தாங்கிக் கொள்ள முடியும். நல்ல நீர்ப்பாசன வசதியைக் கொண்டுள்ள பூமியை வைத்திருப்பவர்களால் கொஞ்சம் வரியைத் தாங்கிக்கொள்ள முடியும். ஆனால் கம்பையும், கேழ்வரகையும், சோளத்தையும் பயிரிடுகிற ஏழை எளிய விவசாயிகளின் துன்பம் துடைக்கப்பட வேண்டுமென்று திராவிட முன்னேற்றக் கழக அரசு கருதிய காரணத்தினால்தான் முதலில் புஞ்சை நிலத்திற்கு விதிக்கப்பட்டு வந்த வரியை நீக்கியிருக்கிறது. கம்பஞ் சோற்றையும், கேழ்வரகுக் கூழையும் சாப்பிட்டு வருகிற ஏழை எளிய விவசாயிகளின் மாட்டைக் கணக்குப்பிள்ளை வந்து ஓட்டிப் போகமாட்டான்; கணக்குப்பிள்ளை வந்து கலப்பையைத் தூக்கிப் போகமாட்டான் என்கிற நிம்மதியுடன் மூச்சுவிடுகிற நிலையை இந்த அரசு ஏற்படுத்தியிருக்கிறது. அதே சமயத்தில் புஞ்சைக் காடுகளை வைத்துள்ள பெருநிலக்காரர்கள் தாங்கக்கூடிய அளவு அவர்களுக்கு விளைந்து வருமானம் வந்தால் வரி, இல்லையென்றால் இல்லை என்கிற முறையில் விவசாய வருமான வரியை விதிக்கவும் வகை செய்திருக்கிறது. மேலும் ஏழை, நடுத்தர மக்களின் குழந்தைகளுக்குப் புகுமுக வகுப்பில் வருமான வரம்பை வைத்து கல்விச் சலுகை அளிக்கவும் முன்வந்திருக்கிறது. அடிமட்டத்தில் இருக்கிற வியாபாரிகளுடைய துன்பத்தைத் துடைப்பதற்காக பத்தாயிரத்திற்கு மேல் வரி என்று இருந்ததை 15 ஆயிரத்திற்கு மேல் என்பதாக வரம்பை உயர்த்திக் கொடுத்திருக்கிறது. இவற்றை எல்லாம் பார்த்தால் ஏழை நடுத்தர விவசாயிகள், ஏழை நடுத்தர வியாபாரிகள், ஏழை மக்கள் ஆகியவர்



1967 ஜூன் 23]

[திரு. கா. வேழவேந்தன்]

களுக்கு இந்த அரசு மிகப் பெரிய நன்மையைச் செய்திருப்பதை எல்லோரும் நடுநிலையில் இருந்து கவனிக்கிறபோது உணர்ந்து கொள்ள முடியும். 1967 பிறந்த பின்னால் தமிழகத்திற்கான வரவு செலவுத் திட்டத்தைத் திராவிட முன்னேற்றக் கழக அரசு தயாரித்து சமர்ப்பித்திருக்கிறது. தேசம் முழுவதற்குமான பட்ஜெட்டை காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மத்திய அரசும் தயாரித்து சமர்ப்பித்திருக்கிறது. மத்திய அரசு தேயிலைக்கு வரி போட்டார்கள். அதன் காரணமாக எட்டு பைசாவுக்குத் தேனீர் அருந்தி வந்த ஏழை எளிய மக்கள் இன்றையதினம் பத்துப் பைசா, பன்னிரண்டு பைசா கொடுக்க வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். நாமோ மதுபானப் பொருள்களுக்கு வரி போட்டோம். இதன் காரணமாக அந்த வரியைத் தாங்கக்கூடியவர்கள் கோமான்களும், சீமான்களுமே ஆவார்கள்; ஏழை மக்கள் பாதிக்கப்படவில்லை. மத்திய அரசு இன்றையதினம் செருப்புக்கு வரி போட்டிருக்கிறார்கள். காலணிக்கு வரி போட்டிருக்கிறார்கள். நாம் காருக்கு வரியை உயர்த்தியிருக்கிறோம். கார் வாங்கக்கூடிய நிலையில் உள்ளவர்கள் யார் என்பது உங்களுக்குத் தெரியும். இன்றையதினம் மத்திய அரசு நடுத்தர மக்கள் பாதிக்கப்படுகிற நிலையில் காப்பிக்கு வரி போட்டிருக்கிறார்கள். நாம் ரெப்ரிஜேட்டர்களுக்கு வரி போட்டிருக்கிறோம். மத்திய அரசின் வரித் திட்டங்கள் எல்லாம் ஏழை நடுத்தர மக்களை உருக்குலைப்பதாக உள்ளன. நாமோ வரி போட்டால் தாங்கும் சக்தி எங்கே இருக்கிறது என்று பார்த்து விதித்துள்ளோம். "எட்டு குஞ்சை அடித்தாலும் சட்டிக்கு வராது" என்பது தமிழ்நாட்டில் உள்ள பழமொழி. அப்படி நடுத்தர ஏழை எளிய மக்களின் நெஞ்சை முறிக்கும் மத்திய அரசின் வரித்திட்டங்களினால் கிடைக்கக்கூடிய லாபம் பெரும் அளவுக்கு இல்லை. இருந்தாலும் வாழ்க்கையில் அடிமட்டத்தில் இருக்கக்கூடியவர்களைத்தான் அவர்கள் தாக்குகிறார்கள். தாங்கக்கூடியவர்களிடம் போகவில்லை. இதிலிருந்தே நம்முடைய வரவு செலவுத் திட்டத்திற்கும், மத்திய அரசுத் திட்டத்திற்கும் உள்ள வேற்றுமையை நாம் உணர்ந்துகொள்ள முடியும்.

வரவு-செலவுத் திட்ட அறிக்கையில் கலப்புத் திருமணத்திற்கு ஊக்கம் அளிக்க முதல் அமைச்சர் செய்துள்ள ஏற்பாட்டை எல்லோரும் ஒப்புக்கொள்கிறார்கள். கவி பாரதியும், புரட்சிக் கவிஞர் பாரதிதாசனும் கண்ட கனவை இந்த அரசு நினைவாக்க முன்வந்திருக்கிறது. "சாதிகள் இல்லையடி பாப்பா, உயர் தாழ்ச்சி, இகழ்ச்சி சொல்லல் பாவம்" என்பதாகப் பாரதியார் சொன்னார்கள். அவர்கள் இன்றையதினம் இருந்திருந்தால் கலப்புத் திருமணம் செய்துகொள்பவர்களுக்கு இந்த அரசு பொற்பதக்கம் அளிக்கும் என்கிற செய்தியைக் கேட்டு நன்றி சொல்வார்கள். "கோரிக்கை அற்றுக் கிடக்குதண்ணே, வேரில் பழுத்த பலா" என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் வாழ்வு இழந்து நிற்கும் விதவைகளின் [illegible]

கண்டு விதவைத் திருமணம் நடைபெறுதிருப்பதைக் கண்டு மனம் நொந்து பாடினர்.

**திரு. கரு. சீமைச்சாமி:** சார் ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். முக்குலத்தோர் சமூகத்திலே விதவைத் திருமணம் நடைபெற்றே வருகிறது என்று குறிப்பிட விரும்புகிறேன்.

**மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர்:** இது ஒழுங்குப் பிரச்சினை ஆகாது.

**திரு. கா. வேழவேந்தன்:** கலப்புத் திருமணம் செய்து கொள்பவர்களுக்குப் பொற்பதக்கம் அளிக்கப்படும் என்பதில் என்ன சிறப்பு இருக்கிறது என்று கேட்டார்கள். கலப்புத் திருமணம் செய்துகொள்பவர்களில் வசதி படைத்தவர்கள் இருக்கலாம். இல்லாதவர்களும் இருக்கலாம். நாயுடு வகுப்பைச் சேர்ந்த ஆசிரியர் ஒருவர், முதலியார் வகுப்பைச் சேர்ந்த ஆசிரியை ஒருத்தியைத் திருமணம் செய்து கொள்ளலாம். இதில் வேடிக்கை என்னவென்றால் அவர்களைப் பொறுத்து என்னவோ மகிழ்ச்சியான வாழ்வு இருக்கக்கூடும், ஆனால் அவர்களுடைய திருமணத்துக்குப் பிறகு அவர்களுடைய உறவினர்களின் திருமண விழா எதற்கும் அவர்கள் போக முடியாது. அதற்கு மேல் சமுதாயத்தில் விழா என்பதே அவர்களுக்கு இல்லாமல் ஆகிவிடுகிறது. அப்படியில்லாத ஒரு நிலையை—சமூகத்தால் அவர்கள் புறக்கணிக்கப்படுகிற நிலையை மாற்றி—அவர்களுக்கு ஒரு மறுமலர்ச்சி அளிப்பதுபோல அரசே அவர்களைக் கௌரவிக்க முன்வந்திருப்பது ஒரு தனிச் சிறப்புடையதாகும்.

இன்றையதினம் மத்திய அரசைப்பற்றி திராவிட முன்னேற்றக் கழகம் பேசுகின்ற நேரத்தில் எல்லாம் காங்கிரஸ்காரர்கள், "மத்திய அரசின் மீதே குற்றம் சுமத்துகிறீர்களே" என்று கேட்கிறார்கள். நான் அவர்களுக்கு ஒரே ஒரு காரணத்தை, சிறப்பான காரணத்தைச் சொல்ல விரும்புகிறேன். இன்றையதினம் நாம் வரவு செலவுத் திட்டத்தைச் சமர்ப்பித்திருக்கிறோம். ஒருநூறு கோடிக்கான வரவு செலவுத் திட்டமாகச் சமர்ப்பித்திருக்கிறோம். சேலம் இரும்பாலைத் திட்டத்தையும், தூத்துக்குடி துறைமுகத் திட்டத்தையும் மத்திய அரசு நிறைவேற்ற முன் வந்தால் அவற்றுக்காக மட்டும் 300 கோடி ஒதுக்கலாம். ஆண்டு முழுவதும் நம் தமிழக மக்களைப் பிழிந்தெடுத்து நாம் பெறுகின்ற வரி 200 கோடிதான். ஆனால் இதுபோல் ஒன்றரை மடங்கு மதிகமான தொகையில் அந்தத் திட்டம் அமைந்திருக்கிறது. ஆகவேதான் அந்தத் திட்டத்தைப் பெறுவதற்குப் பதவி யாகிய பழத்தைக்கூடப் பரிசாகக் கொடுக்கத் தயாராய் இருக்கிறோம் என்று தெரிவித்துக்கொள்கிறோம். எப்படியாவது அந்தத் திட்டத்தைப் பெற்றுத் தருவோம்; லட்சோபலட்சம் வாலிபர்களுக்கு வேலைவாய்ப்புப் பெற்றுத் தருவோம் என்று சொல்லியிருக்கிறார்கள். இப்படிச் சொல்கிறபோது காங்கிரஸ் உறுப்பினர் ஒருவர் இது ஒரு 'பொலிடிகல் ஸ்டன்ட்' என்று குறிப்பிட்டார்கள். மேற்கு வங்காளத்தில் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த



பி. ஸி. ராய் முதல் அமைச்சராக இருந்தபோது—மத்திய சர்க்கார் அங்கே எண்ணெய் சுத்திகரிப்பாலையை வைக்கத் தவறினால் பதவியைத் துறப்பேன், கறுப்புக்கொடியை எல்லா இடங்களிலும் நாட்டுவேன் என்று சிங்கம்போல் கர்ஜித்தாரே அதற்குப் பிறகுதானே அவர்கள் பணிந்தார்கள். அதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். ஆகவே இன்றையதினம் கொஞ்சம் கன்மான உணர்ச்சிமட்டும் நமக்கும் இருக்குமானால் சேலம் இரும்பாலைத் திட்டத்தைக் கொணடுவர தூத்துக்குடி துறைமுகத் திட்டத்தைக் கொண்டுவர —மத்திய சர்க்கார் இணங்காவிட்டால் போராட்டத்தை நடத்தியாக வேண்டும். இது பொலிடிகல் ஸ்டன்ட் அல்ல, இருபது ஆண்டுக்காலமாகவே நாம் மத்திய அரசின் முன்வைத்து வந்துள்ள நம்முடைய உயிர்நாடியான பிரச்சினை. இதனைப் பெறுவதற்குத் தமிழகத்தில் உள்ள அத்தனை அரசியல் தலைவர்களும் ஒன்று சேர்ந்து போராட முன்வந்தால்தான் மத்திய அரசின் செவிப்பறையில் இந்த முழக்கம் விழும் என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். இதற்காகப் பதவித் துறப்பு என்பது—பதவிக்கு வந்த 3 மாதங்களில் எங்களுக்கு இந்தப் பதவி அலுத்துப்போய் விட்டது என்பதால் அல்ல, பல காலம் பதவியில் இருந்துவிட்டால் போதும் என்று தப்பித்துக்கொள்வதற்காகவும் துறக்கும் நிலையில் அல்ல. இன்றைய தினம் மத்திய அரசின் பொறுப்பில் இருக்கிற எல்லா நிறுவனங்களும் ஒழுங்காக நடக்கின்றன என்று சொல்ல முடியாது. பொறுப்பற்ற முறையில் காரியங்கள் நடந்து போவதை நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். மத்திய அரசின் பொறுப்பில் நெய்வேலி நிலக்கரித் திட்டமும், நெய்வேலி உர உற்பத்தித் திட்டமும் தமிழகத்தில் இருக்கின்றன. நான் கேள்விப்படுகின்ற வகையில் பார்த்தால், நெய்வேலியிலே உற்பத்தியாகிற யூரியா 100 மடங்கு என்றால் அதிலே 30 மடங்கு மத்திய அரசைச் சேர்ந்த கார்ப்பரேஷன் எந்த மாநிலத்திற்கும், எந்த விலைக்கும் விற்று விடலாம் என்ற நிலைமை இருக்கிறது, மீதி இருக்கின்ற 70 மடங்கைத் தமிழகத்திற்குக் கொஞ்சமும், மற்ற மாநிலங்களுக்குக் கொஞ்சமும் கொடுக்கிற ஒரு நிலைமை இருப்பதாகத் தெரிகிறது. இப்படி 30 மடங்கை மற்றத் தனிப்பட்ட ஏஜெண்டுகள் மூலமாக விற்பனை செய்கின்ற காரணத்தால்தான், தமிழ்நாட்டிலே விவசாயிகளுக்கு உண்மையாக உழைக்கின்ற விவசாயிகளுக்கு உரம் கிடைக்கவில்லை, ஆனால் கள்ளமார்க்கட் காரர்களுக்கும் மற்ற வியாபாரிகளுக்கும் கிடைக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. எனவே மத்திய அரசினுடைய ஸ்தாபனத்தின் இப்படிப்பட்ட திட்டத்தினால்தான் கள்ளமார்க்கட் வளருகின்ற நிலைமை இருக்கும்பொழுது காங்கிரஸ்காரர்கள் மேடைக்கு மேடை பேசி வருகிறார்கள், திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்த பிறகு உரம் கிடைக்கவில்லை, உரத்தின் விலை அதிகமாகிவிட்டது என்பதுபோன்ற பச்சையான பொய்யைச் சொல்லி வருகிறார்கள். உரத்தினுடைய விலையை நிர்ணயிக்கின்ற உரிமை மத்திய அரசினுடைய கையில் இருக்கிறது. இதை எல்லாம் பார்க்

[திரு. கா. வேழவேந்தன்]

கின்ற நேரத்தில் மத்திய அரசு அதனுடைய பொறுப்பை உணர்ந்து மாநிலத்திற்குச் செய்யவேண்டிய கடமைகளை உணர்ந்து செய்தால்தான் நியாயமானதாக இருக்கும் என்பதால்தான், அதற்கான கிளர்ச்சிகள்பற்றி அறிவிக்கப்படும் பொழுது எல்லாத் தலைவர்களும் அதைப் பாராட்டுகிறார்கள். ஆகவே அதைக் காங்கிரஸ்காரர்களும் பாராட்டுவதுதான் நியாயமானதாக இருக்கமுடியும். இந்த நிதிநிலை அறிக்கையைப் பொறுத்தவரையில் நாட்டிலே உள்ள ஏழை எளியவர்களும், நடுத்தர வர்க்கத்தினரும், பாட்டாளி மக்களும் வரவேற்று மகிழ்ச்சியாக இருக்கின்ற காரணத்தினால்தான் ஊருக்கு ஊர் நிதிநிலை அறிக்கையை மேடைதோறும் மக்கள் படித்துக்காட்டிக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் வரவேற்கின்ற நிலையில் காங்கிரஸ்காரர்களும் வரவேற்றிருக்கவேண்டும். இதை அனைவரும் பாராட்டுகின்ற முறையிலே போற்றிவருகின்ற சூழ்நிலை உருவாகியிருக்கிறது. நன்மையைச் செய்கின்ற வேளையிலே கிண்டல் செய்து கொண்டிருக்காதீர்கள். நீங்களும் இதை நன்குணர்ந்து பாராட்டமுற்படுங்கள் என்று கேட்டுக்கொண்டு, எனக்குப் பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்தமைக்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துகொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர்:** உறுப்பினர்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுக்க விரும்புகிறேன். இருபத்து நான்கு உறுப்பினர்கள் இன்றைக்கு இங்கே பேசவேண்டுமென்று பெயர் கொடுத்திருக்கிறார்கள். இரண்டு மணி வரையில் அவையின் நேரத்தை வைத்துக் கொண்டாலும் கூட, பத்து நிமிடத்திற்கு மேல் உறுப்பினர்கள் எடுத்துக்கொள்ளக்கூடாது. ஆகவே ஒவ்வொரு உறுப்பினரும் 10 நிமிடத்திற்குள் பேசிவிடவேண்டும் என்பதைக் கண்டிப்பாக மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

***திரு. என். எஸ். வி. சித்தன்:** சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் முதலாவதாக எனக்குப் பேசுகின்ற வாய்ப்பை அளித்தமைக்கு நான் என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த மாமன்றத்தினுடைய ஆய்வுக்கும் ஒப்புதலுக்கும் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட 1967–68-ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுத் திட்டத்தின்மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்த அமைச்சரவை பொறுப்பு ஏற்றதற்குப் பின்னர், அமைச்சர்கள் கடந்த 3 மாதங்களாகக் கூட்டங்களிலேயும், நிகழ்ச்சிகளிலேயும் என்ன பேசினார்களோ அந்தப் பேச்சுக்களின் சுருக்கமாகவே இந்த வரவுசெலவுத் திட்ட அறிக்கையும் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். முதலமைச்சர் அவர்கள் தென் சென்னையிலிருந்து தேர்ந்தெடுக்கப்





[திரு. என். எஸ். வி. சித்தன்]

பட்டவர்; டெல்லி பாராளுமன்றத்திற்குச் சென்றிருந்தால் அங்கே என்ன பேசியிருப்பார்களோ அந்தப் பேச்சின் தொனியைத்தான் இந்த நிதி நிலை அறிக்கையிலே என்னால் கேட்க முடிந்தது. இதைத் தமிழ்நாட்டுக்காகப் போடப்பட்ட பட்ஜெட் என்று சொல்வதற்குப் பதிலாக, சென்னை நகரத்தின் பட்ஜெட் என்றே சொல்லிவிடலாம். ஏனெனில், சென்னை நகரத்திற்கு நன்மைகள் செய்யக்கூடிய வகையிலேதான் பட்ஜெட் தயார் செய்யப்பட்டிருக்கிறதே தவிர, தொலை தூரத்திலே அல்லும் பகலும் அனவரதமும் பாடுபடுகின்ற, உழைக்கின்ற பாமர மக்களுக்கு, எந்தவிதமான நல்ல காரியங்களும் செய்வதற்கான வழிகள் இந்த பட்ஜெட்டிலே சொல்லப்படவில்லை.

முதலமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கையிலே மதுவிலக்கைக் கண்டிப்பாக அமல் செய்யவேண்டுமென்று சொல்லியிருக்கின்ற கருத்தை நான் வரவேற்கிறேன்.

காங்கிரஸ் கட்சிக்காரர்கள் ஆட்சிக்கு வந்திருந்தால் நிலவரியை நிச்சயமாக ரத்து செய்து இருப்பார்கள். இந்த நிதிநிலை அறிக்கையிலே புஞ்சை நிலத்திற்கு வரியை ரத்துசெய்ததற்கு நான் பாராட்டைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் இந்த அரசாங்கம் நஞ்சை நிலத்திற்கும் வரியை ரத்துசெய்து இருக்க வேண்டும். ஏனென்றால் மிக அதிகமான அளவில் புன்செய் நிலங்களும், தோப்புகளும், விளைச்சல் நிலங்களும் வைத்திருப்போருக்கு வரியை ரத்து செய்துவிட்டு 1 ஏக்கர் அல்லது ½ ஏக்கர் விளைச்சல் நிலம் வைத்திருக்கின்றவர்கள்கூட வரியைச் செலுத்த வேண்டுமென்று ஆணையிடுவது சமுதாய நீதியாகாது. அதோடு மட்டுமல்ல, விவசாய வருமான வரியை நிர்ணயிப்பதற்காக விவசாயிகள் கணக்குகளை வைத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்வது மிகவும் அநீதியான முறை என்பதையும் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன். கணக்கு எழுதுவதில் சிக்கலான முறைகள் இருப்பதால், வணிகர்களுக்கு அதைப் போக்கக்கூடிய முறையில் உடன்பட்டு வரி செலுத்தும் வரம்பை 50 ஆயிரத்திலிருந்து 75 ஆயிரமாக உயர்த்தியிருக்கிறார்கள். ஆனால் அதே நேரத்திலே பாமர மக்களாக இருக்கின்ற விவசாயிகளுக்கு சிக்கலை உருவாக்கக்கூடிய முறையில் கணக்குகளை வைத்துக்கொள்ளவேண்டுமென்று சொல்வது சரியாகாது. படித்தவர்கள் பட்டம், பதவி, பிறதொழில்கள் என்று சென்றுவிடும்போது பெரும்பாலும் படிக்காத உழவர்களைக் கணக்குகளை வைத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்வது முறையாகாது. விவசாயிகளுக்குக் கடன் காலதாமதம் இல்லாமல் விரைவாகக் கிடைக்க வழிகள் செய்யவேண்டும். விவசாயிகள் பெறுகின்ற கடன்களுக்குத் தவணைகளை அதிகமாக்கவேண்டும். அவர்கள் கடன்பெற்றால் 20 ஆண்டுகள் வரை தவணைகள் கொடுத்து உதவ வேண்டும்.

[திரு. என். எஸ். வி. சித்தன்]

இப்பொழுது இருக்கின்ற இந்த அரசாங்கம் அவர்களுடைய தேர்தல் அறிக்கையில் சொன்னது போன்று விவசாயிகளின் நலனை மனதில்கொண்டு பயிர்த்தொழில், கால்நடை பராமரிப்பு போன்றவற்றிற்கு இன்ஷ்யூரன்ஸ் பாதுகாப்புத் திட்டத்தைக் கொண்டுவர வேண்டும்.

அடுத்து 75 மைல்களுக்கு மேலே உள்ள வழித்தடங்களை அரசாங்கம் ஏற்று பஸ் விடுகின்ற திட்டத்தையும் வரவேற்கிறேன். ஆனால் அரசாங்கம் ஏற்று நடத்துகின்றபொழுது இப்பொழுது அங்கங்கே வேலை செய்கின்ற டிரைவர்கள், கண்டக்டர்கள், வேலைத் திறமையுள்ள மெக்கானிக்குகள் இவர்களையெல்லாம் அரசே வேலையில் அமர்த்திக்கொள்ள தக்கான முயற்சியில் ஈடுபட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்தத் தடங்களில் ஓடிக்கொண்டிருந்த பஸ்களுக்குக் கட்டாயம் நஷ்ட ஈடு கொடுக்க வேண்டும்.

அடுத்ததாக படியரிசித் திட்டம் வரவேற்கத் தகுந்த திட்டம் தான். திராவிட முன்னேற்றக் கழகத்தினர் தேர்தலின்போது வாக்குறுதியளித்தபடி எல்லா பகுதிகளுக்கும் அந்தத் திட்டத்தை உடனடியாகக் கொண்டுவரவேண்டும். மற்றப் பகுதிகளுக்கு அந்தத் திட்டம் இல்லாமல், குறிப்பிட்ட பகுதிகளுக்கு மட்டும் அந்தத் திட்டத்தை வைத்திருப்பது மற்றப் பகுதிகளை மாற்றாந்தாய்ப் பிள்ளைகளாகப் பாவிக்கின்ற முறையாக இருக்கிறது. மாநிலத்தின் மற்றப் பகுதிகளுக்கும் உடனடியாகக் கொண்டுவர வேண்டும்.

விலைவாசிகளை எடுத்துக்கொண்டால் ஒரு குவிண்டால் புளி ரூ. 150 ஆக இருந்தது. இன்றைக்கு 300 ரூபாய் அளவிற்கு விற்கிறது. அதேபோல் துவரம் பருப்பு 95 ரூபாய் என்ற அளவில் முன்பு விற்றது. இப்பொழுது 190 ரூபாய்க்கு ஏறிவிட்டது. உளுத்தம்பருப்பு 130 ரூபாய்க்கு விற்றது. இப்பொழுது 230 ரூபாய் அளவிற்கு விற்கிறது. விலைவாசிகள் உயர்வினால் பொருளாதாரத்தில் மிகவும் அடித்தளத்திலே இருப்பவர்கள், மாதச் சம்பளம் வாங்குகின்றவர்கள் எல்லாம் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். தேர்தலுக்கு முன்னால் அளித்த வாக்குறுதியைப் போல் அரசு விலைவாசிகளைக் குறைப்பதற்கு முயற்சியெடுக்க வேண்டும். 1967–68-ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் 61-வது பக்கத்திலே, "விலைகளைக் குறைத்து நிலைமையைச் சரிப்படுத்தும் வலிமையை இந்திய அரசியல் சட்டம் மாநில அரசுகளுக்கு அளித்திடவில்லை" என்று முதலமைச்சர் சொல்லியிருக்கிறார்கள். தேர்தல் காலத்திலே விலைவாசிகளைக் குறைப்போம் என்று சொல்லிவிட்டு, இப்பொழுது விலைவாசியைக் குறைக்காமல் மத்திய அரசின் மேல் பொறுப்பைப் போட்டுத் தப்பித்துக்கொள்வது முறையாகாது. இது மக்களின் கவனத்தைத் திசை திருப்புவதாகும். உடனடியாக இந்த அரசு விலைவாசிகளைக் குறைப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

V211,31 N67



N67.2-5



[திரு. என். எஸ். வி. சித்தன்]

65002

அடுத்ததாக வரிப் பிரச்னையைப்பற்றிச் சொல்ல விரும்புகிறேன். தேர்தல் அறிக்கையிலே திராவிட முன்னேற்றக் கழகத்தினர் 5-வது பக்கத்திலே 15-வது வரியிலே, "வரிப் பளுவின் கொடுமை அதிகரிப்பதை எதிர்த்தும், மறைமுக வரிகளின் ஏற்றத்தால் மக்கள்படும் அல்லலைச் சுட்டிக்காட்டியும் அரசாங்கத்தின் வரி விதிப்புக் கொள்கையை திராவிட முன்னேற்றக் கழகம் கண்டிக்கிறது" என்று சொல்லியிருக்கிறார்கள். மேலும், அவர்கள் மேடைகளிலே பேசுகின்றபொழுதெல்லாம் தாங்கள் ஆட்சிக்கு வந்தால் 40 சதவீதம் வரியைக் குறைத்து 60 சதவீதம் வசதியைப் பெருக்குவோம் என்று சொல்லியிருக்கிறார்கள். காங்கிரஸ்காரர்கள் ஆட்சியில் போடப்படாத வரிகள் ஜனவரியும், பிப்ரவரியும்தான் என்று அப்பொழுது சொன்னார்கள். ஆனால் இப்பொழுது அவர்களுடைய நிதிநிலை அறிக்கையின் 15-வது பக்கத்திலே பார்த்தால் "வரவினமும் செலவினமும் ஊசி முனையிலே சமன் செய்யப்படும் இடர்ப்பாடான இவ்வேலையில், வருவாய் எந்தவிதத்தில் குறைந்தாலும் அந்த இழப்பை வரியை உயர்த்துவதன் மூலமாகத்தான் ஈடுகட்டமுடியும்" என்று சொல்லியிருக்கிறார்கள். இந்த ஞானோதயம் இப்பொழுதாவது ஏற்பட்டிருப்பதை அறிந்து நான் மகிழ்ச்சியடைகிறேன். இந்த அரசு வரியை உயர்த்தியிருப்பதால்தான் விலைவாசிகள் உயர்ந்திருக்கின்றன. ஏழை மக்கள் உபயோகப்படுத்தக்கூடிய நிலக்கடலையின் மேல் வரி 1½ சதவீதத்திலிருந்து 2 சதவீதமாக உயர்த்தியிருப்பது அவர்களை மிகவும் பாதிக்கும். அதேபோல் நிலக்கடலை எண்ணெய்க்கும் 2½ சதவிகிதத்திலிருந்து 3 சதவிகிதத்திற்கு உயர்த்தியிருப்பது நடுத்தர மக்களைப் பாதிக்கக்கூடியது. ஆகவே நிலக்கடலைக்கு முன்பு இருந்த வரியையே போடுவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தியாவிலேயே தமிழகத்திலேதான் நிர்வாகம் சிறந்த முறையில் செய்யப்படுகிறது என்ற நிலைமை இருக்கின்றது. ஆகவே அதை ஊக்குவிக்கின்ற முறையில் அரசிதழ் பதிவிலாத் உத்தியோகஸ்தர்களுக்கு சம்பள உயர்வு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு காவல் துறையிலே நடந்துள்ள சில நிகழ்ச்சிகளைக் குறிப்பிட விரும்புகிறேன். என்னுடைய மாவட்டத்திலே தேனிக்குப் பக்கத்திலே உள்ள வெங்கடாசலபுரத்திலே இங்கே உள்ள சட்டமன்ற உறுப்பினர் ஒருவர் பேசிய கூட்டத்திலே குழப்பம் செய்தார்கள் என்று குற்றஞ்சாட்டி அங்கேயுள்ள இளைஞர் காங்கிரஸ் தோழர்கள் 6 பேர்களை விலங்கு மாட்டி நடத்திச் சென்றிருக்கிறார்கள் அங்கேயிருக்கின்ற போலீஸ்காரர்கள். அதுமட்டுமல்ல, அவர்களைப் பொறுப்பிலே விடுவதற்கு மறுத்து காவல் நிலையத்தில் தொல்லை கொடுத்திருக்கிறார்கள். இதனால் அப்பகுதி மக்கள் மனு கொடுத்திருக்கிறார்கள். எனவே, இதுபோன்ற அநீதிகள் இனியும்

[திரு. என். எஸ். வி. சித்தன்]

நடைபெருது இருக்க தக்க நடவடிக்கைகளை எடுக்கும்படி இந்த அரசினைக் கேட்டுக்கொள்கிறேன். மதுரையிலே காங்கிரஸ் கட்சி நடத்திய கூட்டங்களில் அமைச்சர்களைத் தாக்கிப் பேசக்கூடாது என்று எழுதி வாங்கிக் கொண்டு கூட்டம் நடத்துபவர்களுக்கு அனுமதி கொடுத்திருக்கிறார்கள் காவல்துறையினர். ஜனநாயகம் தழைக்க வேண்டுமென்று சொல்லுகின்ற சர்க்கார் இதுபோன்ற ஜனநாயக மரபுகள் மீறப்படுகின்ற நிலையைப் போக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

திருமங்கலம் நகரத்தைப் பொறுத்தவரை குடிதண்ணீர்ப் பிரச்சினை அந்தப் பகுதி மக்களைப் பாதிக்கக் கூடியதாக இருக்கிறது. இதற்காக முன்பு இருந்த அரசு ஒரு குடி-தண்ணீர்த் திட்டத்தை வகுத்தது. அந்தத் திட்டத்தை இந்த நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் ஆண்டிலேயே எடுத்துக்கொண்டு நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். திருமங்கலம் பகுதி விவசாயத்தில் மிகவும் பின் தங்கி இருக்கிறது. ஆகவே, வைகைக் கால்வாயைத் திருமங்கலம் வரை விஸ்தரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இறுதியாக நிதி நிலை அறிக்கையின் 6-வது பக்கத்தில் மாண்புமிகு முதலமைச்சர், “இந்த அரசு எந்தக் கொள்கைகளை மக்கள் முன் வைத்து, இம் மாநில ஆட்சியை ஏற்று நடத்தும் பொறுப்பை மேற்கொண்டதோ அக் கொள்கைகளை உளமாரச் செயல்படுத்த வேண்டுமென்பதுதான் இந்த அரசின் உறுதியான நம்பிக்கை” என்று கூறியிருப்பதை வெறும் வாயளவில் மட்டுமல்லாமல் செயலிலும் காட்டவேண்டும் என்று கூறி இந்த அளவில் என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

* திரு. டி. இராசரத்தினம் : துணைத் தலைவர் அவர்களே, 1967-68-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கை மீது எனக்குப் பேச வாய்ப்பளித்தமைக்காக முதலில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கை, கொடுக்கக் கூடியவர்களும் வசதி படைத்தவர்களும் அரசுக்கு வரி கொடுக்கின்ற வகையில் ஏழை எளியவர்களுக்குச் சுமை ஏதும் இல்லாமல் தயாரிக்கப்பட்ட அறிக்கையாகும். புஞ்சை நிலங்களுக்கு வரியை நீக்கிவிட்டதன் காரணமாக விவசாயப் பெருங்குடி மக்கள் பெரிதும் மகிழ்ச்சியடைகின்ற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. புஞ்சை நிலத்தில் இயற்கையை நம்பித்தான் விவசாயம் செய்யவேண்டியிருக்கிறது. இயற்கை தவறிவிட்டால் வரி வஜா செய்து தரவேண்டுமென்று கேட்கக் கூடிய நிலை இருந்தது. அவ்வாறு கேட்பது ஒரு சம்பிரதாயமாகவே இருந்தது. தற்போது புஞ்சை நிலங்களுக்கு அறவே வரி இல்லை என்று அறிவித்ததன் காரணமாக விவசாயிகள் பெரிதும் மகிழ்ச்சியடைகிறார்கள்.



[திரு. டி. இராசரத்தினம்]

முன்பு உர விநியோகம் கூட்டுத் துறையிலும் தனியார் துறையிலும் கொடுக்கப்பட்டு வந்தது. கூட்டுத் துறையில் கொடுக்கின்றபோது சரியான முறையில் பகிர்ந்து கொடுக்க முடியாது போயிற்று. இனிமேலாவது ஒழுங்கான முறையில் கொடுக்க வழி செய்யவேண்டும். பஞ்சாயத்து யூனியன்கள் கிராம சேவக்குகள் மூலமாகப் பகிர்ந்து அளித்தால் எல்லா விவசாயிகளுக்கும் ஒழுங்காக உரம் கிடைக்கும். ஏற்கனவே உரத்தினைத் தனியார் துறைக்கு 30 சதவிகிதம் வரை கொடுத்திருப்பதால் அவர்கள் கள்ள மார்க்கட்டை உருவாக்குகிறார்கள். ஆகவே மத்திய அரசாங்கம் தரக்கூடிய உரத்தை நேரடியாக மாகாண சர்க்காருக்கே கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

விவசாயத்தைச் சிறப்பாகச் செய்வதுபற்றி அறிய அதிகாரிகளை வெளிநாடுகளுக்கு அனுப்புகிறார்கள். அவ்வாறு அனுப்புகிறபோது விவசாயிகளையும் அவர்களுடன் சேர்த்து சமமாக அனுப்பினால் விவசாயத்தைப் பெருக்க வழி ஏற்படும். விவசாயத்திற்காகப் பட்டா வழங்கப்பட்ட மனைகளில் விவசாயம் செய்யாமல் மனையாக மாற்றுவதற்காக விற்று விடுகிறார்கள். சட்டத்திற்குப் புறம்பாக விவசாய நிலத்தை குடிமனையாக மாற்றுகிறபோது அந்த நிலத்தை அரசாங்கமே கைப்பற்றி அந்த நிலத்தை விவசாயம் செய்பவர்களுக்குப் பட்டா செய்து கொடுத்து விட வேண்டும்.

ஸ்ரீபெரும்புதூர் பஞ்சாயத்து யூனியன் பகுதியில் நிலத்தில் 100 அடிக்குக் கீழ் மணல் இருக்கிறது. அதற்கும் கீழே தோண்டி தண்ணீர் எடுத்து விவசாயம் செய்ய ஏழை விவசாயிகளால் முடியவில்லை. அரசாங்கம் பவர் போரிங் வைத்துக் கொடுத்தால் இரண்டு போகம் மட்டுமல்லாமல் மூன்று போகம் பயிர் செய்ய முடியும்.

திண்ணனூர் ஏரி இருக்கிற எங்கள் பகுதியில் கூவம் ஆறு மூலமாகக் கால்வாய் வந்து கொண்டிருக்கிறது. அந்தக் கூவம் நதியில் 2 அடி மண் எடுக்க வேண்டுமென்று முன்பு திட்டமிட்டார்கள். ஆனால் 20 அடி மண் எடுத்து விட்ட காரணத்தால் அந்தக் கால்வாய் மூலமாக ஏரிக்குத் தண்ணீர் வராத நிலைமை ஏற்பட்டுவிட்டது. இதனால் இரண்டு போகம் பயிரிட முடியாமல் இருக்கிறது. இதைத் தவிர்க்க உடனடியாக நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளவேண்டும்.

எங்கள் பகுதியில் ஒரு அந்தகர் பள்ளி இருக்கிறது. அந்தக் கட்டடம் 1897-ம் ஆண்டு கட்டப்பட்டது. அந்த பெரிய கட்டடத்தைக் கல்லூரியாக ஆக்கினால் பயன் பெற ஏதுவாக இருக்கும்.

ஆவடி டவுன்ஷிப்பில் 2 லட்சம் ரூபாய் வருமானம் வருகிறது. அதிலே நிர்வாகச் செலவுகளுக்காக 1 லட்சத்து 56 ஆயிரம் ரூபாய் செலவாகிவிடுகிறது. மீதி 44,000 ரூபாயை வைத்துத்தான் மற்ற

[திரு. டி. இராசரத்தினம்]

வேலைகளைப் பராமரிக்க வேண்டியிருக்கிறது. நகர அபிவிருத்திக்குப் போதுமான வருமானம் இல்லாததால் பட்டாபிராம், திருமுல்லைவாயில் பகுதிகளில் வேலையைப் பூர்த்தி செய்ய முடியவில்லை. அந்தப் பகுதிகளில் குடிதண்ணீர்ப் பற்றாக் குறையும் இருக்கிறது. பட்டாபிராம், பூவிருந்தவல்லி பகுதிகளில் குடிதண்ணீர்த் திட்டத்தை உடனடியாக ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பஸ் போக்குவரத்தைத் தேசியமயமாக்குவதை புரட்சிகரமான முறையில் நிறைவேற்ற இருக்கிறார்கள். கொடுக்கப்பட்டிருக்கிற பர்மிட் தீருகிற சமயத்தில் மேலும் அதைப் புதுப்பிக்காது அரசாங்கமே அதை எடுத்துக் கொள்ளும் முறையில் திட்டம் தீட்டியிருப்பது சிறப்பானது; அரசாங்கத்திற்கு நஷ்டம் இல்லாமல் திட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது. தற்போது 75 மைல்களுக்கு மேல் ஓடுகின்ற பஸ்களை எடுத்துக் கொள்வது என்று இருப்பதை 50 மைல்களுக்கு மேல் ஓடுவதை எடுத்துக் கொள்வது என்று திட்டமிட்டால் கூட நல்லது. சென்னை நகரத்தைத் தொடும் எல்லா பஸ்களையும் எடுத்துக் கொள்ளத் திட்டமிட்டிருக்கிறார்கள். அதிலே 50 மைல்களுக்குள்ளாக பூவிருந்தவல்லி வரை போகின்ற தனியார் பஸ்களில் எல்லாம் பெருத்த லாபம் வருவதாக இல்லை; நஷ்டம் கூட ஏற்படக்கூடும். ஆகவே, அத்தகைய குறைந்த தூர பஸ் போக்குவரத்தைத் தேசியமயமாக்காமல் இருப்பது நல்லது. அதனால் அரசாங்கத்திற்கு நல்ல முறையில் வருவாய் கிடைக்காது.

பிரஞ்சு பாலிஷை மதுவாகப் பயன்படுத்தி வருகிறார்கள். மரத்திற்கு அடிப்பதற்கு என்று அதை வாங்கிக்கொண்டு போய் போதை தரும் பொருளாக அதைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இந்தச் சூழ்நிலை தற்போது உருவாகிக் கொண்டிருக்கிறது. ஆகவே, பிரஞ்சு பாலிஷை எல்லோருக்கும் விற்பதைத் தடை செய்யவேண்டும். கட்டடம் கட்டுபவர்கள் வேண்டுமென்றால் அனுமதி பெற்று வாங்கிக்கொள்ள வழி செய்யவேண்டும்.

1967–68-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை சிறப்பான முறையில் தயாரித்துக் கொடுத்த நமது முதலமைச்சர் அவர்களுக்கும் மற்ற அமைச்சர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. டி. எஸ். ஆதிமூலம்: மிஸ்டர் டெபுடி ஸ்பீக்கர் சார், இந்த ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தைப்பற்றிப் பேச ஆரம்பிக்கும்போது முக்கியமாக இந்த நாட்டிலுள்ள உணவு நிலையைப்பற்றிச் சொல்ல வேண்டுமென்று நினைக்கிறேன். இந்த மந்திரிசபை புதிதாகப் பதவியேற்றதில் அளவற்ற மகிழ்ச்சி கொண்டவர்களில் நானும் ஒருவன். அதனாலேதான் இப்போது எனக்கு ஒரு 'மிக்ஸட் ஃபீலிங்' இருக்கிறது. ஒரு பக்கம் சந்தோஷம்; ஒரு பக்கம் உணவுக் கொள்கை சம்பந்தமாக பழைய காங்கிரஸ்





[திரு. டி. எஸ். ஆதிமூலம்]

அரசாங்கத்தின் போக்கிலேயே ஓரளவு இந்த அரசாங்கம் போய்க் கொண்டிருக்கிறதே என்பதால், திருப்தியான பலன்கள் ஏற்படாதோ என்ற முறையில் இந்த அரசுக்குப் பழைய அரசாங்கத்திற்கு ஏற்பட்ட கெட்ட பெயர் ஏற்பட்டு விடக் கூடாதே என்ற கவலை. உணவுப் பொருள் எவ்வளவு உற்பத்தியானாலும் அது அரசாங்கத் துறையில் கொள்முதல் செய்யப்படுவது, விநியோகம் செய்வது என்பதெல்லாம் ஒரு பெரிய கஷ்டமான பிரச்னை. வொயில்ட் கூஸ் சேஸ் என்று சொல்வது போல், காட்டுக் கோழியை வேட்டையாட தேடுகிற மாதிரி என்று இதைச் சொல்லலாம். இந்த நாட்டில் உணவுப் பற்றாக்குறை எந்த அளவிற்கு இருக்கிறது என்று பார்த்தால், தமிழ்நாட்டைப் பொறுத்தவரை அது இல்லை என்று சொல்லலாம் தைரியமாக. இந்த பதினைந்து ஆண்டுகளுக்குள் எவ்வளவோ ஏராளமான பம்ப் செட்களைப் போட்டிருக்கிறோம். இருபதாயிரம் பம்ப் செட்கள் என்றிருந்தது, இன்று 1½ லட்சம், 2 லட்சம் என்ற அளவில் உயர்ந்திருக்கிறது. பல அணைக்கட்டுத் திட்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஆகவே நமக்கு வேண்டிய உணவைப்பற்றி தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் கவலையே கிடையாது. ஆனால், இந்தச் சர்க்கார் புதிதாக பதவிக்கு வந்தவுடன் திடீரென்று கட்டுப்பாடுகளைத் தளர்த்திவிட்டால் ஏதோ விலைவாசிகள் கூடி அதிருப்தி ஏற்பட்டு விடுமே என்ற பயம் இருக்கிறது. அந்தப் பயம் காரணமாக ஜாக்கிரதையாகப் போகவேண்டும் என்பது மந்திரி சபையின் நோக்கம். அது ஓரளவு இருக்க வேண்டியதுதான். ஆகவே ஓரளவு கொள்முதலை செய்து சர்க்கார் கையில் வைத்துக்கொண்டு, எங்கு நெருக்கடி வருகிறதோ அந்த நேரத்தில் மார்க்கெட்டில் ரிலீஸ் செய்துவிட வேண்டும் என்பதுதான் என் அபிப்பிராயம். மற்றப்படி இந்தச் சர்க்கார் இந்தப் பொறுப்பை எடுத்துக்கொண்டு ரேஷன் கார்ட் கொடுப்பது, சில பகுதிகளில் அரிசி விநியோகிப்பது, சிலவிடங்களில் விநியோகிக்காமல் இருப்பது என்பது போன்ற பல குழப்பங்களில் இருந்து விடுபடவேண்டும். இந்த இலாகாவை அப்புறப்படுத்திவிட்டாலேயே இதிலேயே ஒரு கோடி ரூபாய் வரையில் இதிலுள்ள சிப்பந்திகளின் சம்பளம் மிச்சப்படும். ஆகவே, தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் 1952 மந்திரிசபையில் அன்றைய காங்கிரஸ்காரர்களை எல்லோரும் ஆறு அவுன்ஸ் என்று கேலி செய்தார்கள். ராஜாஜி அவர்களிடம், நெருக்கடி மிகுந்த காலம் என்று பயமுறுத்தினார்கள். ஆனால் அவர்கள் பதவி ஏற்றவுடன் எப்படி தைரியமாக உணவு விஷயத்தில் உள்ள ரேஷன் முறையை நீக்கினார்களோ அதன்படி இந்த அரசும் சீக்கிரம் நீக்கிவிட வேண்டும். அப்படி நீக்கிவிட்டால் இந்த அரசுக்கு அதனால் கஷ்டங்கள் ஒன்றும் ஏற்படாது என்று எனக்குத் தெரிந்த வரையில் நான் உறுதியாகச் சொல்லமுடியும். ஒரு இடத்தில் படி அரிசி 2 ரூபாய், ஒரு இடத்தில் 1-25 பைசா, ஒரு இடத்தில் 1-80 பைசா என்று இப்படி பலவிதமான விலைகள் இருப்பது மாறி ஆவரேஜாக எல்லா மக்களுக்கும் படி அரிசி 1-30 அல்லது 1-40 என்று

[1967 ஜூன் 23

[திரு. டி. எஸ். ஆதிமூலம்]

ஒரு நிதானமான விலைக்குக் கிடைக்கும். அரிசியின் தரமும் நன்றாகயிருக்கும். அவரவர்களுக்கு வேண்டிய தினுசுகளை அவரவர்கள் வாங்கிக்கொள்ளலாம். பார்டர் ஏரியாக்களைக் கவனமாகப் பார்த்துக்கொண்டு அடுத்த ராஜ்யங்களுக்குப் போக முடியாத நிலையை நன்கு கண்காணித்துக்கொண்டு இந்த அரிசி விஷயத்தைத் தளர்த்திவிடலாம். இல்லாவிடில் முந்திய அரசாங்கத்தின் ரேஷன் முறைபற்றி, உணவுக் கஷ்டத்தைப்பற்றி, மேடைகளில் பேசி பதவிக்கு வந்திருப்பதில் அர்த்தம் இல்லாமல் போய் விடும். ஆகவே, இந்த மந்திரிசபை குறைந்தபட்சம் இன்னும் மூன்று தடவையாவது நீடிக்கவேண்டும் என்ற விருப்பம் உள்ளவர்களில் நானும் ஒருவன். ஆகவேதான் இதைக் கவனிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, உணவு உற்பத்திப் பிரச்சினைபற்றி இப்போது காதில் அடிபட்டுக்கொண்டேயிருக்கிறது. இன்று பாசனவசதிகள் குறைவாக இருக்கின்றன. அதை அதிகப்படுத்தி ஆங்காங்கே ஒவ்வொரு ஜில்லாவிலும் வசதி செய்து கொடுக்கவேண்டும். உதாரணமாக, என் திருநெல்வேலி ஜில்லாவில் இரண்டு முக்கியமான அணைக்கட்டுத் திட்டங்களுக்கு அஸ்திவாரம் இடப்பட்டிருக்கிறது. ஒன்று கடனா நதி அணைக்கட்டுத் திட்டம், இரண்டாவதாக ராம நதி அணைக்கட்டுத் திட்டம். ஆனால், அவற்றிற்குப் போதிய நிதி இந்த வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்படவில்லை. கடனா நதிக்கு 5 லட்சம் ரூபாயும், ராம நதித் திட்டத்திற்கு 50,000 ரூபாயும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்தமாதிரி குறைவான நிதி ஒதுக்கினால் இந்த அணைக்கட்டுகளை வெட்டுவது என்பது அடுத்த மந்திரிசபை வரக்கூடிய காலத்தில் கூட முடியாது. ரோடு போட வேண்டுமென்றாலோ அல்லது ஒரு வீடு கட்டும் திட்டத்திற்கோ இது பிரயோஜனப்படும். ஆனால் இதனால் அணைக்கட்டு வேலை கணிசமான முறையில் நடக்காது. ஆகவே, இந்த மந்திரிசபை காலத்தில் ஒவ்வொரு ஜில்லாவிலும் இப்படிப்பட்ட அணைக்கட்டுத்திட்டங்களை மூன்று, நான்கு ஆண்டுகளுக்குள் துரிதப்படுத்தி முடித்துவிடுவதற்குரிய பூராக் கவனத்தையும் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அவை மிக முக்கியமானவை. உரம் போன்ற விஷயங்கள் எல்லாம் இருக்கின்றன. அது நம் சக்திக்கு அப்பாற்பட்ட விஷயம். இந்திய சர்க்கார் கையில் அந்தக் கொள்கை எல்லாம் மாட்டிக்கொண்டிருக்கிறது. உரம்பற்றி இந்தச் சட்டசபையில் எவ்வளவு தூரம் கத்தினாலும் பிரயோஜனகரமான அளவிற்கு நமக்கு க்வாண்டிட்டி கிடைக்குமா என்பதில் சந்தேகம் இருக்கத்தான் இருக்கிறது. ஆகவே, தண்ணீர் வசதி செய்து கொடுப்பதிலாவது நாம் என்னென்ன வசதிகளைச் செய்து கொடுக்க முடியுமோ, அந்த வசதிகளை எல்லாம் செய்து கொடுத்துவிட வேண்டும். அதற்காக இந்த அரசு அதிகப்படி தொகைகளை ஒதுக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1967 ஜூன் 23]

[திரு. டி. எஸ். ஆதிமூலம்]

திருநெல்வேலியில் தாம்பரபரணி சிஸ்டம் இருக்கிறது. அங்கு மழைக் காலத்தில் ஏராளமான தண்ணீர் கடலில் சென்று வீணாகப் போகிறது. ஆகையால், ஸ்ரீவைகுண்டத்தின் கீழ் ஒரு அணை கட்டலாம். முக்காணிப் பக்கத்தில் கட்டலாம். கட்டி அதில் ஏராளமான ஜலத்தைத் தேக்கினால் திருச்செந்தூர், ஸ்ரீவைகுண்டம் தாலுகாக்களில் கூடுதல் 20,000 ஏக்கர் புன்செய் நிலத்தை நன்செய்யாகச் செய்து, அந்தப் பகுதி மக்களுக்கும், பொதுவாக விவசாயத் துறைக்கும் உதவி செய்யலாம். சர்க்கார் அறிக்கைகள் எப்போது பார்த்தாலும் இப்போதுள்ள அறிக்கையை நான் சரியாகக் கவனிக்கவில்லை—நம் வாட்டர் ரிசோர்ஸை எல்லாம் நம் ராஜ்யத்தில் பூராவும் 'டாப்' செய்துவிட்டோம், இனி ஒன்றுமே பாக்கியில்லை என்று காங்கிரஸ் அரசாங்கம் ஜம்பமாக எழுதிக் கொள்வதுண்டு கடந்த காலங்களில். ஆனால் அது அப்படியல்ல. ஒவ்வொரு ஜில்லாவிலும் எவ்வளவோ நீர்ப்பாசனத் திட்டங்கள் சென்ற இருபது ஆண்டுக் காலத்தில் தாமதமாகி இருக்கிறது. ஆகவே, நம் சக்திக்குட்பட்ட முறையில் இந்த தண்ணீர் வசதிகளைச் செய்து கொடுத்தால் இந்த ராஜ்ய மக்கள் வாழ்த்துவார்கள், வணங்குவார்கள். ஆகவே, தண்ணீர் வசதியை எவ்வளவு தூரம் செய்து கொடுக்க முடியுமோ அந்த அளவு செய்து கொடுத்து, இந்த உணவுக் கண்ட்ரோல் விஷயத்தில் சீக்கிரமாக தைரியமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பத்திர விஷயமாக கலெக்டருக்கு சந்தேகப்பட்ட கேஸ்களை அனுப்பி வைத்து குறைந்த மதிப்பில் பத்திரங்கள் வாங்கியிருந்தால் கூடுதல் மதிப்பீடு செய்து வசூல் செய்யப்பட வேண்டுமென்ற விவகாரங்களும் இருக்கின்றன. இவையெல்லாம் மக்களுக்கு அனாவசியமாக கஷ்டநிலையை ஏற்படுத்தும். வருமானத்தைக் கூட்டுவதற்கு சிக்கன முறைகளைக் கையாள வேண்டும். இந்த மந்திரிசபை முதலில் ஆடம்பரத்தை அறவே உதறித் தள்ளிவிட்டது. மேலும் சிக்கன அடிப்படையில் சில இலாகாக்களில் உள்ள அதிகப்படியான சிப்பந்திகளை நீக்கிக்கொண்டு வருகிறது. அதற்கெல்லாம் நாம் அவர்களை வாழ்த்தக் கடமைப்பட்டிருக்கிறோம். இன்னும் மேற்கொண்டு ப்ளாக் டெவலப்மெண்ட் ஆபீஸ் என்ற இந்த ஆபீஸை எப்படியாவது நாளாவட்டத்தில் காலி செய்துவிட வேண்டும். அந்தக் காலத்தில் ஒரு அரசியல் நோக்கத்தோடும், ஏதோ ஜனங்களுக்கு ஓரளவு இதனால் நன்மை செய்துவிடலாம் என்ற எண்ணத்தோடும் இந்த இரண்டு எண்ணத்தில் காங்கிரஸ் சர்க்கார் இந்த ப்ளாக் டெவலப்மெண்ட் ஆபீஸ்களை ஏற்படுத்தியது. இதன்மூலம் உருப்படியான காரியங்கள் ஒன்றும் செய்யப்படவில்லை. முற்காலத்தில் ஜில்லா போர்டு இருந்தது. அது ஒரு அற்புதமான இன்ஸ்டிட்யூஷனை கிராமப்புற மக்களுக்கு நல்ல முறையில் சேவை செய்து வந்தது. அந்தக் காலத்தில் வசதிகள் குறைவு. ஜில்லா போர்டுக்கு ஒரு ஜீப் கார் வாங்கக்கூட வெள்ளைக்காரன் காலத்தில் அனுமதி கிடைக்காது. அவ்வளவு

[திரு. டி. எஸ். ஆதிமூலம்]

மோசமான நிலையில் ஜில்லா போர்டு இருந்தும், பல ஆயிரக்கணக்கான மைல்கள் ரோடுகளைப் பராமரிப்பது, உயர்நிலைப் பள்ளிகளை நடத்துவது, ஆஸ்பத்திரிகளை நடத்துவது எல்லாம் நல்ல முறையில் நடந்தன. அந்த ஜில்லா போர்டு அமைப்பைத் தேடி எடுங்கள், கால நிலைமைக்கு ஏற்ப கொஞ்சம் மாறுதல்களைப் புகுத்துங்கள். அதை சென்னை ராஜ்யத்திலே அமல் நடத்தி, பழையபடி ஜில்லா போர்டுகளை ஏற்படுத்தினால் அதன் மூலம் ராஜ்யத்திலே உள்ள மக்களுக்கு நல்ல உருப்படியான வேலைகளைச் செய்ய முடியும். அட்மினிஸ்ட்ரேட்டிவ் எக்ஸ்பென்டிச்சர் என்ற முறையில் பல கோடிக் கணக்கான ரூபாய்களைச் சிக்கனம் செய்ய முடியும்.

உணவு விஷயமாக எங்கள் ஜில்லாவிலிருந்து எனக்குச் சில லெட்டர்கள் வந்திருக்கின்றன. அவற்றையெல்லாம் இங்கே வாசிப்பது என்றால் அமைச்சர்களுடைய மனது புண்படும். ஒரு நண்பர் எழுதியிருக்கிறார்—மக்கள் டி.எம்.கே. ஆட்களை வெளியே கண்டாலே ஏசுகிறார்கள் என்று எழுதியிருக்கிறார்—லெட்டர் என் கையில் இருக்கிறது. சிலர் கூடுதல் குறைச்சலாக எழுதலாம் என்று லேசாக நினைக்கக் கூடாது. சில இடங்களில் அரிசி போட்டும், சில இடங்களில் போடாமலும் இருக்கிறது. உணவு மந்திரியைப் போய்க் கேட்டு ஐந்து கிராமத்தில் கொடுப்பதற்கு உத்தரவு போடப்படுகிறது. இந்த மாதிரி பல கஷ்டங்கள் உணவு விநியோகத்தில் இருக்கின்றன. உணவு விஷயத்தில் தைரியமாக நடவடிக்கை எடுப்பார்கள் என்று டி.எம்.கே.-க்கு மக்கள் ஓட்டுப் போட்டார்கள். உணவு விநியோகத்தில் மக்கள் க்யூ வரிசையில் நின்று, அவமானம் அடைந்து, மழையிலும், வெய்யிலிலும் நாள் பூராவும் நின்று கஷ்டப்பட்டார்கள். புது அரசாங்கத்தின் மூலம் விடிவு ஏற்படும் என்று மக்கள் எண்ணிய காரணத்தினால்தான் அவர்களுக்கு மகத்தான வெற்றி இந்தியாவிலேயே ஏற்பட்டிருக்கிறது. இந்தியாவிலேயே சென்னை ராஜ்யம் எதற்கும் முன்மாதிரியாக நடந்து கொள்ளும் ராஜ்யம் என்று பெயர் பெற்றிருக்கிறது. உணவு விஷயத்திலும் இந்திய சர்க்காரே வியப்பு அடையும்படி, இந்திய சர்க்காரின் கொள்கை தவறு என்று சொல்லும் அளவுக்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். 1964-ல் அவசியமாக காங்கிரஸ் சர்க்காரில் கொள்முதலைப் புகுத்தினார்கள். விலைவாசி உயர்வை மறைக்க, கொள்முதல் செய்வது என்ற திட்டத்தைப் புகுத்தினார்கள். 1964-க்குப் பிறகு நிலைமை எதும் சீர்கெட்டுவிடவில்லை. எதும் பக்கம் வந்து நாம் மாட்டிக்கொள்ளவில்லை. இந்தக் கொள்கையை தைரியமாகப் பரிசீலனை செய்து, வெட்டிப் போட்டு பெரிய அந்தஸ்தில் வைத்து, உலகத்திலேயே பெரிய கட்சி என்ற பெயரை வாங்கித் தந்த ஏழை எளிய மக்களுக்கு, விவசாயத்தை நம்பியிருக்கக்கூடிய மக்களுக்கு நன்மை செய்ய வேண்டும்.



[திரு. டி. எஸ். ஆதிமூலம்]

தொழிலாளர்களுக்கும் இந்த அரசு நல்ல விதமான தொழிற் சட்டங்களைச் செய்ய வேண்டும். உதாரணமாக கைத்தறி நெசவாளர்களுக்கு ஏதாவது பரிகாரமாக நடவடிக்கை எடுக்க யோசனை செய்யவேண்டும். பீடித் தொழிலாளர்களுக்கென்று 1958-ம் ஆண்டு ஒரு சட்டம் செய்யப்பட்டது. பீடித் தொழிலாளர்கள், அவர்கள் குடும்பத்தினர் எல்லாம் கிட்டத்தட்ட மூன்று லட்சம் பேர்கள் இருப்பார்கள். அவர்களுக்குக் கூலி உயர்வு, மற்ற வசதிகள் எதும் இல்லை. 1958-ம் வருஷச் சட்டத்தை காங்கிரஸ் சர்க்கார் சரியான முறையில் சின்ஸியராக அமல் நடத்தாததால், அது மூலையில் தூங்கி, உதவாக்கரையாகப் போய்விட்டது. அந்தச் சட்டத்தைப் புரட்டுங்கள், புதிதாக அமல் நடத்த முயற்சி செய்யுங்கள், பீடித் தொழிலாளர்கள் குடும்பங்களெல்லாம் உங்களை வாழ்த்தும்.

இந்த அரசு மேன்மேலும் நல்ல காரியங்களைச் செய்யவேண்டும் என்பதற்கு அறிகுறியாக இந்த வரவு-செலவுத் திட்டத்தை நல்ல முறையில் எழுதியிருக்கிறார்கள். ஆகவே, இந்த முயற்சியைத் தொடர்ந்து, தொழிலாளர்களுக்கு நன்மைகளைச் செய்யக்கூடிய சட்டங்களில் கவனம் செலுத்தி அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எனக்குக் கொடுத்த வாய்ப்புகாக நன்றி தெரிவித்து முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. எம். கோபால்:** அவைத் துணைத்தலைவர் அவர்களே, 1967-68-ம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையின்மீது எனக்குப் பேச வாய்ப்பு அளித்த அவைத் துணைத்தலைவர் அவர்களுக்கு முதற்கண் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ள ஆசைப் படுகிறேன்.

புதிதாகப் பதவி ஏற்ற திராவிட முன்னேற்றக் கழக அரசு இன்றைய தினம் தீட்டிய நிதி நிலை அறிக்கை பற்றி நாம் மட்டுமல்ல, நாடே போற்றுகிறது. நாட்டிலுள்ள எல்லாப் பத்திரிகைகளும் போற்றுகின்றன. உண்மையான ஏழை எளிய மக்களை வாழ வைக்க, பல ஆண்டுக் காலமாகத் தன்னுடைய எண்ணத்திலே உருவாக்கிக்கொண்டிருக்கிற எங்கள் ஒப்பற்ற மாபெரும் தலைவர் அறிஞர் அண்ணா அவர்களால் திட்டமிடப்பட்ட அறிக்கை ஏழை எளியவர்கள் மட்டுமல்ல, இன்னும் சொல்லப்போனால் நடுத்தர மக்களுக்கும், இன்னுங்கூடச் சொல்லப்போனால் உலகத்திலே உலாவிக் கொண்டிருக்கும் மக்களுக்குக் கொஞ்சம் பாதுகாப்புத் தந்திருக்கிறது. ஆகவே, அறிஞர் அண்ணா அவர்களின் நிதி நிலை அறிக்கையைப் பாராட்டாமல் இருக்க முடியாது. ஏனோ தானோ என்று ஒரு சில நண்பர்கள் சொல்லுகிறார்களே தவிர, 10 ஆண்டுக் காலமாக சென்னை நகரசபையில் இருந்து பட்ஜெட்டைப் பார்த்த நோக்கில் என்ன என்று சொல்ல முடியவில்லை. இந்த நிதி நிலை அறிக்கையை நல்ல விதத்தில் தயாரித்துத் திட்டத்தைத் தீட்டியிருக்கிறார்கள். நான் நினைத்தது உண்டு 'ஆதித் திராவிட

[திரு. எம். கோபால்]

சமுதாயத்தில் ஒரு தலைவர் ஏற்பட்டார் என்றால் உள்ளபடியே அது டாக்டர் அம்பேத்கார் தான். அவருக்குப் பின்னால் யாரும் பிறக்க மாட்டார்களோ' என்று கொஞ்சம் சிந்தனை செய்தோம். ஆனால், அந்த மக்களுக்கு டாக்டர் அம்பேத்கார் என்ன நினைத்தாரோ, அதை விடப் பன்மடங்கு செய்திருக்கிறார் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அறிஞர் அண்ணா அவர்கள். பி.யு.சி. வரை அவர்கள் படிக்க ஏற்பாடு செய்திருக்கிறார். குடும்ப வசதி இல்லாத மக்களுக்குப் பென்ஷன் தொகை தர வசதி செய்திருக்கிறார். ஏழை எளிய விவசாய மக்களுக்கு நிலம் அளிக்கும் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார். நினைத்ததைவிட, டாக்டர் அம்பேத்காரை விட, ஒரு படி உயர்ந்திருக்கிறார்—தாழ்த்தப்பட்ட மக்கள் எங்கள் தலைவரை மறக்கவே முடியாது.

நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். சுமார் 300 கோடி ரூபாய் கடன் வாங்கியும், அந்தக் கடனைப் பெற்று தமிழ்நாட்டிலே மிகப் பெரிய ஏரிகளான செம்பரம்பாக்கம், மணிமங்கலம், தென்னேரி என்ற ஏரிகளைப் பொறுத்தவரையில் வெள்ளையன் காலத்திலிருந்து காங்கிரஸ்காரர்கள் இருந்த இந்த நாள் வரையில் ஒரு தட்டு மண்கூட கரைகளுக்குப் போடவில்லை. ஒரு அடி ஆழம் கூட எடுக்கவில்லை. இன்றையதினம் அந்த ஏரிகளை உள்ளபடியே செப்பனிட்டிருந்தால் விவசாயம் செய்து அந்த மாவட்ட மக்கள் மட்டுமல்ல, மற்ற மாவட்ட மக்களுக்கும் உணவுத் தானியங்களை அனுப்ப முடியும். அதைச் செய்யத் தவறினார்கள்.

நான் மற்றொன்று சொல்லுகிறேன். வெள்ளையன் காலத்தில் அந்தந்த மதகுகளைச் செப்பனிட்டார்களே தவிர, அதற்குப் பிறகு இதுவரையில் செப்பனிடவில்லை. நீர்ப்பாசன வசதிக்காக வழங்கி இருக்கும் தொகையை ஓரளவு அதிகமாக செம்பரம்பாக்கம் ஏரி, மணிமங்கலம் ஏரி, தென்னேரி ஆகிய ஏரிகளைச் செப்பனிடுவதற்கு ஒதுக்கினால் இன்றைய விளைச்சலை விட அதிகமாக விளையும் என்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

மற்றொன்று காவிரித் திட்டம். சுமார் 20 ஆண்டுக் காலமாக சென்னை மக்களுக்குத் தண்ணீர் வேண்டுமென்று பல தீர்மானங்கள் மூலமாகவும் மற்றும் பலவிதத்திலும் கவனத்திற்குக் கொண்டு வந்தும், முன்னால் இருந்த அரசு கேளாமல் இருந்து விட்டது. பதிதாகப் பதவிக்கு வந்த அரசு உடனடியாக இந்தக் காரியத்தைச்
மு.ப. 11-00 செய்ய முன் வந்ததற்காக அவர்களைப் பாராட்டுகிறேன். அதோடு விட்டுவிடாமல் மற்றொன்றும் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இந்த மாநில ஆட்சிக்கும், மாநகர ஆட்சிக்கும் இடையிலே சில கட்டுப்பாடுகள் உண்டு. 2 அங்குலம், 3 அங்குலம் குழாய்களைச் செப்பனிட வேண்டுமென்றால் மாநகர ஆட்சியே செய்துகொள்ளலாம். ஆனால் 4 அங்குலம் போன்ற அதற்கு மேற்பட்ட குழாய்களைச் செப்பனிட வேண்டுமென்றால், மாநில சர்க்காரிடமிருந்து உத்தரவு வரவேண்டும். மக்களுக்குக் குடிதண்ணீர்,





[திரு. எம். கோபால்]

செய்துகொடுக்க பாதாள சாக்கடை போன்ற சுகாதார வசதி வேண்டுமென்றால், மாநில சர்க்காரைக் கேட்கவேண்டும். சர்க்காரிடமிருந்து இஷ்டம்போல் உத்தரவு வரும். என்றைக்கு உத்தரவு வருகிறதோ அன்றைக்குத்தான் மக்களுக்கு நன்மை செய்யமுடியும். அதுவரையில் செய்ய முடியாது. ஆகவே, இன்றைய மக்கள் சர்க்கார் இந்த முறையை மாற்றி அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கல்கத்தா, பம்பாய், டெல்லி போன்ற மாநகராட்சி மன்றங்களுக்கு எந்தவிதமான அதிகாரம் தரப்பட்டிருக்கிறதோ அதேபோல், இங்கும் மாநகராட்சிகளுக்கு அதிகாரம் தரப்படவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மற்றொன்றும் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். குடிநீர் திட்டத்தைப் பற்றி சொல்ல விரும்புகிறேன். செம்பரம்பாக்கம் ஏரியில் ஆண்டு தோறும் தண்ணீர் அதிகமாகப் பெருக்கு எடுத்து ஓடி, சென்னைக்கு அருகாமையில் உள்ள ஆற்றில் சேருகிறது. ஒரு கோடி, இரண்டு கோடி ரூபாய்க்கு ஒரு திட்டம் போட்டு, பெரிய ஒரு பள்ளத்தாக்கு ஏற்படுத்தி, அதிலே அணைகட்டி, அந்தத் தண்ணீரைச் சேமித்து கிராமக் குடிநீர் திட்டத்திற்கு வழங்கலாம். பரங்கிமலை, கிண்டி, குன்றத்தூர் போன்ற கிராமங்களுக்குக் குடிநீர் கொடுக்கக்கூடிய இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இப்பேர்ப்பட்ட திட்டங்களை இன்றைக்கு மத்திய சர்க்கார் செய்துகொடுக்கத் தவறிவிட்டார்கள்.

அடுத்தபடியாக, 75 மைல்களுக்கு அப்பாலுள்ள பஸ் ரூட்டுகளை சர்க்காரே ஏற்று நடத்த முன்வந்துள்ளது. இதை நான் மட்டுமல்ல, நாடே போற்றுகிறது, பத்திரிகைகளெல்லாம் போற்றுகின்றன. இந்த நேரத்தில் கட்டணத்தைக் குறைப்பதற்கு திட்டமிட்டுள்ளார்கள் நமது அமைச்சர் அவர்கள். மக்களை வாழவைக்கின்ற சர்க்கார் என்று சொல்லக்கூடிய மத்திய சர்க்கார் இந்த நேரத்தில் ரயில் போக்குவரத்துக் கட்டணத்தை உயர்த்தியிருக்கிறது. உள்ளபடியே அது மக்களை வாழ வைக்கிற சர்க்காரா என்று எதிர்க்கட்சியினரே சிந்தித்துப் பார்க்க வேண்டும். இதையெல்லாம் கேட்கத் தவறிவிட்ட காங்கிரஸ் நண்பர்களுக்கு இந்தப் பட்ஜெட்டைக் குறை கூற எப்படித்தான் மனம் வந்ததோ எனக்கே புரியவில்லை. உள்ளபடியே இந்த பட்ஜெட் ஒரு சோஷலிச திட்டத்தை உருவாக்கக்கூடிய திட்டமாக அமைந்திருக்கிறது. இதைப் போற்றாத மக்களே கிடையாது. எதிர்க்கட்சியினர் போற்றினாலும், போற்றாவிட்டாலும், நாடே போற்றுகிறது.

இன்னொன்றும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நெசவாளர்களுக்கு, ஏழை எளிய மக்களுக்கு, நெசவுத் தொழில்தான் செய்யத் தெரியுமே தவிர, வேறு ஒன்றும் தெரியாது. உள்ளபடியே மத்திய

[1967 ஜூன் 23

[திரு. எம். கோபால்]

சர்க்காருக்கு மக்களை வாழ வைக்கும் எண்ணம் இருந்தால், கைத்தறித் தொழிலாளிகளை வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய ஏற்பாடுகளைச் செய்து தந்திருக்க வேண்டும். அந்த மக்களை இந்நாள் வரை வாழ வைக்க மத்திய அரசு தவறிவிட்டது. அவர்கள் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இந்த சர்க்காருக்கு என்ன அதிகாரம் இருக்கிறது? வருமான வரி, கப்பல் வரி, சுங்க வரி, போஸ்டல் டிபார்ட்மெண்டு வருமானம், எல்லா வற்றையுமே மத்திய அரசு எடுத்துக்கொண்டுவிடுகிறது. நமக்குக் கிடைப்பதெல்லாம் சாதாரணமாக இருக்கும் நில வரி, பஸ் போக்கு வரத்து வரி, விற்பனை வரி, அத்தகைய சொற்பமான வரி வருமானத்தை வைத்துக்கொண்டுதான் நாம் காரியங்களைச் செய்ய வேண்டியிருக்கிறது. வேறு வருமானம் நமக்குக் கிடையாது. தமிழ் நாட்டு மக்களை நல்ல முறையில் வாழ வைக்க வேண்டுமானால், எல்லா உறுப்பினர்களும் சேர்ந்து மத்திய சர்க்காருடன் போராட வேண்டும். 'எங்களுக்கு வருமானம் போதாது, எங்களால் இந்த வருமானத்தை வைத்துக்கொண்டு மக்களை வாழ வைக்க முடியவில்லை, வருமான வரி, சுங்க வரி போன்ற வரிகளில் பாதிப் பங்கை எங்களுக்குக் கொடுத்துவிட வேண்டும்' என்று கூக்குரல் போட வேண்டும். அப்படிச் செய்தால் தான், புரட்சி செய்தால் தான், நமக்கு உரிய வருமானம் கிடைக்கும். மக்களை வாழ வைக்க முடியும்.

நான் கடைசியாக ஒன்று சொல்லிக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியில் பல ஆண்டுக் காலமாக பாதைகள் சரிவர கிடையாது என்று மக்கள் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். காங்கிரஸ் நண்பர்கள் 'அதைச் செய்தோம், இதைச் செய்தோம்' என்று சொல்லிக்கொள்கிறார்கள். எதைச் செய்தார்கள்? ரூ. 300 கோடி கடன்தான் ஆயிற்று. ஆண்டு ஒன்றுக்கு அதற்கு ரூ. 14 கோடி வட்டி கொடுக்கவேண்டும். ஒரு கிராமத்திற்கும் இன்னொரு கிராமத்திற்கும் தொடர்பு கிடையாது, பாதையே கிடையாது. இதையெல்லாம் செய்ய காங்கிரஸ் சர்க்கார் தவறிவிட்டது. இப்பொழுது மக்கள் ஆட்சி நடக்கிறது. ஆகவே, என்னுடைய தொகுதியில் பாதை வசதிகள் செய்துகொடுப்பதற்காக அதிகமாக நிதி ஒதுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்த பட்ஜெட்டை உளமார, மனமார போற்றி, நான் மட்டுமல்ல, நாடே போற்றும் அளவுக்கு, ஏன் உலகமே போற்றும் அளவுக்கு அமைந்திருக்கிறது என்று சொல்லி விடைபெறுகிறேன். வணக்கம்.

* திரு. வை. சுவாமிநாதன்: மதிப்புமிக்க உப சபாநாயகர் அவர்களே, 1967-68-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை நான் முழு மனதோடு வரவேற்கிறேன், போற்றுகிறேன். அதே சமயத்தில் இதில் காணப்படும் சில குறைகளை எடுத்துச்சொல்வது என்னுடைய கடமையாகும். இந்த பட்ஜெட் உண்மையிலேயே



1967 ஜூன் 23]

[திரு. வை. சுவாமிநாதன்]

பாராட்டத் தக்கதாக இருந்தபோதிலும், இதில் சில குறைபாடுகள் இருக்கத்தான் செய்கின்றன. அந்தக் குறைகளை நான் எடுத்துச் சொல்கிறேன் என்றால், எனக்கு சர்க்காரிடம் உள்ள கோபத்தால் அல்ல, ஆங்காரத்தினால் அல்ல. ஒரு மாமியார் தன்னுடைய மருமகளை நேரடியாகப் போற்றமாட்டாள், ஆதரிக்க மாட்டாள் தான். ஆனால், அதே சமயத்தில் மாமியார் மருமகளைப்பற்றி மற்றவர்களிடம் புகழ்ந்து பேசி பாராட்டுவாள். நேரடியாகப் புகழாததற்குக் காரணம், நல்ல முறையில் அவள் வேலை செய்ய வேண்டும் என்பதுதான். நேரடியாகப் புகழ்ந்தால் அவளுக்குக் கர்வம் ஏற்பட்டுவிடுமோ என்பதுதான் காரணம். ஆனால், உண்மையிலேயே மாமியாருக்கு மருமகள் பேரில் உள்ள பாசத்திற்கும், அன்பிற்கும் குறைவு இருக்காது. இன்னும் அவள் நல்ல முறையில் வேலை செய்யவேண்டும் என்பதற்காகத்தான் மாமியார் அவளை அதிகமாக நேரடியாகப் புகழமாட்டாள். அதேபோலத்தான் இதிலே இருக்கக்கூடிய சில குறைகளை நாங்கள் எடுத்துச் சொல்கிறோம். காரணம் சர்க்கார் இன்னும் நல்ல முறையில் வேலை செய்ய வேண்டுமென்பதுதான், அதைத்தான் நாங்கள் எதிர் பார்க்கிறோம். மேலும், ஒரு ஆசிரியர், ஒரு மாணாக்கன் நல்ல மார்க்குகள் வாங்கினாலும் அவனை அதிகமாகப் புகழ மாட்டார். ஏனென்றால் இன்னும் அதிகமாக மார்க்குகள் வாங்க வேண்டும் என்பதற்காகத்தான், 100-க்கு 100 மார்க்கு வாங்க வேண்டும் என்பதற்காகத்தான். அதைப்போலத்தான் இந்த பட்ஜெட்டில் உள்ள சில குறைகளைச் சுட்டிக்காட்டுகிறோம். இதைச் செய்யுங்கள், அதைச் செய்யுங்கள் என்று சொன்னால் சர்க்கார் இன்னும் நிறைய செய்ய மாட்டார்களா என்றுதான் இந்தக் குறைகளையெல்லாம் எடுத்துச் சொல்கிறோம்.

கல்லூரிகள் திறக்கக்கூடிய இந்த நேரத்தில் ஒரு முக்கியமான பிரச்சினை. திருச்சியிலிருந்து எனக்கு ஏராளமான கடிதங்கள் வந்துகொண்டிருக்கின்றன. கல்லூரிகளில் மாணவர்கள் சேருவதற்குப் போதிய இடமில்லை என்று ஏராளமான மாணவர்கள் புகார் செய்கிறார்கள். இதில் உடனடியாக கல்வி மந்திரி தலையிட்டு, திருச்சி மாநகரத்தில் மாணவர்களின் சௌகரியத்தை முன்னிட்டு, கல்லூரிகளில் நிறைய இட வசதி செய்து கொடுத்து, அதிக மாணவர்கள் படிப்பதற்கு வாய்ப்பும், வசதியும் செய்து தர வேண்டும் என்று முதற்கண் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், இப்பொழுது கல்லூரிகளில் அனுசரிக்கக்கூடிய முறை மாணவர்களுக்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறது. திருச்சியில் 5 கல்லூரிகள் இருக்கின்றன என்றால், ஒரு மாணவர் கல்லூரியில் சேர வேண்டுமென்றால், 5 கல்லூரிகளிலும் அப்ளிகேஷன் பாரம் வாங்கவேண்டியிருக்கிறது. ஒரு அப்ளிகேஷன் பாரத்திற்கு ரூ. 4 செலவழிக்க வேண்டியிருக்கிறது. கிட்டத்தட்ட ரூ. 20 செலவழிக்க வேண்டியிருக்கிறது. ஒவ்வொரு மாணவனும்

[திரு. வை. சுவாமிநாதன்]

தனித்தனி அப்ளிகேஷன் பாரம் வாங்க வேண்டிய நிலை இருக்கிறது. இதை மாற்றி திருச்சியில் ஒரு கல்லூரியில் சேர ஒரு மாணவன் விரும்பினால், ஏதாவது ஒரு கல்லூரியில் அப்ளிகேஷன் பாரம் வாங்கினால், எல்லா கல்லூரிகளிலும் சேரலாம் என்ற ஒரு முறையை அனுசரித்தால்தான் சிரமமில்லாமல் இருக்கும். அத்துடன் சில கல்லூரிகளில் என்ன செய்கிறார்கள் என்றால், 400 மார்க்குகள் வாங்கிய மாணவர்களுக்குத்தான் முதலிடம் என்று சொல்கிறார்கள். இப்படி உயர்ந்த மார்க்குகள் வாங்கிய மாணவர்களையே ஒரு குறிப்பிட்ட கல்லூரி சேர்த்துக்கொண்டு விடுவதால், அதன் காரணமாக அந்தக் கல்லூரியில் நல்ல ரிஸல்ட் வருகிறது. உடனே அடுத்த ஆண்டில் எல்லா மாணவர்களுக்கும் அந்தக் கல்லூரியில் சேரவேண்டும் என்ற ஆசை ஏற்படுகிறது. ஆகவே, இந்த முறையை தவிர்க்கவேண்டும். இதற்கு ஏதாவது ஒரு கல்வி கமிட்டி ஏற்படுத்தி, மாணவர்கள் சேருவதற்கு எல்லா கல்லூரிகளிலும் ஒரே திட்டத்தை அனுசரிக்கவேண்டும். ஒரு கல்லூரியில் 400 மார்க்குகள் வாங்கிய மாணவர்கள் 100 பேர்களை சேர்த்துக்கொண்டால் அதே போல மற்ற கல்லூரிகளிலும் சேர்த்துக்கொள்ளவேண்டும். அதற்குக் குறைவான மார்க்குகள் வாங்கிய மாணவர்களை எவ்வளவு விகிதாசாரம் ஒவ்வொரு கல்லூரியிலும் சேர்த்துக்கொள்ளவேண்டும் என்று நிர்ணயித்து, அதன்படி சேர்க்க வேண்டும். அந்த முறையை அனுசரித்தால், மாணவர்களுக்கு எல்லா கல்லூரிகளிலும் சேர வாய்ப்பு ஏற்படும், கல்லூரி ஆசிரியர்களுக்கும் ஒரு ஊக்கம் ஏற்படும். இதற்கு ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தமிழ் ஆட்சி மொழியாக வரவேண்டும் என்று ஆர்வமுள்ள, தமிழ் மொழியினடத்தில் அதிக பக்தி உள்ள இந்த ஆட்சியானது நம்முடைய தமிழ் ஆசிரியர்களுக்கு, தமிழ் எம்.ஏ. படித்தவர்களுக்கு நல்ல சலுகைகளை செய்து கொடுக்கவேண்டும். குறிப்பாக எடுத்துக்கொண்டால், இந்தி எதிர்ப்புப் போராட்ட நேரத்தில், தமிழ் ஆசிரியர்கள் பலர் கல்லூரி முதல்வர் ஸ்தானத்திலிருந்து நீக்கப்பட்டார்கள். உதாரணத்திற்கு வேண்டுமானால், திருச்சி ஈ. வே. ரா. பெரியார் கல்லூரியில் தமிழாசிரியர் முதல்வராக இருந்தார். அவர் மாற்றப்பட்டுவிட்டார். தமிழில் அக்கறை உள்ள ஆட்சி தமிழ் ஆசிரியர்களை கல்லூரி முதல்வர்களாக நீடிக்க ஏற்பாடு செய்யவேண்டும். அப்படிச் செய்தால் தமிழ் ஆசிரியர்களுக்கும், தமிழ் படிக்கும் மாணவர்களுக்கும் அதிக உற்சாகம் ஏற்படும். அது போல தமிழில் எம்.ஏ. படிப்பதற்கு மாணவர்கள் தயங்குகிறார்கள், பயப்படுகிறார்கள். உதாரணமாக, பிரஸிடென்ஸி காலேஜில் 40 ஸ்தானங்கள் இருந்தபோதிலும், 19 மாணவர்கள்தான் படிக்கிறார்கள். காரணம், தமிழ் எம்.ஏ. படித்தவர்களுக்கு அரசாங்கத்தில் உயர்ந்த உத்தியோகம் கிடைக்காமல் போய்விடுமோ என்பதுதான். அதனால்தான் அதிக மாணவர்கள் படிக்க முன்வராமல் இருக்கிறார்கள்.





[திரு. வை. சுவாமிநாதன்]

அதற்கு எடுத்துக்காட்டாக தமிழ் எம்.ஏ., படித்தவர்களுக்கு அரசாங்கத்தில் உயர் பதவிகளைக் கொடுக்க வேண்டும். டெபுடி கலெக்டர்களாகவும், அல்லது டிஸ்ட்ரிக்ட் ரெஜிஸ்ட்ரார் போன்ற பதவிகளிலும் அவர்களுக்கு வாய்ப்பு அளித்து, ஊக்கம் கொடுத்தால், தமிழ் வளர்ச்சி பெற வாய்ப்பு ஏற்படும். இப்பொழுதுகூட பி.எஸ்ஸி. வகுப்பில் தமிழ் போதனா முறையை அனுசரிக்கிறார்கள். ஆனாலும் மாணவர்களுக்கு ஆர்வம் இல்லை. ஆறு பேர்கள் தான் வந்திருக்கிறார்கள். மாணவர்கள் பயப்படுகிறார்கள். தமிழ் படிக்கும் மாணவனுக்கு அதிகச் சலுகைகள் கொடுக்க வேண்டும். அவனுக்கு மானியம் கொடுக்க வேண்டும் ; அவனுடைய குடும்பத்திற்கு சகாயத் தொகை அளிக்க வேண்டும். அப்படிச் செய்தால் தான் மாணவர்களுக்கு ஆர்வம் ஏற்படும். மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. நாகசுந்தரம் குறிப்பிட்டது போல, திருச்சியில் இன்றைக்கு 11 கல்லூரிகள் இருக்கின்றன. அங்கே ஒரு பல்கலைக் கழகம் ஏற்படுத்த அரசு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். திருச்சி மிக முக்கியமான இடம். நிச்சயம் அங்கே ஒரு தமிழ் பல்கலைக்கழகம் அமைக்க வேண்டும். அதே மாதிரி திருச்சியில் வெகு நாட்களாகவே தேவைப்படுகின்ற வைத்தியக் கல்லூரி அமைக்கப்படவில்லை. அதையும் அமைக்க தக்க ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

திருச்சியில் ஏராளமான தொழில்கள் ஏற்பட்டிருக்கின்றன. அங்கே பாலிடெக்னிக்குகள் போதாது. மக்களுக்கு நல்ல ஆசையும் ஆர்வமும் இருந்தாலும் வசதியும் வாய்ப்பும் இல்லாமல் இருக்கிறது. ஆகவே, பாலிடெக்னிக்குகளை ஆரம்பிக்க ஆவன செய்ய வேண்டும். இன்றைக்கு அங்கே பெண்களுக்கு பாலிடெக்னிக்குகளில் சேர்ந்து படிக்க வேண்டும் என்கிற ஆர்வம் அதிகமாக இருக்கிறது. அங்கே பெண்களுக்கு பாலிடெக்னிக் இல்லை. அந்த வகையிலும் ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

இப்பொழுது திருவையாற்றில் தமிழ் கல்லூரி இருக்கிறது. இன்றைக்கு மாணவர்களிடையில் அதிகமாகத் தமிழ் படிக்க வேண்டும் என்கின்ற ஆவல் ஏற்பட்டிருக்கிறது. திருவையாற்றில் மட்டும் கிட்டத்தட்ட 900 பேர்கள் படிக்க விரும்புகிறார்கள். ஆனால் அந்தக் கல்லூரியில் படிக்க உள்ள இடங்கள் 50 தான். ஆகவே, அந்தக் கல்லூரியில் இடங்களை அதிகமாக்கி, ஏராளமான மாணவர்கள் தமிழ் படிக்க ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

விவசாயத்தைப் பற்றிச் சொல்லும் போது, வருமான வரி விதித்திருப்பதைப் பற்றி எனக்கு அதிகமான கடிதங்கள் வந்திருக்கின்றன. அதை விவசாயிகள் பெரும் சுமையாகக் கருதுகிறார்கள். விவசாயம் செய்பவர்கள் கிராமங்களில் இருக்கிறவர்கள்.

[1967 ஜூன் 23

[திரு. வை. சுவாமிநாதன்]

நகர் புறத்தோடு தொடர்பே இல்லாத கிராமங்களிலும் இருக்கிறார்கள். பலர் நகரங்களுக்கே சென்றதுகூடக் கிடையாது. எழுத்து வாசனை இல்லாதவர்கள். அவர்கள் கணக்குக் கொடுக்க வேண்டும் என்றால், அவர்கள் யாராவது படித்தவர்களிடம் தான் போக வேண்டும். ஆதலால் அவர்களுக்கு வீண் தொல்லையும், பணச் செலவும் தான் ஏற்படும். அதோடு கூட விவசாயத்திற்கு கணக்கு எழுதுவது அவ்வளவு சுலபம் இல்லை. ஏனென்றால், விவசாயச் செலவுகள் ஒரு நிரந்தரமானவை அல்ல. வயலுக்கு வயல், இடத்திற்கு இடம் மாறும். நடவு கூலி ஒரு சமயம் பத்து அணாவாக இருக்கும், அதே நடவு கூலி மறுசமயத்தில் ஒன்றேகால் ரூபாயாக மாறிவிடும். சிலசமயங்களில் குறைவதும் உண்டு. ஒவ்வொரு நிமிஷமும் மாறக் கூடியதாக இருப்பதால், அதைக் கணக்கிட்டு எழுதுவது சரியாக, சுலபமாக இருக்காது. கணக்குக் கொடுக்க வேண்டும் என்பது பெரும் பாரமாகத்தான் கருதப்படும். பெரும் நிலக்கிழார்களுக்கு வரி போடுவதை நான் ஆட்சேபிக்கவில்லை. ஆனால், சிறு விவசாயிகள் கணக்குக் கொடுக்க வேண்டும் என்றால், அது செயல் படுத்தக் கஷ்டமாக இருக்கும். ஆகவே கணக்குக் காட்ட வேண்டும் என்றிருப்பதை மாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அப்படி மாற்றினால்தான் எல்லா விவசாயிகளும் திருப்தியடைவார்கள். இந்த பட்ஜட் மற்றவர்களுக்கு நல்ல பட்ஜட்டாக இருக்கும்போது, கிராம மக்களுக்கு மட்டும் இது தொல்லை கொடுக்கிறது என்று இல்லாமல் அமைச்சர் அவர்கள் நல்ல முடிவு அறிவிப்பார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

இப்பொழுது எம்டி. 27 எங்கள் பகுதியில் நிறையக் கொடுக்கப்பட்டு சாகுபடியாகியிருக்கிறது. இந்த சந்தர்ப்பத்தில் கனம் போக்குவரத்து அமைச்சருக்கு எங்கள் நன்றியைச் செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறோம். அவர்கள் கல்லணைக்கு வந்திருந்த போது, கேட்டுக் கொண்டதன் பேரில், தண்ணீர் விடப்பட்டது, உய்யக் கொண்டான் ஆற்றில் நிறைய தண்ணீர் விட்டார்கள். இந்த எம்டி. 27 கோவைக் குறுவையாக சாகுபடி செய்யப் பட்டது. ஆனால் என்ன காரணத்தினாலோ, எங்கள் பகுதியில் நல்ல விளைச்சல் இல்லாமல் நட்டம் ஏற்பட்டுவிட்டது. இதன் காரணம் என்ன என்று சர்க்கார் ஆராய்ச்சி செய்து, இனியாவது இந்த மாதிரியான நஷ்டம் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

* திரு. ஏ. சி. நரசிம்மன்: மதிப்பிற்குரிய சட்டமன்ற துணைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்திலே முதன் முதலாகப் பேச எனக்கு வாய்ப்பு அளித்தமைக்கு தங்களுக்கு என் நன்றியைத் தெரிவிக்கிறேன். இந்த மாமன்றத்திலே மாண்புமிகு முதல் அமைச்சர் சமர்ப்பித்த நிதிநிலை அறிக்கையை பலரும் பாராட்டிப் பேசினார்கள். குறை கண்டவர்கள் குறைவு. இந்த பட்ஜட்



1967 ஜூன் 23]

[திரு. ஏ. சி. நரசிம்மன்]

மக்கள் எல்லோராலும், எல்லாக் கட்சிகளாலும் பாராட்டப் பட்
டிருக்கிறது. அதே நேரத்திலே, இந்த தமிழக அரசு பதவி
ஏற்றுக் கொண்ட நாளிலிருந்து, நல்ல முறையில் ஆட்சி நடத்திக்
கொண்டு வருகிறது என்பதற்கு அறிகுறியாக, அமைச்சர்கள்
தங்கள் சம்பளங்களை பாதியாகக் குறைத்துக் கொண்டிருக்கிறார்
கள். அதோடு இந்த நாட்டிலே சிக்கனத்தைக் கையாள வேண்டும்
என்று தேவையற்ற பதவிகளைக் குறைத்துக் கொண்டு வருகிறார்
கள். அதன் மூலம் பெரும் சிக்கனத்தை ஏற்படுத்த முடியும்.
அப்படிச் சொல்லும் போது மதிப்பிற்குரிய எதிர்க் கட்சிக் துணைத்
தலைவர் அவர்கள், பதவிகளை நீக்குவதன் மூலம் வேலையில்லாத்
திண்டாட்டம் ஏற்படும் என்று குறிப்பிட்டார்கள். இந்த நேரத்
தில் நான் சொல்வதெல்லாம், இந்த இலாகாக்களை உண்டாக்கியது
யார் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இன்றைக்கு தமிழ
கத்தின் வருவாய் 216 கோடி ரூபாய். அதில் 20 கோடி ரூபாய்
சம்பளமாகவும், 27 கோடி ரூபாய் அலவன்சுகளாகவும், அதோடு
24 கோடி ரூபாய் எஸ்டாப்ளிஷ்மெண்ட் செலவுகள் என்றெல்லாம்
போய்விடுகிறது. இன்னும் 7 கோடி அலுவலகச் செலவுகள்.
ஆக இப்படி 77 கோடி ரூபாய்கள் அலுவலர், அலுவலகம் என்றே
செலவாகிவிடுகிறது. இன்னும் 31 கோடிக்கு மேல் வட்டியாகக்
கொடுக்கிறோம். ஆக 50 சத விகிதத்திற்கு மேல் நம் வருமானத்தி
லிருந்து இப்படிப் பட்ட துறைகளில் செலவாகிவிடுகிறது. ஆகவே
இப்படிப் பட்ட சந்தர்ப்பத்தில் தான் சிக்கனத்தைப் பற்றிச்
சிந்திக்கிறார்கள் இன்றைய அரசு. சிக்கனம் அவசியம் என்று
ஏற்படும் போது, தேவையற்ற முறையில், இரண்டு பேர்கள் ஒரே
வேலையைச் செய்துகொண்டு வந்தால், ஒருவரே அந்த வேலையைச்
செய்யட்டும் என்று சொல்வதில் எந்தவிதமான தவறும் இருக்க
முடியாது என்று கருதுகிறேன். அது மட்டுமல்ல, 1957-ல்
பேரறிஞர் அண்ணா அவர்களால் பல திட்டங்கள் கொடுக்கப்
பட்டன. இந்த மன்றத்தில் விவாதத்தைத் துவக்கி வைத்த உறுப்
பினர் அவற்றையெல்லாம் நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக்
கொண்டார்கள். அவை நல்ல திட்டங்கள் என்று வரவேற்றார்
கள். அதை எண்ணிப் பார்க்கும்போது, இன்றைக்கு அவற்றைச்
சிறந்த திட்டங்கள் என்று வரவேற்கும் கட்சி, கடந்த ஆண்டுகளில்
அவற்றை ஒவ்வொன்றாக நிறைவேற்றிக் கொண்டு வந்திருந்தால்,
இன்றைக்கு எவ்வளவு வருமானம் பெருகியிருக்கும் என்பதை
எண்ணிப் பார்க்க வேண்டும். ஆனால் அந்தத் திட்டங்களை அந்த
நேரத்தில் ஏற்றுக் கொள்ளவில்லை. அன்றைக்கு நம்முடைய
வருமானம் 62 கோடி ரூபாய். இன்றைய தினம் அது 216 கோடி
யாகியிருக்கிறது. ஏறத்தாழ 150 கோடி அதிகரித்திருக்கிறது
இந்த 10 ஆண்டுகளிலே. அப்படி உயர்ந்திருக்கும் வருமானத்தை
ஏன் நல்ல காரியங்களுக்குப் பயன்படுத்தியிருக்கக் கூடாது என்று
தான் கேட்கவேண்டியிருக்கிறது. எனவேதான், முந்தைய ஆட்சிக்
காலத்திலே ஏற்படுத்திய ஒவ்வொரு திட்டத்திலும் பெருவாரியான

[திரு. ஏ. சி. நரசிம்மன்]

தொகை நிர்வாகச் செலவுக்காகச் செலவிடப்பட்டதே தவிர, நல்ல பயனுள்ள காரியங்களுக்குச் செலவிடப்படவில்லை என்றுதான் நான் கருதுகிறேன்.

குறிப்பாக, எடுத்துக்காட்டாகக் கூறவேண்டுமானால், விவசாயத் துறையில் உள்ள ஷுகர்கேன் ரிசர்ச் ஸ்டேஷனைப் பொறுத்த வரையில், அதற்கு நிர்வாகச் செலவிற்காக சுமார் மூன்று லட்சம் ரூபாய் செலவிடப்பட்டது. ஆனால் அதே நேரத்தில், அந்தத் திட்டத்தின் பயனுக்காக, 'அப்பரடஸ் அண்டு மெடீரியல்ஸ்' 'கன்டின்ஜென்ஸி அண்டு வொர்க்கிங் எக்ஸ்பென்சஸ்' என்ற வகையில் ஏறத்தாழ ஒன்றரை லட்ச ரூபாய் செலவு செய்கிறோம். ஆக, நிர்வாகச் செலவிற்காக ஏறத்தாழ மூன்று லட்ச ரூபாயும் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு ஒன்றரை லட்ச ரூபாயும் செலவு செய்கிறோம். அதற்காக ஒரு தனி நிர்வாகத்தையே ஏற்படுத்தியிருக்கிறோம். இது இப்படியிருக்க, ஸ்கீம் ஃபார் ஷுகர்கேன் டெவலப்மெண்ட் என்ற ஒரு திட்டத்தை வைத்துக்கொண்டு, அந்தத் திட்டத்தின் நிர்வாகச் செலவிற்காக ஆறு லட்சம் ரூபாய் நாம் செலவு செய்கிறோம். ஷுகர்கேன் டெவலப்மெண்ட் ஸ்கீம் என்பதும், ஷுகர்கேன் ரிசர்ச் ஸ்டேஷன் என்பதும் ஏறக்குறைய ஒரே திட்டத்தின்கீழ் வரக்கூடியவைதான். இப்படியிருக்கக் கூடிய ஒரே திட்டத்திற்காக நிர்வாகச் செலவிற்காக பெருந்தொகையைச் செலவு செய்து, அந்தத் திட்டத்தின் பயனுக்காகக் குறைந்த தொகையை மட்டுமே செலவு செய்கிறோம் என்பதைப் பார்க்கும்போது, நிர்வாகத்திலே சிக்கனம் செய்வதிலே தவறு இருக்க முடியாது. எனவே, நிர்வாகச் செலவில் சிக்கனங்களைச் செய்யவேண்டும் என்ற கொள்கையை இந்த அரசு ஏற்றுக் கொண்டிருப்பது நல்ல முறையில் வரவேற்கத்தக்கதாகும். அந்த வகையிலே எதிர்க் கட்சி நண்பர்களும் வரவேற்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்து, அறிக்கையிடப்பட்ட சரக்குகளைப் பொறுத்தவரை, விற்பனை வரியை இரண்டு சத விகிதத்திலிருந்து மூன்று சத விகிதத்திற்கு உயர்த்தியது தவறு என்ற முறையில் எதிர்க்கட்சியின் சார்பிலே பேசிய நண்பர்கள் குறிப்பிட்டார்கள். அதற்குக் காரணம் யார் என்பதை அவர்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். மத்திய சர்க்கார் நிலக்கடலை எண்ணெய்க்கு மூன்று சத விகிதம் வரி போட்டு இருக்கிறார்கள். எனவே, மத்திய சர்க்கார் போட்ட வரியை விட நாம் குறைவான அளவிலே வரி விதித்தால், அதனால் நமக்குக் கிடைக்கக் கூடிய வருமானம் முழு அளவில் கிடைக்காது என்பதை முதல்வர் அவர்கள் எடுத்துக் காட்டியுள்ளார்கள். எனவே, நமக்குக் கிடைக்கக்கூடிய நியாயமான வருமானம் கிடைக்க, வரியை உயர்த்த வேண்டிய கட்டாயத்திற்கு நாம் வந்திருக்கிறோம். அந்தக் கட்டாயத்தை நமக்கு ஏற்படுத்தித் தந்தது மத்திய சர்க்கார் என்று சொல்லித் தெரிந்து கொள்ள



[திரு. ஏ. சி. நரசிம்மன்]

வேண்டிய நிலை இல்லை. நிர்வாகக் காரியங்களுக்காகவும், கூடுமான வரையில் வருவாயில் எந்தவிதமான [illegible]யும் ஏற்படாமல் இருப்பதற்காகவும் நாம் வரியை உயர்த்தி[illegible] தவிர, பொது மக்களைப் பாதிக்கக் கூடிய வகையில் அந்த [illegible] நாம் உயர்த்தவில்லை என்று நான் தெரிவித்துக் கொள்[illegible] நடுத்தர வகுப்பினருக்கும், ஏழை மக்களுக்கும் பயன்பட[illegible] வகையில் இந்த நிதி நிலை அறிக்கை நல்ல முறையில் வகுக்கப்பட்டி[illegible] என்பதைத் தெரிவித்துக்கொண்டு, இந்த பட்ஜெட்டை நான் வரவேற்று, என்னுடைய உரையை முடிக்கின்றேன்.

திரு. வி. கே. கோதண்டராமன்: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்தச் சபை முன்னால் வைக்கப்பட்டுள்ள வரவு செலவுத் திட்டத்தை நான் வரவேற்றுப் பேச ஆசைப்படுகிறேன். காரணம், சென்ற இருபதாண்டுக் காலமாகப் போடப்பட்டு வந்த அந்தத் திட்டங்களையும் இந்தத் திட்டங்களையும் எடுத்துப் பார்க்கக் கூடிய நேரத்தில், அதைவிட இது எத்தனையோ மடங்கு சிறந்தது என்பதை எனது பெருமதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. கே. விநாயகம் அவர்களோ மற்ற காங்கிரஸ் நண்பர்களோ மறுத்துவிட முடியாது. இதயபூர்வமாக, மனத்திலே கையை வைத்துப் பார்த்து உண்மையைச் சொல்லுவது என்று சொன்னால், உண்மையிலேயே இதை வரவேற்றுத்தான் ஆக வேண்டும். இதில் குறைபாடும் இருக்கலாம். அதையும் எடுத்துக் காட்டி இதில் என்ன என்ன செய்ய வேண்டும் என்பதையும் சொல்லி, மேலும் பல நல்ல திட்டங்களைத் தீட்டுவதற்கான ஆலோசனையையும் கொடுத்தாக வேண்டும். காரணம், இன்றைக்கிருக்கக்கூடிய நிலைமையில், இங்கே வசூலாகக்கூடிய பணம் அத்தனையையும் மத்திய சர்க்காரிலே வைத்துக்கொண்டு, மத்திய சர்க்காரைக் கேட்கக் கூடிய நேரத்தில் அவர்கள் கொடுக்காத நிலையில், அதைக் கேட்டால், "மத்திய சர்க்கார் என்று ஏன் பேசுகிறீர்கள்? அவர்களை ஏன் கேட்கிறீர்கள்?" என்று காங்கிரஸ் நண்பர்கள் பேசுவதில் பிரயோசனம் இல்லை. ஆகவேதான், இன்றைக்குப் பொருளாதாரத்திற்கான வாய்ப்பு, வசதி என்ன என்ன, எந்த எந்த விதத்தில், எந்த எந்த ரூபத்தில், எப்போது, எங்கே எல்லாம் கேட்க வேண்டுமோ அதைக் கேட்டுத்தான் ஆக வேண்டும். ஆகவே, அந்த அடிப்படையில் நான் இதை வரவேற்கக் கூடிய நேரத்தில், இதில் வேடிக்கையான அம்சம் என்னவென்றால், இதுவரையில் இல்லாத அளவிற்கு, ஜாதி ஒழிப்பைப் பொறுத்து, ஆரம்ப கட்டமாக, கலப்புத் திருமணத் திட்டம் பாராட்டத்தக்க தன்மையில் வந்திருக்கிறது. அதுபோன்று, 75 மைல்களுக்கு மேல் உள்ள பஸ் ரூட்களை எடுத்துக் கொள்வது. கல்வித் திட்டத்திலும் இன்றைக்கு ஓரளவுக்கு அபிவிருத்தி அம்சங்கள் காணப்படுகின்றன. புஞ்சை நிலத்திற்குத் தீர்வைகளைத் தள்ளுபடி செய்திருக்கிறார்கள். உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்காக வேண்டி விவசாய அபிவிருத்திக்காகத் தீவிரமான முயற்சி எடுக்கப்பட்

[திரு. வி. கே. கோதண்டராமன்]

டிருக்கிறது. இது போன்ற அம்சங்களைப் பார்க்கக்கூடிய நேரத்தில், இந்த நிதி நிலை அறிக்கையை உண்மையிலேயே பாராட்டாமல் இருக்க முடியாது.

மத்திய சர்க்காரின் மூலமாகச் சென்ற மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களின் மூலமாக மூவாயிரம் கோடி ரூபாய்க்கு மேலே செலவு செய்துவிட்டோம், பார்த்தீர்களா, என்று சொல்லிவிட்டால் மட்டும் போதாது. ஆனால், அதனுடைய பலனை இன்றைக்கு யார் அடையக் கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது? சாதாரண மக்கள் பலனை அடையக் கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறதா? இதையெல்லாம் சிந்திக்கக் கூடிய நேரத்தில், அதையெல்லாம் நிலப் பிரபுக்களும் ஏகபோக முதலாளிகளும் அனுபவிக்கக் கூடிய தன்மையில் அந்த நிலைமை உண்டாகி இருக்கிறது. அதற்காக வேண்டியே, சென்ற காலம் முதல் இன்று வரையில் நாங்கள் எடுத்துச் சொல்லி வந்திருக்கிறோம். அதுவேதான் இன்றைக்கு நடந்தும் கூட. ஆகவே, சமூக சீர்திருத்தம் என்ற அடிப்படையிலே பார்க்கும்போது, இது சாதாரண விஷயம் அல்ல. இதற்கு மிகப் பெரிய புரட்சி தேவை. சமூகச் சீர்திருத்தம் தேவை என்று சொல்லும் நேரத்தில், இவ்வளவு காலமாக மனித சமுதாயம் ஆரம்பமான காலத்திலிருந்து இன்றும் மிகப் பெரிய மூடப் பழக்க வழக்கங்கள் ஊறிக் கிடக்கக்கூடிய ஒரு சமுதாயமாக நாம் இருக்கிறோம். இதற்காக வேண்டி, கலப்புத் திருமணம் செய்து கொள்ளுகிறவர்களுக்குப் பொற்பதக்கம் கொடுத்துவிடுவதனால் மட்டும் இந்தப் பிரச்சினை தீர்ந்துவிடக்கூடிய சமாசாரம் அல்ல. இது வழக்கமாகவே நடந்துகொண்டு வருகிற விஷயம். ஆகவே, கலப்புத் திருமணம் செய்துகொள்ளக் கூடியவர்களுக்குப் பதவியில் முன்னுரிமை அளிக்கப்படவேண்டும். அரிசன மக்களுக்கு எப்படிக் கொடுக்கப்படுகிறதோ, தியாகிகளுக்கு எப்படிக் கொடுக்கப்படுகிறதோ, அப்படி இந்தக் கலப்புத் திருமணம் செய்து கொள்ளக்கூடியவர்களுக்கும், சட்டப்படி, முதல் சலுகை அளிக்கக்கூடிய தன்மையில் நிலைமை வருவதன் மூலமாகத் தான் மிகப் பெரிய அளவுக்குக் கலப்புத் திருமணத்தை நாம் எதிர்பார்க்கலாமே தவிர, வெள்ளிப் பதக்கம் கொடுத்தாலும் சரி, தங்கப் பதக்கம் கொடுத்தாலும் சரி, அதன் மூலமாகப் பலனை எதிர்பார்க்க முடியாது என்பதை இந்த நேரத்தில் நான் தாழ்மையுடன் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கோயிலைத் திறந்திருக்கிறோம், பார்த்தீர்களா? என்று காங்கிரஸ்காரர்கள் சொல்லக்கூடிய நிலைமை இருக்கலாம். அந்தக் கோயிலில் எந்த அளவிற்குத் தாழ்த்தப்பட்ட மக்கள் போகிறார்கள் என்பதும் நமக்குத் தெரியும். இன்றைக்கு, உயர்ந்த ஜாதிக்காரருக்குத் தனிச் சுடுகாடு, தாழ்த்தப்பட்டவர்களுக்குத் தனிச் சுடுகாடு, முஸ்லீம்களுக்குத் தனிச் சுடுகாடு. உயர்ந்த ஜாதிக்காரர்களிலே பல பிரிவினர் இருக்கிறார்களே, அவர்களுக்கும் தனித் தனிச் சுடுகாடுகள்.





[திரு. வி. கே. கோதண்டராமன்]

அதேபோல், தாழ்த்தப்பட்டவர்களிடையே கூட, தாழ்த்தப்பட்ட அரிசன மக்களுக்குத் தனிச் சுடுகாடு, அருந்ததியர்களுக்குத் தனிச் சுடுகாடு. இந்தத் தனித்தனிச் சுடுகாடுகளையெல்லாம் நீக்கி எல்லோருக்கும் ஒரே சுடுகாடாக ஆக்கக் கூடிய அளவிற்கு முதலில் முயற்சி எடுப்போமானால், சமூக சீர்திருத்தத்தை உண்மையிலேயே உண்டாக்க முடியும். அதற்கு மிகப் பெரிய துணிச்சல் இருந்தாகவேண்டும். அதற்கு எங்கள் கட்சி கண்டிப்பாகப் பக்கபலமாக இருக்கும். அதற்கும் முயற்சி எடுத்தாக வேண்டும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

சமூக சீர்திருத்தம் ஏற்பட வேண்டுமானால், அதற்குத் தாய்க்குலம் தான் முன்கை கொடுத்தாக வேண்டும். அவர்கள் முதலில் திருந்தியாக வேண்டும். நாட்டில் அவர்கள் 52 சத விகிதம் அல்லது 53 சத விகிதம் இருக்கிறார்கள் என்று கருதுகிறேன். ஆகவே, அவர்களுக்கு, உத்தியோகத்திலும் சரி, கல்லூரிகளிலும் சரி, அல்லது வேறு எல்லாத் துறைகளிலும், பெண்களுக்கு 50 சத விகித இடங்களைக் கண்டிப்பாகக் கொடுக்க வேண்டும் என்ற அடிப்படையில் இன்றைக்கு நமது சர்க்கார் முயற்சி எடுத்தாக வேண்டும் என்பதையும் இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

பஸ் போக்குவரத்தைப் பொறுத்த வரையில், 75 மைல்களுக்கு மேல் உள்ள ரூட்களைச் சர்க்கார் எடுக்கக்கூடியதை நாம் பாராட்டுகிறோம். அது போதாது. ஐம்பது மைல்களுக்குமேல் இருக்கக் கூடியதைக் கூட எடுக்கலாம். பணம் உடனே கொடுக்கவேண்டும் என்ற நியதி ஒன்றும் இல்லை. ஐந்து வருஷம் அல்லது பத்து வருஷத் தவணைகளில் கொஞ்சம் கொஞ்சமாகக் கொடுக்கலாம். மேற்கொண்டு புதிய பஸ் சர்விஸ்களை சர்க்காரே எடுத்து நடத்த வேண்டுமேயொழிய தனிப்பட்டவர்களுக்குக் கொடுக்கக்கூடாது. சின்ன ரூட்டாக இருந்தாலும், பெரிய ரூட்டாக இருந்தாலும், சர்க்காரே எடுத்து நடத்த வேண்டும். அது மட்டுமல்ல, இதுவரை பஸ் ரூட்களைப் பொறுத்த வரையில், காங்கிரஸ் சர்க்கார் நடத்தி இருக்கக்கூடிய கொடுமை இவ்வளவு அவ்வளவு என்று சொல்ல முடியாது. பஸ்போக்குவரத்துத் துறையைக் கவனித்துக்கொண்டிருந்த முன்னாள் அமைச்சர் திரு. வெங்கட்டராமன் அவர்கள் பத்து சதவீதம் இன்க்ரீஸ் பண்ண வேண்டும் என்று உத்தரவு போட்டதும், அதன் அடிப்படையில் அதிகாரிகள் அதனை எடுத்து அதிகப்படுத்த வேண்டும் என்ற அடிப்படையிலே அவர்கள் முயற்சி செய்ததும், அதைத் தடுத்து எந்த அளவுக்கு நிறுத்தப்பட்டது என்பதையெல்லாம் எனது பெருமதிப்பிற்குரிய காங்கிரஸ் நண்பர்கள் சிந்திக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

[திரு. வி. கே. கோதண்டராமன்]

மு. ப. 11-30 அதேமாதிரி மதுரை மாவட்டத்தில் டி.வி.எஸ். பஸ் போக்குவரத்து ஏகபோகமாக இருக்கிறது. பத்துப் பதினைந்து வருஷங்களாக நாம் புதிய ரூட்டுகளை சிருஷ்டிக்காமல் வைக்கப்பட்டு விட்டோம். மதுரை அதிகப்படியான ஜனத் தொகையைக் கொண்ட நகரம். அதைவிடக் குறைந்த ஜனத் தொகையான கோயம்புத்தூரிலே, 120, 130 டவுன் பஸ்கள் ஓடிக்கொண்டிருக்கிற நேரத்திலே மதுரை நகரத்தில் 60 பஸ்கள் தான் ஓடுகின்றன. அதுமட்டுமா? 1959-ம் வருஷத்திலே சர்வே செய்ய மதுரைக்கு நியமிக்கப்பட்ட விசேஷ அதிகாரி 120 பஸ்களை விட வேண்டுமென்று சொல்லியும், அதை நிறைவேற்றாமல், டி.வி.எஸ். அய்யங்காருக்குச் சாதகமாக கடந்த அரசு நடந்து வந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இதுபோன்ற விஷயங்கள் ஒன்றிரண்டு அல்ல. கடந்த இருபது ஆண்டுகளாக அந்த அளவுக்கு முதலாளிகளுக்குச் சாதகமான போக்கு இருந்து வந்தது. மேலும் இன்றைய தினம் பஸ் ரூட்களை அதிகப்படுத்தக் கூடிய தன்மையிலேயே இந்த அரசு கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக விவசாய அபிவிருத்தி. விவசாய உற்பத்தி என்று சொல்லக்கூடிய நேரத்தில் நாடும் முன்னேற வேண்டும்; நாட்டு மக்களும் முன்னேற வேண்டும். உணவு உற்பத்தி மாத்திரமல்ல. இன்று எல்லாப் பிரச்சினைகளும் என்ஜினியரிங் இலாகா கையில் இருக்கிறது. அதில் குறைபாடுகள் நிறைய இருக்கின்றன. நூற்று எழுபது எக்சிக்யூடிவ் என்ஜினியர்கள் இருக்கிறார்கள் என்றால், அதில் 40 பேர்கள்தான் நிரந்தரமாக்கப்பட்டவர்கள. இதுபோல 600 அசிஸ்டென்ட் என்ஜினியர் இருக்கிறார்கள் என்றால் அதில் 100 பேர்கள்தான் நிரந்தரமாக்கப்பட்டவர்கள். இவர்களுடைய பிரச்சினைகளையெல்லாம் தீர்த்து வைப்பதன் மூலமாகத்தான் நல்ல தீர்வு காணமுடியும். தவிர, என்.ஜி.ஓ.-க்கள், ஆசிரியர்கள் இவர்களுடைய பிரச்சினைகள் கூட தீர்க்கப்படவில்லை. நகரட்டுப்படி, பஞ்சப்படி போன்ற குறைந்தபட்ச பிரச்சினைகள் இவைகளையெல்லாம் தீர்த்து வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். இன்றைக்குக் குறிப்பாக விவசாய அபிவிருத்தி ஏற்பட வேண்டுமானால், ஏற்கெனவே அன்றைய தினம் காங்கிரஸ் ஆட்சியினால் கொண்டுவரப்பட்ட விவசாய நில சீர்திருத்த மசோதா (லேண்ட் சீலிங் பில்) நாடகத்தை நாம் அவ்வளவு பேர்களும் ஒன்று சேர்ந்து திருத்த வேண்டும். இந்த மசோதாவினால் நிலபிரபுக்களே ஏகபோகமாக பயன் அடைந்திருக்கிறார்கள். இன்றைக்கு ஐந்து பேர்கள் கொண்ட ஒரு குடும்பத்திற்கு 15 ஏக்கருக்கு மேல் இருக்கக்கூடாது என்ற அளவில் அந்த மசோதாவைத் திருத்தி மாற்றியமைக்கக் கூடிய விதத்தில் கவனம் செலுத்த வேண்டும். இன்றைக்கு குத்தகை கொடுக்காவிட்டால், திடீர் திடீரென்று நிலத்திலிருந்து விவசாயிகளை வெளியேற்றக்கூடிய நிலைமை இருக்கிறது. அப்படி அவர்களை வெளியேற்றக் கூடாது.





[திரு. வி. கே. கோதண்டராமன்]

அந்த அளவுக்கு உறுதியான சட்டத்தைக் கொண்டுவர வேண்டும். வட ஆர்க்காடு மாவட்டத்திலே உணவு உற்பத்தியானது தஞ்சாவூர் ஜில்லாவுக்கு அடுத்தபடியாக இருக்கிறது. விவசாய உணவு உற்பத்திக்கு பல முட்டுக் கட்டைகள் இருக்கின்றன. சிறிய பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களையெல்லாம் நிறைவேற்ற வேண்டும். குடியாத்தம் தாலுகாவிலே மோர்தானா டாம் என்று இருக்கிறது. அதைக் காட்டித்தான் திரு. காமராஜ் நாடார் அவர்கள் ஜெயித்து வந்தார். மேலும் மூடியுள்ள தொழிற்சாலைகளைத் திறந்து நடத்த வேண்டும். வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க வேண்டும். தூத்துக்குடித் துறைமுகம், பாம்பன் பாலம், சேலம் உருக்குத் தொழிற்சாலை இவைகளை ஆரம்பிப்பதன் மூலம் பத்தாயிரக்கணக்கான பேர்களுக்கு வேலை கிடைக்கும். புதிய வரிகள் போடுவதைப்பற்றி ஆட்சேபணை இல்லை. ஏழைமக்களை—நடுத்தரவர்க்கத்தினரைப் பாதிக்கக்கூடிய வரிகளைப் போடக் கூடாது.

அடுத்தபடியாக, மதுவிலக்கை ரத்து செய்வதன் மூலமாக ஏராளமான பேர்களுக்கு வேலை கிடைக்கும். எங்கு பார்த்தாலும் லஞ்சம் மலிந்திருக்கிறது என்று சொன்னால் அதற்கு மதுவிலக்குக் கொள்கையே காரணமாகும். மதுவிலக்கு வந்ததிலிருந்தே ஏராளமான—புதுப்புது வியாதிகளும் வந்திருக்கின்றன என்பதை யாரும் மறுக்க முடியாது. இது டாக்டர்களின் போதனை. இன்றையதினம் போலீசாரின் தரம் குறைந்திருக்கிறதென்றால், அதற்கு மதுவிலக்குக் கொள்கையே காரணமாகும். இன்றைக்கு முதலமைச்சர் அவர்கள் மதுவிலக்குக் கொள்கை நீடிக்க வேண்டுமென்று உண்மையிலே சொல்லுகிறாரா அல்லது காங்கிரஸ்காரர் வாயிலிருந்து என்ன வருகிறது என்று தெரிந்துகொள்வதற்காக அப்படிச் சொல்லுகிறாரா? ஆகவே, மதுவிலக்கை ரத்து செய்வதன் மூலம் பல நன்மைகள் ஏற்படும். தமிழகத்தைச் சுற்றிலும் மதுவிலக்கு ரத்தாகும்போது மத்தியில் இருக்கும் தமிழர்கள் மட்டும் பொருளாதார ரீதியில் பாதிக்கப்படக் கூடாது. ஏழை மக்கள் பாதிக்கக்கூடாது—தாழ்த்தப்பட்ட மக்கள் பாதிக்கப்படக் கூடாது. மதுபானம் லட்சக்கணக்கான வருஷத்திற்கு முன்னாலே தேவாதி தேவர்களால் அருந்தப்பட்ட பானமாகும். (மணியடிக்கப்பட்டது.)

அந்தக் காலத்திலிருந்து மதுபானம் இருந்து வந்தது. ஆகவே முதலமைச்சர் அவர்கள் இதைப் பரிசீலனை செய்து பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தவிர, ஏழை எளிய மக்களின் வருமானம் குறைந்துவிட்டிருக்கிறது. அவர்கள் தங்கள் துணிமணிகளைக்கூட மார்வாடிக் கடைகளில் அடகு வைத்திருக்கிறார்கள். அவர்களின் வருமானத்தில் பெரும்பங்கு வட்டியாகக் கொடுக்கப்படுகிறது. எனவே, சர்க்காரே சிறிய சிறிய வட்டிக்கடைகளைத் திறக்க வேண்டும். இதனால் சர்க்காருக்கு வருமானமும் கிடைக்கும் . . . (மணியடிக்கப்பட்டது).

* திரு. செ. பாலசுப்பிரமணியன்: தலைவர் அவர்களே, ஒரு நல்ல வரவு-செலவுத் திட்டத்தைச் சமர்ப்பித்ததற்காக முதலமைச்சர் அவர்களை நான் பாராட்டுகிறேன். முதலமைச்சர் அவர்கள் தங்களுடைய உரையிலே, குறிப்பாக மாநில அரசாங்கமும், மத்திய அரசாங்கமும் எந்த முறையிலே அபிப்பிராயபேதத்தை வைத்திருக்கிறது என்பதையெல்லாம் சொன்னார்கள். சேலம் இரும்பாலைத் திட்டம், தூத்துக்குடி துறைமுகத் திட்டம் இவைகளுக்குச் சாதகப் போராட வேண்டும்—கிளர்ச்சி செய்ய வேண்டும்—சர்வ கட்சி கமிட்டி அமைத்துப் பொதுஜனக் கருத்தைத் திரட்ட வேண்டும். ஒருமுகமாக மத்திய அரசை நிர்ப்பந்தப்படுத்த வேண்டுமென்று முதலமைச்சர் அவர்கள் விரிவாகச் சொல்லியிருக்கிறார்கள். தற்போது மத்திய அரசாங்கத்திலே நிதி மந்திரியாக இருக்கும் திரு. மொரார்ஜி தேசாய் அவர்கள், நான்காம் ஐந்தாண்டுத் திட்டம் கூட முழுமையாக நிறைவேற்ற மத்திய அரசாங்கம் தயாராக இருக்கிறதா, இல்லையா என்ற கேள்வியை எழுப்பியிருக்கிறார்கள். பிரதம மந்திரியாக இருக்கும் திருமதி இந்திரா அம்மையார் அவர்களும் 'பிளானிங் ஹாலிடே'—திட்ட ஓய்வு என்று சொல்லிக்கொண்டு வருகிறார்கள். சேலம் இரும்பாலைத் திட்டம், தூத்துக்குடி துறைமுகத் திட்டம் துவக்கிட மத்திய அரசாங்கம் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலே 60 கோடி ரூபாய் அளவில் திட்டம் அமைக்கப்பட்டது. ஆனால் தற்போது சந்தேகமாயுள்ளது. ஆகவே, இரும்பாலைத் திட்டம், தூத்துக்குடி துறைமுகத் திட்டம், அனல் மின்சாரத் திட்டம், கடலாக்கல் திட்டம் போன்றவைகளையெல்லாம் நிச்சயமாக நடத்தித்தர வேண்டுமென்று சர்வகட்சி கமிட்டி அமைத்து அதற்கான எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ளவேண்டுமென்று இந்த அரசை நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, இந்த பட்ஜெட்டைப்பற்றிப் பேசும்போது இதில் சில பாராட்டத்தக்க அம்சங்கள் இருக்கின்றன. ஒன்று புஞ்சை நிலத்திற்கு நிலவரி ஒழிப்பது; இரண்டாவது படி அரிசித் திட்டம்; மூன்றாவது 1,500 ரூபாய் ஆண்டு வருமானம் உள்ளவர்களுக்கு பி.யு.சி. வரை கல்விச் சலுகை அளிப்பது. இந்தத் திட்டங்களையெல்லாம் பார்க்கும்போது அவர்களுக்குப் பாராட்டு தெரிவித்துக்கொண்டு ஒரு சில யோசனைகளைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். படி அரிசித் திட்டம் என்று சொல்லும்போது, சென்னை நகரத்திலும், கோவை நகரத்திலும் சட்ட பூர்வமாக ரேஷன் இருக்கும் பகுதிகளில் மட்டும்தான் அமுலாக்கப் பட்டிருக்கிறது. இந்தத் திட்டம் விவசாய தானியம் கிடைக்காத எல்லா இடங்களுக்கும் விஸ்தரிக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். சென்னையிலே இருக்கிற ஒருவர் தினசரி இரண்டு ரூபாய், மூன்று ரூபாய் சம்பாதிக்கிறார். கிராமப் பகுதியில் இருப்பவர்களுக்கு ஒரு நாளைக்கு ஒரு ரூபாய்கூட கிடைக்காது. சென்னையிலே மூன்று ரூபாய் சம்பாதிக்கும் ஒரு தொழிலாளிக்கு ரூபாய்க்கு ஈரோட்டுப் படியில் இரண்டு



அரிசி கிடைக்கிறது. கோயம்பத்தூர் ஜில்லாவில்—மற்ற மாவட்டத்தில் வறண்ட பகுதிகளில் இருப்பவர்களுக்கு ரூபாய்க்கு ஒரு படி அரிசி கிடைக்காமல் அவர்கள் ஒரு படி அரிசி 1¼ ரூபாய் கொடுத்து வாங்கக்கூடிய நிலைமை இருந்து வருகிறது. மூன்று ரூபாய் சம்பாதிப்பவர்களுக்கு ரூபாய்க்கு ஒரு படி அரிசி, குறைவாகச் சம்பாதிப்பவர்களுக்கு ரூபாய்க்கு ஒரு படி அரிசி கிடைக்காத நிலைமை. விவசாயிகளல்லாத மக்கள் கஷ்டப்படுகிறார்கள். இந்தத் திட்டத்தை மற்றவர்களுக்கும் நிச்சயமாக விஸ்தரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக நான் சொல்லப்போவது எல்லாம் இப்போது சமர்ப்பிக்கப்பட்டிருக்கிற பட்ஜெட் மிகக் கஷ்டமான சூழ்நிலையில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. இதில் பல நல்ல அம்சங்கள் இருக்கின்றன. பஸ்களைத் தேசியமாக்கும் அம்சம் இருக்கிறது. இப்படியெல்லாம் நல்ல அம்சம் இருந்தபோதிலும் சோஷலிச லட்சியத்தை அடைவதற்கு இது அடிகோலியாக அமையுமா என்று பார்த்தால் பயத்தோடு சொல்ல விரும்புகிறேன். இது நிச்சயமாக அத்தகைய அடிகோலியாக அமையாது. பட்ஜெட்டில் முக்கியமான அம்சம் பஸ்களைத் தேசியமாக்குவது, படி அரிசி போடுவது, உற்பத்தியைப் பெருக்குவது ஆகும். சோஷலிசத்திற்கு அடிப்படை உற்பத்திப் பெருக்கம். இரண்டாவது வேலை வாய்ப்பு, மூன்றாவது சமூகத்தில் உள்ள பொருளாதார ஏற்றத் தாழ்வுகளைக் குறைத்தல், முதலாவதாக உற்பத்திப் பெருக்கம் என்கிறபோது இந்த வரவு-செலவுத் திட்டத்தில் விவசாய உற்பத்திப் பெருக்கம் பற்றிப் பேசப்படுகிறது. ஆனாலும் விவசாய உற்பத்திப் பெருக்கத்திற்கு இந்த அரசு நவீன விவசாய முறையை நம்பியிருக்கிறது. தஞ்சை ஜில்லாவிலே ஒருபோகம் விளைந்த நிலத்தை இருபோகமாக மாற்றுவதை நம்பியிருக்கிறது. பொறுக்குவிதைகளை நம்பியிருக்கிறது. ஆனால் அடிப்படை அம்சம் விவசாயிகளுக்கு ஊக்கம் அளிக்கவேண்டும் என்பது தான். எவன் நேரிடையாக விவசாயத்தில் ஈடுபடுகின்றானோ அவனுக்கு நிலம் சொந்தமாக்கப்படவேண்டும். அந்த அடிப்படையில் சீர்திருத்தம் செய்கிற அளவு நிலச்சீரமைப்பு வரவேண்டும். காங்கிரஸ் அரசாங்கம் கொண்டு வந்துள்ள நிலச் சீர்திருத்தங்களை நல்லமுறையில் சீர்திருத்தி அவசியமான பல நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் இந்த அரசு என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தொழில்துறையை எடுத்துக்கொண்டால் நம் தேசத்தில் தமிழ்நாட்டில் தொழில் மந்தம் ஏற்பட்டிருக்கிறது. அந்தத் தொழில் மந்தத்தை போக்க வழிவகைகளைக் கண்டு—மத்திய அரசாங்கம் செய்யுமோ, மாநில அரசாங்கம் செய்யுமோ—உடனடியாகத் தக்க வழிவகைகளை மேற்கொண்டாக வேண்டும். வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமாக இருக்கிறபோது

[1967 ஜூலை 23

[திரு. செ. பாலசுப்பிரமணியன்]

அரசாங்கத்திடம் வேலை நீக்கம் செய்வதாகச் சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். ஆனால் வேலை கிடைக்காத நிலை உருவாகிக் கொண்டிருக்கிறது. கிராமங்களில் இருக்கும் மக்கள் நகரத்தை நோக்கி வருகிற காட்சியை, ஒருபுறம் பார்க்கிறோம். நகரத்திலும் கூட வேலை வாய்ப்பு கிடைக்காத நிலை ஏற்பட்டிருக்கிறது. இதைப் போக்க அரசாங்கம் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சொல்லப்போனால் பொருளாதார நிரவல், பொருளாதார நிரவல் என்கிறபோது தொழில் உற்பத்திச் சாதனங்களை தேசியமாக்குவது ஒன்றின் மூலமாகத்தான் முடியும். போக்குவரத்துச் சாதனத்தைத் தேசியமாக்குவதால் அல்ல. ஆகவே, பஸ் போக்குவரத்தை தேசியமயமாக்கிவிட்டோம் என்று சொன்னால் சோஷலிசத் தத்துவத்திற்கு அடிகோலியாகிவிட்டது என்பதை நான் நிச்சயமாக ஒப்புக்கொள்ள முடியாது. பஸ் போக்குவரத்தை தேசியமாக்கத்தான் வேண்டும். கேரள அரசாங்கம் செய்திருக்கிறது. மைசூர் அரசாங்கம் செய்திருக்கிறது. உத்திரப்பிரதேச அரசாங்கம் செய்திருக்கிறது. இந்திய அரசாங்கம் கூட ரயில்வேயை தேசியமாக்கியிருக்கிறது. ஆனால் அடிப்படைத் திட்டம் என்னவென்றால் முதலாளிகள் ஏகபோகச் சாம்ராஜ்யத்துக் காரணமாக இருக்கிற உற்பத்திச் சாதனங்களை தேசியமாக்குவது ஒன்றுதான் முதலாளி தொழிலாளி என்கிற வர்க்க பேதமற்ற சமுதாயத்தை ஏற்படுத்துவதற்கு உதவி செய்யும். ஆகவே, மில்களைக் கூட நமது அரசே எடுத்து நடத்த நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இம்மாதிரி பல திட்டங்களை அமல் நடத்துவார்களேயானால் பொதுமக்கள் ஆதரவு கிடைக்கும். மற்றொன்றைக் குறிப்பிடவிரும்புகிறேன். இப்போது தமிழ் நாட்டில் வளர்ந்து வரும் ஜனத்தொகை ஆண்டு ஒன்றுக்கு 8 லட்சம். இப்படி ஆண்டு ஒன்றுக்கு எட்டு லட்சம் பெருகி வருகிற ஜனத்தொகைக்கு உணவு, உடை, வீட்டு வசதி, வேலை வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்க நாம் ஒவ்வொரு ஆண்டும் நம்முடைய நடவடிக்கைகளை விஸ்தரித்துக் கொண்டே போகவேண்டும். இருந்து இந்த அரசு தொடர்ந்து வருகிற பட்ஜெட்டிலும் என்னென்ன செய்ய வேண்டுமென்பதைப் பற்றி நன்றாக ஆலோசித்து அதற்கான நடவடிக்கைகளை எடுக்கக் கொள்ளவேண்டும். குறிப்பாக, இந்த வருடத்திற்கு ஒரு குறிப்பிட்ட தொகை பட்ஜெட்டில் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அடுத்த ஆண்டு தேவை அதிகமாகிறபோது அதற்கேற்ற வகையில் நாம் திட்டங்களை அமல் நடக்கவேண்டும். இப்படியே வளர்ந்து வருகிற பிரச்சினையை எப்படிச் சமாளிப்பது என்பதிலும் நாம் வழிமுறைகளைக் கண்டு பிடித்தாக வேண்டும்.



1967 ஜூலை 23]

[திரு. செ. பாலசுப்பிரமணியன்]

கடைசியாக ஒன்று. மாநில அரசின் கோரிக்கைகளை மத்திய அரசு நிராகரிப்பதும், மாநில அரசு மத்திய அரசோடு போராட வேண்டுமென்பதாகவும் அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இப்போது அதிகாரத்தில் இருக்கிற திராவிட முன்னேற்றக் கழகம் ராஜ்ய அரசியல் கட்சி. ராஜ்ய அரசியல் கட்சியாக இருக்கிற திராவிட முன்னேற்றக் கழகம் மத்திய அரசோடு எதிர்த்துப் போராட அதிக வலுப் பெற்றதாக இருக்க வேண்டுமென்றால், இது ஒரு அகில இந்தியக் கட்சியாக மாற வேண்டும். ஆகவே, திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்கள் ராஜ்ய அரசியல் கட்சியாக இருக்கிற அவர்களுடைய கட்சியை ஒரு அகில இந்தியக் கட்சியாக மாற்றிக் கொள்வதற்கு முன்வர வேண்டும். கிணற்றுத் தவளையாக இருக்கிற நிலையை மாற்றி சமுத்திரத் தவளையாக ஆக வேண்டும் என்பதாகக் கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* திரு. வி. எஸ். சண்முகம் : சட்ட மன்றத் துணைத் தலைவர் அவர்களே, 1967–68-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் மீது பேச நல்வாய்ப்புக் கொடுத்ததற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

(திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி—தலைமை)

விவசாயிகளுக்கு நன்மை செய்வதற்காக புஞ்சை நிலங்களின் மீதான தீர்வையை இந்த அரசு நீக்குவதற்கு முன் வந்திருப்பதற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதைப் பற்றிக் காங்கிரஸ் உறுப்பினர்கள் கூறுகிறபோது புஞ்சை நிலங்களுக்கான தீர்வையை மட்டுந்தானே நீக்கினார்கள், நாங்கள் பதவிக்கு வந்திருந்தால் நஞ்சை நிலங்களுக்கான தீர்வையைக் கூட நீக்குவதாகச் சொன்னோம் என்றார்கள். ஆனால் முன்பு இருந்த அரசாங்கம் நில வரியை நீக்குவதாக சொன்னபோதே உணவு தானிய கொள்முதலை அரசாங்கமே மேற்கொண்டு அதனால் வருகின்ற லாபத்தைக் கொண்டு இந்த நஷ்டத்தை ஈடு செய்து கொள்ளலாம் என்று கருதிற்று. ஆனால் இன்றையதினம் அரசாங்கம் எல்லா தானியத்தையும் கொள்முதல் செய்யாது தேவைப்படுகிற அளவு கொள்முதல் செய்து கொண்டு விடுகிற போதே விவசாயிகளுடைய நிலை மோசமாக இருக்கிறது. எல்லா தானியங்களையும் அரசாங்கமே கொள்முதல் செய்வது என்றால், உண்மையிலேயே விவசாயிகளுடைய நிலைமை மிக மிக பாதிக்கப்பட்டிருக்கும். இதை நமது முதலமைச்சர் அவர்களே சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். முன்பு இருந்த அரசு நிலவரியை ஒரு லாப நோக்கத்தோடேயே எடுத்துவிடுவதாக இருந்தது. அதைத் தவிர்த்து ஏழை எளிய விவசாயிகளுடைய நிலை பாதிக்கப்படக் கூடாது என்கிற முறையில் தேவைப்படுகிற அளவு மட்டும் கொள்முதல் செய்து கொள்வது என்று தீர்மானித்துக் கொண்ட இந்த அரசு புஞ்சை நிலங்களின் மீதுள்ள வரியை மட்டும் ரத்து செய்

[1967 ஜூன் 23

[திரு. வி. எஸ். சண்முகம்]

இருக்கிறது. சோளத்தையும் கம்பையும் கூட உணவுப் பொருள் என்ற அடிப்படையில் அரசாங்கந்தான் கொள்முதல் செய்யும் என்று சொன்னால், பல ஏழை எளிய விவசாயிகள் பாதிக்கப் பட்டிருப்பார்கள். ஆகவேதான் புஞ்சை நிலத்திற்கான வரியை ரத்து செய்துவிட்டு, அதிக வருமானம் உள்ளவர்களிடம் கொஞ்சம் வரி வாங்குவது என்ற அடிப்படையில் விவசாய வருமான வரியை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இதைப் பாராட்டவேண்டும்.

புதுக்கோட்டைக்குப் பக்கத்தில் இருக்கிற குடுமியாமலைப் பகுதியில் 3,500 ஏக்கர் நிலத்தை விவசாய வளர்ச்சியின் கீழ் கொண்டு வருவதற்கான திட்டம் நிதிநிலை அறிக்கையில் காணப் படுகிறது. புதுக்கோட்டைப் பகுதியைச் சேர்ந்தவன் என்ற காரணத்தால், அதனை நான் பாராட்டி வரவேற்கிறேன். அதிக மகசூல் தரக்கூடிய ஏ.டி. 27 ரக நெல்லை மிகப் பெரிய அளவில் பயிர் செய்ய திட்டமிடப்பட்டுள்ள குறிப்பும் இந்த அறிக்கையில் இருக்கிறது. இந்த வகை நெல் உரத்தையே நம்பியிருக்கிற நெல்லாகும். உரம் இட்டால் நல்ல மகசூல் தரும். அதற்குத் தக்க ரசாயன உரத்தைக் கொடுத்தால்தான் இதனால் நல்ல பலனைப் பெறமுடியும் என்பதை விவசாயத்தில் அனுபவமுள்ளவர்கள் நன்கு அறிவார்கள். ஆகவே, இப்படி உற்பத்தியை அதிகமாக்கவேண்டுமென்று இந்த அரசு நினைக்கின்ற நேரத்தில் மத்திய அரசிலிருந்து வருகின்ற இரசாயன உரத்தினுடைய அளவு வரவேண்டிய அளவிற்கு வராமல் மிகப் பெரிய அளவிலே குறைந்து இருப்பதைப் பார்க்கிறோம். நாம் உற்பத்தியைப் பெருக்கவேண்டுமென்ற எண்ணத்தில் நாம் புதிய முறைகளைப் புகுத்திக்கொண்டு வருகின்ற நேரத்தில் நியாயமாக நமக்கு வரவேண்டியவற்றை கொடுக்காமல் குறைத்துக்கொண்டு வருவதை நாம் பார்க்கிறோம். விவசாயத்திற்கென்று நாம் கேட்கின்ற அத்தனையும் மத்திய அரசால் குறைத்துக் கொடுக்கப் படுகின்ற நிலைமையைத்தான் நாம் பார்க்கிறோம். நாம் நல்ல நிலைமையை உருவாக்க வேண்டுமானால், மத்திய அரசாங்கத்தை வற்புறுத்தி எந்த அளவுக்கு மக்களுக்கு வழிவகை செய்ய முடியுமோ, அந்த வழிவகைகளைச் செய்யவேண்டும். மத்திய அரசை நாம் கேட்கின்றபொழுது எதிர்க்கட்சி உறுப்பினர்களும் அதற்கு ஒத்துழைக்கின்ற வகையிலே மத்திய அரசை இது சம்பந்தமாக வலியுறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, பஸ் தேசியமாக்கப்படுவதைப்பற்றிச் சொல்ல விரும்புகிறேன். முன்பு நடந்த சட்ட மன்றத் தொடர் கூட்டத்தில் பஸ்ஸை தேசியமயமாக்குவது தேன் எடுப்பது போன்றது. தேனை எடுக்கும்பொழுது தேனீ கொட்டிவிடுமே என்ன செய்வீர்கள் என்று கேட்டார்கள். அதற்கு மதிப்பிற்குரிய கலைஞர் கருணாநிதி அவர்கள் கொடுக்கை எப்படி வெட்ட வேண்டுமென்று எங்களுக்குத் தெரியும், அதே நேரத்தில் தேனைப் பாதுகாப்பாக எடுக்கவும்



1967 ஜூன் 23]

[திரு. வி. எஸ். சண்முகம்]

தெரியும் என்று அன்று சொன்னார்கள். அதை இன்று செய்து காட்டுகிறோம். மிகப் பெரிய கற்பனைகளையெல்லாம் செய்து கொண்டிருந்த பஸ் முதலாளிகள் இன்று ஒன்றும் செய்ய முடியாத அளவுக்கு நாம் இன்றைக்கு தேசியமயமாக்கிக் கொண்டிருக்கிறோம். இந்த நிதி நிலை அறிக்கையிலே மருந்து இருக்கும் என்று சொன்னார்களோ, மருந்து ஒன்றும் காணப்படவில்லை என்பதைச் சொன்னார்கள். மருந்தை சுலபமாக எடுக்கக் கூடிய இடத்தில் நீங்கள் வைக்கவில்லை, மிகவும் சிரமமான இடத்தில் நீங்கள் வைத்து விட்ட காரணத்தினாலே மிகவும் சிரமப்பட்டு அதை எடுத்து கொண்டிருக்கிறோம். சிறுக சிறுக எடுத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் சிரமப்பட்டு எடுக்கிறோம். இதிலே சிறிது காலதாமதம் ஆனாலும்கூட மக்களுக்கு அது நல்ல முறையிலே பயன் தரும் என்பதை நான் இங்கே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்ததாக சீரணி அமைக்க இருப்பதைப்பற்றி காங்கிரஸ் காரர்கள் பயப்படுகிறார்கள். அவர்கள் பயப்பட வேண்டாம். திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்களும் பயப்படுகிறார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் நமக்காக எந்த நேரத்திலும் உழைக் கின்ற வேலையை வைத்துக்கொண்டே இருப்பார்கள். முன்பு இருந்த அரசாங்கம் மக்களுடைய தொடர்பே இல்லாமல் இருந் தது. ஆனால் இப்பொழுது அவ்வப்பொழுது மக்களுடன் தொடர்பு கொள்வதற்காக இந்த அரசு மக்களுக்காக என்ன நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டிருக்கிறது, என்ன என்ன வேலைகளைச் செய்து கொண்டிருக்கிறது என்பதைச் சொல்வதற்காகத்தான் இந்தச் சீரணி. நாம் நம்முடைய நேரத்தை மக்களுக்காகச் செலவிட வேண்டியிருக்கிறது. அந்த முறையில் திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்கள் எப்படி நாம் சீரணியில் பணியாற்றுவது, என்பதை நினைத்து பயப்படுகிறார்கள். ஆனால் காங்கிரஸ்காரர் கள் இந்தச் சீரணியை செங்காவல் படை என்று கூறி பயப்படு கிறார்கள். இந்தச் சீரணி, மக்களுக்கு இந்த அரசு என்ன என்ன நன்மைகள் செய்து கொண்டிருக்கிறது, என்ன என்ன நல்ல பல நன்மைகளை மேற்கொள்ள இருக்கிறது என்பதை மக்களிடையே விளக்குவதற்கும், மக்களுக்கும் நாட்டுக்கும் நேரத்தைச் செலவு செய்து, மக்களுடைய வசதிக்காக உழைப்பதற்குத் தயாராக இருக்கின்ற அணியாகும். இதைப் பாராட்டியிருக்க வேண்டும், நன்றி தெரிவித்து இருக்கவேண்டும்.

அடுத்தாக கல்லூரியில் இலவசப்படிப்பைப் பற்றிச் சொல்லும் பொழுது ஒரு பகுதிக்கு இலவசப் படிப்பு, மற்றொரு பகுதிக்கு இலவசப் படிப்பு இல்லை என்று குறைபட்டுக் கொண்டார்கள். வசதி படைத்தவர்கள் மேற்கொண்டு வசதியாக இருக்க மிகப் பெரிய வாய்ப்பை உருவாக்குகின்ற நிலையை இந்த அரசு ஏற்படுத்த எப்பொழுதும் தயாராக இருக்காது. வசதி படைத்தவர்கள் தியாகம் செய்யத் தயாராக இருக்க வேண்டும், வசதியற்றவர் களுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற அளவில்தான் இப்பொழுது கல்லூரி இலவசப் படிப்பு அமைந்திருக்கிறது.

[1967 ஜூன் 23

[திரு. வி. எஸ். சண்முகம்]

இந்த பட்ஜெட்டிலே கொண்டு வரப்பட்டிருக்கின்ற அத்தனையும், ஏழை எளிய மக்களுக்கு உதவிபுரிகின்ற, விவசாயிகளை, நடுத்தர மக்களைப் பாதுகாக்கின்ற திட்டமாகும். உண்மையிலே சோஷலிச நிதிநிலை அறிக்கை என்றுதான் நாம் இந்த நிதிநிலை அறிக்கையைக் கூறவேண்டும். புஞ்சை நிலங்களுக்கு வரியை நீக்கியது, சிறு கடைக்காரர்களுக்கு வரி நீக்கியது, ஏழைகளுக்கு இலவசப் படிப்பு வழங்கியது, சேலம் இரும்பாலை அமைய பகுதியும் துறப்போம் என்று கூறுகின்ற வீர அறிக்கையை போற்றி வரவேற்று நான் என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* திரு. என். துரைபாண்டியன்: மாண்புமிகு தற்காலிக சபாநாயகர் அவர்களே, 1967-68 ஆம் ஆண்டு பட்ஜெட்டில் பாராட்ட வேண்டிய முறைகள் இருந்தும், காங்கிரஸ்காரர்கள் பாராட்டாமலே பேசுகிறார்கள் என்று ஆளுங்கட்சியில் உள்ள அத்தனை பேர்களும் கிளிப் பிள்ளை பாடம் சொல்வதுபோல் சொல்லி வருகிறார்கள். உண்மையிலேயே காங்கிரஸ்காரர்கள் பாராட்ட வேண்டியதைப் பாராட்டியும், எதிர்க்க வேண்டியதை எதிர்த்தும் சொல்ல வேண்டியதுதான் கடமை. அந்த முறையிலேதான் பேசிக் கொண்டு வருகிறோம். இந்த பட்ஜெட்டிலே பாராட்ட வேண்டியது பல இருக்கின்றன. உதாரணமாக, பஸ் போக்கு வரத்தை தேசிய மயமாக்கியிருப்பது. காங்கிரஸ்காரர்கள்தான் கொண்டுவந்த திட்டம் அது. அந்தத் திட்டத்தை இப்பொழுது தீவிரமாக போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் செய்கிறார்கள். அதை நான் பாராட்டுகிறேன்.

அடுத்து ஒரு படி அரிசித் திட்டம். இது ஏழைகளின் கண்ணீரைத் துடைப்பது, வாழ்க்கையை உயர்த்துவது என்று சொல்கிறார்கள். தமிழ்நாடு முழுவதும் வந்துவிட்டால் எல்லோரும் அதைப் பாராட்டாமல் இருக்கமுடியாது. இன்று என்ன நடக்கிறது என்றால், நாங்கள் எல்லாம் முன்பு பட்டணத்திற்கு வருவதற்கு முன்னால், பார், பார் பட்டணம் பார் என்று காட்டுவார்கள், அதைப்போலத்தான் இன்றைக்கு பார் பார் ஒரு படி அரிசி என்று காட்டுகிறார்கள். 31 லட்சம் பேர்களுக்கு அளிக்கிறோம் என்று சொல்லி மக்கள் மனதை மாற்றி வருகிறார்கள். ஆனால் 31 லட்சம் மக்கள் ஒரு படி அரிசியை வாங்கிச் சாப்பிடுகிறார்களா அல்லது 25 மூட்டை அரிசி 1,38 பைசாவுக்கும், 3 அல்லது 4 மூட்டை ஒரு ரூபாய்க்கும் விற்கப்படுகின்ற நிலைமை இருக்கிறதா என்பதைப் பார்க்கவேண்டும். ஏழைமக்கள் பட்டணத்திலே அதிகம் பேர்கள் இருக்கிறார்களா, அல்லது கிராமங்களிலே அதிகமாக இருக்கிறார்களா என்பதை யோசிக்கவேண்டும். கிராமங்களிலே உள்ளவர்களிடம் ஓட்டுக் கேட்க வந்த நேரத்தில் நாங்கள் வந்ததும் ஒரு படி அரிசி போடுவோம் என்று ஆசையோடு சொன்னதால் அவர்கள் ஓட்டளித்தார்கள். ஆனால் இன்னும் கிராமங்



1967 ஜூன் 23]

[திரு. என். துரைபாண்டியன்]

களிலே ஒரு படி அரிசி போடப்படவில்லை. யாரோ ஒருவர் ஆளுங்கட்சி அங்கத்தினர் பேசுகின்ற பொழுது, இன்றைய தினம் விவசாயிகள், நாங்கள் போராட்டம் நடத்திய அன்றைய தினத்தைவிட குறைந்திருக்கிறதா அல்லது அதிகமாகியிருக்கிறதா என்பதை எதிர்க்கட்சி அங்கத்தினர் குறிப்பிட்டிருந்தால், விலை குறைந்திருந்தால் அப்பொழுது நாங்கள் பாராட்டாமல் இருந்தால், பாராட்டாமல் இருக்கிறார்களே காங்கிரஸ்காரர்கள் என்று சொன்னால் பொருத்தமாக இருக்கும். அப்படியில்லாமல் மனச்சாட்சியை மழுப்பிக்கொண்டே மன்றத்திலே பேசுகின்ற முறை முறையல்ல. மன்றத்திலே கட்சிக் கட்டுப்பாட்டுக்காக ஒரு தூக்குவது ஒருபுறம் இருக்கிறது. திருநெல்வேலி மாவட்டத்திலே நிலைமை எப்படி இருக்கிறது? ஒரு கண்ணிலே சுண்ணாம்பும், ஒரு கண்ணிலே வெண்ணெயும் வைப்பதுபோன்றுதான் இந்த அரசாங்கம் நடக்கிறது. குறிப்பாக எனது மாவட்டத்திலே, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே வந்திருக்கின்ற திரு. இலசாமி அவர்கள் தொகுதியில் சில கிராமங்களில் மட்டும் ரேஷன் போடப்படுகிறது. அதேபோல் ஸ்ரீவைகுண்டம் தொகுதி செழிப்பான அந்தத் தொகுதியில் இருந்துதான் சபாநாயகர் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள், அந்தத் தொகுதியில் சில கிராமங்களுக்கு ரேஷன் மூலம் சப்ளை செய்யப்படுகிறது. ஆனால் கரையோரமாக உள்ள, மணற்பாங்கான பெரும்பகுதி வறட்சியுள்ள என்னுடைய தொகுதியில் எந்தக் கிராமத்திலும் ரேஷன் கொடுக்கப்படுகிறதா என்றால் இல்லவே இல்லை. அடுத்து 1967 மார்ச் மாதத்திற்குப் பின்னால் விலைகள் கூடியிருக்கிறதா, அல்லது குறைந்திருக்கிறதா என்பதைப் பார்க்கவேண்டும். உணவு அமைச்சர் அவர்கள் விலைவாசிகளைப் பற்றி சொல்லும்பொழுது கோயம்புத்தூர் ஜில்லாவைப்பற்றி மட்டும்தான் சொல்கிறார்கள். உணவைப்பற்றிய நிலைமையைச் சொல்லாமல், விளக்கெண்ணெயைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள், மனிதனுக்கு வேண்டிய உணவு தானே, மனிதன் விளக்கெண்ணெயையா சாப்பிடுகிறான்? பேதிக்கு போவதற்காகத்தான் விளக்கெண்ணெய் சாப்பிட வேண்டும். அதைப்பற்றித்தான் சொல்கிறார்கள். அந்த ரீதியில் தான் அமைச்சர் அவர்களுடைய பேச்சு இருக்கிறது.

அடுத்து, சிக்கனத்தின் பெயரால் ஆட்குறைப்பு என்று பேசுகிறார்கள். உண்மையிலேயே எந்தக் கட்சியாக இருந்தாலும் எதற்கும் தலைவர்கள் முன்னோடியாக இருக்கவேண்டும். உண்மையிலேயே சிக்கனத்தின் பெயரால நடவடிக்கை எடுத்துக் கொள்ளுகிறார்கள் என்றால் முன்பு எட்டு மந்திரிகளாக இருந்த எண்ணிக்கையை நான்காகக் குறைத்துக் கொண்டார்கள் என்றால் பாராட்டலாம். கலெக்டர்களுக்கு மூன்று பி. ஏ. இருந்ததை இரண்டாகக் குறைத்தார்கள். அதே போன்று எட்டு மந்திரியாக இருந்ததை நான்காகக் குறைத்துக் கொண்டால் பொதுமக்கள் பாராட்டுவார்கள். ஆனால் மந்திரிசபை விஸ்தரிக்கப்படுகிறது.

[திரு. என். துரைபாண்டியன்]

விபூதி வாங்க ஒரு மந்திரி என்று சொல்லுகிறார்கள். டெபுடி மந்திரிகள் நாங்கள்தான் என்று சொல்லி ஊரிலே பல காரியங்களைச் செய்து வருகிறார்கள். அதையெல்லாம் அவர்கள் சிக்கனம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எனது ஜில்லாவில் இருந்து வந்த அங்கத்தினர் ஒருவர் 'கடந்த காலத்தில் இருந்த அங்கத்தினர்கள் எல்லாம் தங்களுடைய வாழ்வு செழிப்புப் பெறுவதற்காக வழி செய்து கொண்டார்களேயல்லாது மாவட்டத்தின் செழிப்புக்கு வழி செய்யவில்லை' என்று பேசினார். உண்மையிலேயே, அரசியலில் இருந்தவர்களாக இருந்தால் இப்படிப் பேசி இருக்க முடியாது. காங்கிரஸ் ஆட்சி இருந்த போதுதான் மணிமுத்தாறு கட்டப்பட்டது. மெடிகல் கல்லூரி வந்தது. அம்பாசமுத்திரம் தாலுகாவிலே நிறைவேற்றுவதற்குப் பல அணைத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டன. ரோடுகள் விஸ்தரிக்கப்பட்டன. இராமநாதபுரத்திலிருந்து கன்னியாகுமரி வரை கடற்கரை ஓரமாகவே தார்ரோடு அமைக்கப்பட்டிருப்பது அவருக்குத் தெரியாது. நாங்குநேரி தாலுகா தவிர மற்ற எல்லாத் தாலுகாக்களிலும் கல்லூரிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இவ்வளவெல்லாம் செய்தும், 'மாவட்டம் வளம் பெறவில்லை; தங்களை வளப்படுத்திக் கொண்டார்கள்' என்று கூறுகிறார். உண்மையிலேயே, அவர் தன்னுடைய உடம்பைப் பார்த்துக் கொண்டாலே தெரியும், தனது வாழ்வை வளப்படுத்திக் கொண்டாரா இல்லையா என்பது. அவர் நன்றாகப் பேசுகிறார், அழகாகப் பேசுகிறார். கூட்டுகளின் பெயரால் அங்கத்தினராக வந்தவர் அண்ணா அவர்களைப் பற்றிப் புகழ்ந்து பேசினார். ஆனால் அவர்கள் ஜனாதிபதி தேர்தலில் திரு. ஜாகிர் ஹுசேனுக்கு ஓட்டுப் போட்டார்கள். அண்ணாவை அவ்வளவு புகழ்ந்தாரே, அண்ணா சொன்னபடி ஒத்துழைத்தாரா என்பது குறிப்பிடத்தக்க விஷயம்.

திரு. இராம அரங்கண்ணல் : ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர். கனம் அங்கத்தினர் அவர்கள் பேசுகின்ற நேரத்தில் அமைச்சர் அவர்களுடைய சொந்த நிலைமைகளை விளக்க முற்படுகிறார்கள். அமைச்சர்களுடைய அல்லது அங்கத்தினர்களுடைய சொந்த நிலைமைகளைப் பற்றிப் பேசுவது சட்ட விதிகளுக்குப் பொருந்துமா என்பதை தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு தலைவர் (திரு. எ. வி. பி. ஆசைத்தம்பி) மன்றத்தில் இல்லா அங்கத்தினர்களைப் பற்றி தனிப்பட்ட முறையில் குறைவாகப் பேசக்கூடாது. எனவே, அங்கத்தினர் அவர்களைப் பொதுப்படையாகப் பேசும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. செ. பாலசுப்பிரமணியன் : ஜனாதிபதியைப் பற்றி ஜனாதிபதி தேர்தலைப் பற்றி இங்கே பேசலாமா?

மாண்புமிகு தலைவர் (திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி) : பொதுப்படையான விவகாரமாக இருந்தால் பேசலாம். குறிப்பிட்டு குறை கூறிப் பேசக்கூடாது.



திரு. என். துரைபாண்டியன் : அதே அங்கத்தினர், கடந்த சபையில் இருந்த அங்கத்தினர்கள் தங்கள் வாழ்வை உயர்த்திக் கொண்டார்கள் என்று பேசலாமா?

மாண்புமிகு தலைவர் (திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி) : ஒழுங்குப் பிரச்சினையில் விவாதத்திற்கு இடம் இல்லை. அங்கத்தினர் மேற்கொண்டு பேசலாம்.

திரு. என். துரைபாண்டியன் : இன்னொரு கட்சி அங்கத்தினர் பேசும்போது காங்கிரஸ் கட்சிக்காரர்கள் எதிர்க்கட்சியில் இருப்பதற்குக்கூட லாயக்கற்றவர்கள் என்று சொன்னார். அவரை நான் கேட்கிறேன் – அவருடைய கட்சிக் கொள்கையின் அடிப்படையில் இந்த மன்றத்திற்கு வந்திருக்கிறார்கள். எந்தெந்த நிலையில் எதையெதை விட்டு ஓட்டைப் பெற்று இந்த மன்றத்திற்கு வந்திருக்கிறார்கள். அவர் காங்கிரஸ் கட்சிக்காரர்கள் எதிர்க்கட்சியில் இருப்பதற்குக்கூட லாயக்கற்றவர்கள் என்று சொன்னார். அவருடைய கட்சி அரசியலில் இருப்பதற்கே லாயக்கற்றதாக இருக்கிறது என்று குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்து, நமது ஆளும் கட்சியிலிருப்பவர்கள் அன்று 'தில்லை நடராஜரையும், ஸ்ரீரங்கம் பெருமாளையும் பீரங்கி வைத்துப் பிளப்போம்' என்று பேசி வந்தார்கள்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : கனம் அங்கத்தினர் அவர்கள் இதெல்லாம் பத்திரிகைத் தலைப்புக்கு வரவேண்டுமென்பதற்காகப் பேசுவதானால் தாராளமாக அந்த முறையிலே ஈடுபடலாம். ஆனால் திராவிட முன்னேற்றக் கழகம் என்றைய தினம் இவ்வாறு சொன்னதாக வெளி வந்திருக்கிறது என்பதை விளக்கிக் காட்டுவது அவர் சட்ட மன்ற உறுப்பினர் தகுதியைப் பொதுமக்கள் ஏற்றுக்கொள்ளும்படியாகச் செய்வதாக அமையும். எப்போது சொன்னோம்? எந்த இடத்தில்? என்ன ஆதாரம்?

மாண்புமிகு தலைவர் (திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி) : அடுத்து திரு. கே. என். குமாரசாமி அவர்கள் பேசுவார்கள்.

* திரு. கே. என். குமாரசாமி : சட்ட மன்றத் தலைவர் அவர்களே, சட்ட மன்றத்தில் தமிழக அமைச்சர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிற 1967–68-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை ஜனங்களுக்கு ஓரளவு நன்மை செய்கிற நிதிநிலை அறிக்கையாகத்தான் காட்சியளிக்கிறது என்று பிரஜா சோஷலிஸ்ட் கட்சி அங்கத்தினர் என்ற முறையில் தெரிவித்துக் கொள்கிறேன். பொதுவாக சகல மக்களும் வரவேற்கக் கூடிய முறையில் அமைந்த அறிக்கை யாரும் இல்லை. கடந்த பல ஆண்டுகளாக சமூகத்தின் உடைமைகள் அரசாங்கத் துறையிலே பொதுத் துறையிலே மாற வேண்டுமென்ற எண்ணம் மக்கள் மத்தியிலே இருந்து வந்தது. தற்போது செயலாக உருவாக்கப்பட்டிருக்கிறது. கடந்த இருபது ஆண்டுகளாக ஒரு சார்பு நலனுக்காக மக்களுடைய கோரிக்கைகள் பின் தங்கிற்று

[திரு. கே. என். குமாரசாமி]

என்பதை மறுக்கமுடியாது. ஆனால் அதே நேரத்தில் மக்களுடைய கோரிக்கைகளை எப்படிச் செய்வது என்பதைப் பற்றி இந்த பட்ஜெட்டிலே ஓரளவு விளக்கப்பட்டிருக்கிறது.

பஸ்களைத் தேசிய மயமாக்குவதன் மூலம் அரசாங்கத்தின் வருவாயை உயர்த்திக்கொள்ள முடியும்; அதன் மூலம் வரியைக் குறைக்க முடியும் என்ற கணக்கில் அரசாங்கம் பஸ்களை எடுத்துக் கொள்வது வரவேற்கத் தக்கது.

அதே நேரத்தில் விவசாயிகளுடைய பிரச்சினையிலே, புஞ்சை நிலங்களுக்கு நிலத் தீர்வை இல்லாமல் செய்யப்பட்டிருப்பது மிகவும் வரவேற்கத்தக்கதாக இருந்தாலும், விவசாயிகள் இந்த அம்சத்தால் மட்டும் முழுத் திருப்தி அடைந்துவிட முடியாது. விவசாய மக்கள் மத்தியிலே இருக்கக்கூடிய பல குறைபாடுகளைத் தீர்க்கவேண்டும். அரசுக்கு வருகின்ற வருமானத்தில் 40 சதவிகிதத்தை விவசாயத் துறை அபிவிருத்திக்காகச் செலவிடுவது என்ற முறையை வரவேற்பதோடு விவசாய உற்பத்தியைப் பெருக்குவதிலே விவசாயிகளுக்குள்ள கஷ்டங்கள் என்ன என்பதைத் தீர்க்கமாகப் பரிசீலிக்க வேண்டும். விவசாயத் துறையில் இருப்பவர்களுக்குத் தண்ணீர் கிடைப்பதும், மின்சாரமும் பெரும் பிரச்சினையாக இருக்கிறது. தண்ணீர் இல்லாத பல பகுதிகளில் நல்ல விளைச்சல் நிலங்கள் இருக்கின்றன. அங்கெல்லாம் 100 அடி, 120 அடிக்குக்கீழே தண்ணீர் இருக்கிறது. அப்படிப்பட்ட இடங்களில் அரசாங்கம் குழாய்க் கிணறுத் திட்டத்தை அமல்படுத்தி விவசாய உற்பத்திப் பெருக்கத்திற்கான மார்க்கங்களை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கோவை பகுதியில் உள்ள பல நல்ல நிலங்கள் தண்ணீர் இல்லாமல் விவசாயம் செய்ய முடியாத நிலைமையில் இருக்கின்றன. பல்லடம், கோவை, அவிநாசி போன்ற தாலூகாக்களில் நிலங்கள் காண்டு கிடக்கின்ற சூழ்நிலையில் இருக்கிறது. அந்தப் பகுதிக்குக்கீழ்ப்பவானித் திட்டத்தின் கசிவுத் தண்ணீரை பாய்ச்சுவதற்கான திட்டத்தை அரசாங்கம் யோசிக்குமானால், அந்தத் திட்டத்தின் மூலமாக மூன்று தாலூகாக்களிலும் மூன்று போகம் விளையக் கூடிய நிலைமை ஏற்பட முடியும். அதற்கு இந்த அரசு முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ரொம்ப காலமாக விவசாயிகள் அந்தத் திட்டத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்காக கமிட்டிகள் போடப்பட்டு நாலரை கோடி ரூபாயில் அதை நிறைவேற்ற முடியும் என்று முடிவு செய்திருக்கிறார்கள்.

அந்த மூன்று தாலூகாக்களில் மூன்று போகம் விளைச்சலைத் தரும் பக்குவப்பட்ட நிலங்கள் இருக்கின்றன. ஆகவே இதைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக, தொழிலாளர்கள் பிரச்சினை. இந்த பட்ஜெட்டின்மீது தொழிலாளர்





[திரு. கே. என். குமாரசாமி]

களைப் பற்றி நான் ஒரு சில வார்த்தைகள்கூற கடமைப்பட்டிருக்கிறேன். கடந்த ஒன்றரை ஆண்டுகளாக பல மில்கள் மூடப்பட்டும். அதற்கான நடவடிக்கைகளை சென்ற அரசு எடுத்துக் கொள்ளாமல் விட்டுவிட்டது. உற்பத்தி பெருகவேண்டும் என்ற நோக்கம் முந்திய அரசுக்கு இருந்திருக்குமானால், மூடப்பட்ட ஆலைகள் திறக்கப்படுவதற்கும், அங்குள்ள ஏழை மக்களுக்கு வாழ்வளிக்கவும் சென்ற அரசு முயன்றிருக்கும். இன்று பல ஆலைகள் மூடப்பட்டு அவற்றை நடத்துவதற்கு பணம் இல்லை என்று சொல்லி அதன் காரணமாக 10,000 பேர்கள் இன்று வேலை இழந்து தவித்துக் கொண்டிருக்கிறார்கள். சிலர் குடும்ப வாழ்வை இழந்து பிச்சை எடுத்து தெருத் தெருவாகத் திரியும் சூழ்நிலை அந்தப் பிரதேசத்தில் இருக்கிறது. அப்பிரச்னையைத் தீர்ப்பதற்கு எத்தனையோ கமிட்டிகள் போடப்பட்டிருந்தும் அந்தக் கமிட்டிகளின் முடிவு என்னவென்று தெரியவில்லை. ஆகவே, நாம் ஆலோசித்துப் பார்க்கவேண்டியது. அந்த ஏழு ஆலைகள் ஓடியிருக்குமானால், உற்பத்தித் துறையில் உற்பத்தி பெருகியும், இன்று இவ்வளவு தொழிலாளர்கள் குடும்பங்கள் கஷ்டப்படக் கூடிய நிலையும் ஏற்பட்டிருக்காது. ஆகவே, அந்தப் பிரச்னைக்கு நம் அரசு உடனடியாக ஒரு முடிவை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்த பாதிக்கப்பட்ட தொழிலாள மக்களுக்கு நிவாரணம் அளிக்கும் முறையில் அரசு ஏதாவது ஒரு தொகையை அளிக்க கடமைப்பட்டுள்ளது. அடுத்தபடியாக, கல்விச் சலுகை விஷயத்தில் 1,500 ரூபாய் என்றிருந்ததை 2,500 ரூபாய் என்று மாற்றினால், மற்ற மக்களுக்கும் ஓரளவு சலுகை அளித்ததுபோல் இருக்கும். ஆகவே இந்த 1,500 என்பதை 2,500 ரூபாயாக மாற்றவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். வேலையில்லாத் திண்டாட்டம் பற்றி நான் ஏற்கனவே குறிப்பிட்டேன். விவசாய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் ஆயிரக்கணக்கான விவசாயத் தொழிலாளர்களை ஒன்று திரட்டி தரிசாக இருக்கிற நிலங்களையும், மற்ற அரசாங்க பாரம்போக்கு நிலங்களையும் பண்படுத்த அந்தத் தோழர்களை வைத்துக்கொண்டு, அவற்றை பண்படுத்தி புதிய விளைச்சல் நிலங்களை உண்டாக்குவதற்கு வகைசெய்து அதன்மூலம் ஓரளவு வேலையில்லாத் திண்டாட்டத்தை நீக்கலாம் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே அந்த மக்களைத் திரட்டி விவசாய அபிவிருத்திக்காக வேலை செய்வதற்குரிய திட்டத்தைக் கொண்டுவர அரசு முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும். அதனால் வேலையில்லாத் திண்டாட்டமும் ஓரளவு நீக்குவதற்கு வழி செய்யமுடியும். அடுத்தபடியாக, இன்றைய அரசு அமைந்த மூன்று நான்கு மாதங்களுக்குள்ளாகவே பஸ்களை தேசிய உடைமையாக்கும் [illegible] திட்டத்தை மேற்கொண்டிருக்கிறார்கள். நாட்டு மக்கள் சந்தோஷப்படும் அளவிற்குள்ள ஒரு திட்டத்தை இந்த அரசு அளித்திருக்கிறபோது, நாம் சந்தோஷப்படவேண்டியே [illegible],

[திரு. கே. என். குமாரசாமி]

வேறு ஒன்றுமில்லை. எழுபத்தைந்து மைல்களுக்கு உட்பட்ட பஸ்களை எடுத்துக்கொள்வது என்றிருப்பதை 50 மைல்கள் என்று வைத்தால், பல முதலாளிகளிடம் உள்ள பஸ்கள் அரசாங்கத்தின் கைக்கு வரும், அதன் மூலம் அரசாங்க வருமானமும் பெருகும். எழுபத்தைந்து மைல்கள் என்று வைத்தால், பலர் அதிலிருந்து தப்பித்துக் கொள்வார்கள். ஆகவே வருகிற ஆண்டிலாவது அதைச் செய்ய அரசு முயற்சி எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அரசாங்கத்தின் வருமானத்தை மேலும் அதிகரிக்க வேண்டுமென்று சொன்னால், மத்திய சர்க்காரோடு சேர்ந்து பாங்குகளையும், பெரிய கன ரகத் தொழில்களையும் தேசியவுடமை யாக்கும் முயற்சியில் மத்திய அரசோடு மாநில அரசுகள் சேர்ந்து கொண்டு அவற்றை தேசியவுடமையாக்கினால், வருமானமும் பெருகும். அப்படி வருகிற வருமானத்தை மாநிலங்களுக்கு பகிர்ந்தளித்து தேச உற்பத்தியைப் பெருக்குவதில் ஆக்கபூர்வமான திட்டத்தை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, இந்த பட்ஜட்டின்மீது என் சிறிய ஆலோசனைகளைக் கூற அனுமதித்த தலைவர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* திரு. ஏ. முனியாண்டி : மதிப்பிற்குரிய தாற்காலிக சபாநாயகர் அவர்களே, இந்த 1967-68-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின்மீது எனக்கு பேச வாய்ப்பளித்தமைக்கு என் நன்றி கலந்த வணக்கத்தை முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த அறிக்கை ஏழை எளிய மக்களின் வாழ்க்கையில் புரட்சிகரமானதொரு மாறுதலை உருவாக்கி இருக்கிறது என்று எனக்கு முன் பேசிய பலரும் வலியுறுத்திச் சொன்னார்கள். அதைத் தொடர்ந்து நானும் சொல்கிறேன், இந்த நிதிநிலை அறிக்கை ஏழை எளிய மக்களின் வாழ்க்கையில் ஒரு புரட்சிகரமான மாறுதலை ஏற்படுத்தியிருப்பதோடு பின்தங்கி, ஒதுக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டு சமுதாயத்தில் தாழ்த்தப்பட்டு கிடக்கிற மக்களின் வாழ்க்கையில் ஒரு மகத்தான மாறுதலை உருவாக்கும் என்பதற்கு பல காரணங்கள் உள்ளன. அவற்றில் ஒன்று கலப்புத் திருமணம் கலப்புத் திருமணம் வாயிலாக சமுதாயத்தில் உள்ள ஏற்றத்தாழ்வுகள் நிச்சயமாக மாற்றப்படும். திராவிட முன்னேற்றக் கழகம் தோன்றிய காலந்தொட்டே சொல்லிக் கொண்டு வந்த இந்தப் புதுமையான கருத்தை இன்று கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டவுடனே நிறைவேற்றியமைக்கு இந்த நிதிநிலை அறிக்கையை நான் வரவேற்கிறேன். அடுத்தபடியாக, திராவிட முன்னேற்றக் கழகம் அரசு அமைத்துவிட்டால், தாழ்த்தப்பட்ட மக்கள் எங்கோ ஒரு மூலையில் தள்ளப்படுவார்கள். தீண்டாமை மீண்டும் தலையெடுக்கும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எந்தவித முன்னேற்றமும் ஏற்படாது என்று சொல்லி வந்த காங்கிரஸ்காரர், களுக்கு தக்க பதில் அளிக்கும் முறையில் பேரறிஞர் அவர்கள்





[திரு. ஏ. முனியாண்டி]

இந்த பெரு மன்றத்தில் நல்ல பல திட்டங்களை தீட்டிக் கொடுத்திருக்கிறார்கள். நாங்கள் ஆட்சிக்கு வந்தால், நிச்சயமாக கோவில்கள் எல்லாம் மூடப்படும், காப்பி களப்புகள் எல்லாம் மூடப்படும் என்று சொல்லி வந்தவர்களுக்கு நல்ல விளக்கம் இந்த அறிக்கையின் மூலம் கொடுக்கப்பட்டிருக்கிறது. போனவை திட்டங்கள் போன்ற பல நல்ல திட்டங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. 1,500 ரூபாய் என்றிருந்த வரம்பை 2,000 ரூபாயாக பேரறிஞர் உயர்த்தியிருப்பது அந்த மக்களின் வாழ்க்கையில் புரட்சிகரமான மாறுதலை உருவாக்கத்தான் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தாழ்த்தப்பட்ட மக்களுக்காக பல நாட்பட்ட திட்டங்கள் உருவாக்கியிருந்தபோதிலும் அதில் பெரும் பகுதி மக்கள் விவசாயத்தை நம்பி வாழ்வதால் விவசாயத் துறையில் அவர்கள் ஒரு மாறுதலை விரும்பிக் கிடக்கிறார்கள் என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன். பல லட்சக்கணக்கான ஏக்கர் நிலங்கள் கோயில்களின் பெயரால் முடங்கிக் கிடக்கின்றன. அந்த நிலங்கள் ஒரு சிலர் கையில் சிக்கி அவர்கள் குறைந்த குத்தகைக்கு அந்த நிலங்களை எடுத்து அதிக குத்தகைக்கு விட்டு ஏழை பாமர மக்களிடம் இருந்து அதிகத் தொகையைத் திரட்டி வருகிறார்கள். ஆகவே, நேரடியாக அந்த குத்தகையை இந்த ஏழை விவசாயிகளிடம் விட்டுவிட்டால் அவர்கள் சுயமாக அதில் நல்லமுறையில் பாடுபட உற்சாகம் ஏற்படும். ஆகவே, கோவில் நிலங்களை ஹரிஜன விவசாயிகளிடம் நேரடியாக குத்தகைக்கு ஒப்படைக்க வேண்டுமென்ற என் கருத்தை இங்கு வைக்க முற்படுகிறேன். புன்செய் நிலங்களுக்கு வரி விலக்கு அளித்திருப்பது பாராட்டத் தக்கது. தேவஸ்தான நிலங்களை தாழ்த்தப்பட்ட மக்கள் பெருவாரியானவர்கள் பயிர் செய்து வருகிறார்கள். ஆகவே, அவர்களுக்கு நேரிடையாக அந்த நிலங்களை குத்தகைக்கு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பஸ் போக்குவரத்தை தேசியமயமாக்குவதற்கு எடுத்துக் கொண்டுள்ள நடவடிக்கைகளுக்கும், புன்செய் நிலங்களுக்கு நில வரி விலக்கு அளித்தமைக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு இத்துடன் என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. கே. சகாதேவ கண்டர் : மதிப்பிற்குரிய தாற்காலிக சபாநாயகர் அவர்களே, 1967–68-ம் ஆண்டு நிதி நிலை அறிக்கையை வரவேற்று அதில் உள்ள சில குறைகளை எடுத்துச் சொல்ல முன் வந்துள்ளேன்.

புன்செய்க்கு நிலவரி விலக்கு என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதே வரி மீண்டும் சுமத்தப்பட்டிருக்கிறது. மணிலாவுக்கு இப்போது வரி போடப்படுகிறது. புன்செய் நிலத்தில் 100-க்கு 90 அளவுக்கு மணிலா பயிர் செய்யப்படுகிறது. ஆகையால் நிலவரி நீக்கம் செய்தாலும், அவர்கள் மீண்டும் அந்த வரியைக் கட்ட வேண்டியிருக்கிறது என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

1967 ஜூன் 23]

[திரு. கே. சகாதேவ கண்டர்]

புன்செய்க்கு வரி இல்லை, நன்செய்க்கு வரி உண்டு என்று சொல்லுகிறார்கள். இன்றைக்கு இருக்கும் சூழ்நிலையில் அதிக உணவு உற்பத்தி நன்செய் நிலங்களில்தான். புன்செய்க்கு ஏகருக்கு 6 அணா, 8 அணா, 1 ரூபாய், 2 ரூபாய்க்கு மேல் வரி கிடையாது. நன்செய்க்கு 5 ரூபாய் முதல் 12 ரூபாய் வரையில் வரி கட்ட வேண்டியிருக்கிறது. அதற்கு மேற்கொண்டு தண்ணீர் வரி, பொது அபிவிருத்தி வரி என்று பல வித வரிகள் அதிகமாக வளர்ந்துகொண்டே போகிறது. அதனால் நன்செய் நிலங்களை வைத்திருக்கும் விவசாயிகள் பாதிக்கப்படும் நிலைமையில் இருக்கிறார்கள். அதை மீண்டும் பரிசீலனை செய்து எல்லா நிலங்களுக்கும் வரி ரத்து செய்ய அனுமதி அளிக்க வேண்டுமென்று கூறிக்கொள்கிறேன்.

முன்பு காங்கிரஸ் அரசாங்கம் இருந்தபோது, இன்றைக்கு ஆட்சியில் உள்ளவர்கள் நிலவரியை அடியோடு ரத்து செய்ய வேண்டுமென்ற பிரச்சினையை எழுப்பினார்கள். ஆனால், இப்போது புன்செய்க்கு வரி ரத்து என்றும், நன்செய்க்கு வரி ரத்து இல்லை என்றும் சொல்லப்படுகிறது. இதனை மீண்டும் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, புகுமுக வகுப்பிற்கு 1,500 ரூபாய் முதல் 2,000 ரூபாய் வரை சலுகையை அளித்திருக்கிறார்கள். அதையும் பரிசீலனை செய்து பாகுபாடு இல்லாமல் எல்லா மாணவர்களுக்கும் சலுகையை அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நீர்ப்பாசன வசதியைப் பொறுத்த மட்டில், நம்முடைய தமிழ் நாட்டிலே, முன்பு அடித்த புயற்காற்றினால் சேதம் அடைந்துள்ள அணைகளைப் புதுப்பித்துக் கொடுக்க அரசாங்கம் தீவிர நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். என்னுடைய தொகுதியில் நாவிப்பாடி அணை, தாண்டவன் அணை, செட்டியார்பாளையம் அணை போன்ற அணைகள் உடைந்திருக்கின்றன. அவைகளைச் சீர்படுத்துவதற்கு எஸ்டிமேட் தயார் செய்திருப்பதாகத் தெரிகிறது. உடனடியாக வேலையை ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகள் விவசாய வருமான வரிக் கணக்கு காண்பிக்க வேண்டுமென்று கொடுக்கப்பட்டிருக்கிறது. தற்போது 12 ஸ்டாண்டர்டு ஏக்கர்களுக்கு மேல் இருக்கும் விவசாயிகளே கணக்குக் கொடுக்க பெரும் அவதிப்படுகிறார்கள், வேதனைப்படுகிறார்கள். விவசாயிகளில் நூற்றுக்கு தொண்ணூறு பேர்கள் படிக்காதவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் கணக்குத் தயார் செய்வதற்கு படித்தவர்களிடம் சென்று, நகரங்களுக்குச் சென்று மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அவர்கள் கட்டும் வரியை விட இரண்டு மடங்கு கணக்குத் தயார் செய்வதற்காகச் செலவிட வேண்டியிருக்கிறது. கம்பவுண்ட் தீர்வையாகச் சட்டத்தில் ஏற்படுத்



1967 ஜூன் 23]

[திரு. கே. சகாதேவ கண்டர்]

தினால் கூட தாராளமாக, மனப்பூர்வமமாக அதைக் கொடுப்பதற்கு ஏற்றுக்கொள்வார்கள். ஆனால், இந்த விவசாய வருமான வரிக்குக் கணக்குக் கொடுப்பது மிகவும் கடினமானது, சிரமமானது, விவசாயிகளுக்கு வேதனை கொடுக்கும் நிலைமையை உண்டாக்கும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

தற்சமயம் உணவு உற்பத்தியை அபிவிருத்தி செய்ய வேண்டுமென்று தீவிர முயற்சி செய்து பெருமுயற்சி செய்துகொண்டிருக்கிறோம். இந்த நிலையில் விவசாயிகளின் மனதைப் புண்படுத்த வேண்டாமென்றும், கணக்குக் கொடுப்பதை நீக்கி கம்பவுண்ட் தீர்வை விதிக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டிலே மின்சார விஸ்தரிப்புகள் தீவிரமாக நடந்து கொண்டு வருகிறது. அப்படி இருப்பினும் சில இடங்களில், குறிப்பாக வட ஆர்க்காடு ஜில்லாவில், கிராமங்களில் கட்டடங்கள் கட்டியும், பம்ப்செட்டுகளை அமைத்தும், கனெக்ஷன் கொடுக்கப்படாமல் இருக்கிறது. அதிகாரிகளைக் கேட்டால், கம்பங்கள் பற்றாக்குறை என்றும், மின்சாரச் சாமான்கள் கிடைக்கவில்லை என்றும் சொல்லுகிறார்கள். உணவு உற்பத்தியை அதிகப்படுத்த வேண்டுமென்று சொல்லுகிற நேரத்திலே, மின்சாரம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு ஒவ்வொரு தாலுகாவிலும் மின்சாரக் கம்பங்கள் செய்ய அனுமதி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் உள்ள பாடசாலைகளில் சில மிகவும் மோசமான நிலையில் இருக்கின்றன. சில கூரைக் கட்டடங்களாக இருக்கின்றன. ஆயிரத்துக்கு மேற்பட்ட ஜனத்தொகை உள்ள கிராமங்கள் பலவற்றில் குடி தண்ணீர்ப் பற்றாக்குறை இருக்கிறது. பஞ்சாயத்து யூனியன் நிதியிலிருந்து 1,000-க்கு மேற்பட்ட ஜனத்தொகை இருக்கும் இடங்களில் நீர்த் தொட்டி கட்டி குடி தண்ணீர் கொடுக்க அரசாங்கம் அனுமதி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பஸ் போக்குவரத்திலே நீண்ட தூர பஸ்கள்தான் அதிகமாகப் போகின்றன. குறுகிய தூரம் போகக்கூடிய பஸ் ரூட்டுகள் அதிகமாக இல்லை. திருவண்ணாமலையிலிருந்து ஒன்றாவது மைல் முதல் பத்தாவது மைல் வரையில் பஸ்ஸிலே ஏற வேண்டுமானால் எந்தச் சமயத்திலும் டிக்கெட் கிடைப்பது கிடையாது. திருவண்ணாமலையிலிருந்து நான் ஒரு சமயம் ஆறாவது மைலில் உள்ள ஊருக்குச் சென்றிருந்தேன். காலையில் ஒன்பது மணிக்கு ரோடுக்கு வந்து காத்துக் கொண்டிருந்தேன். மாலை ஐந்து மணி வரையில் எனக்கு இடம் கிடைக்கவில்லை. கடைசியாக ஒரு ஆசிரியரிடமிருந்து சைக்கிளை வாங்கிக் கொண்டு திருவண்ணாமலைக்கு வந்துசேர்ந்தேன். 10 மைல்கள் தூரத்திற்கு உள்ள ரூட்டுகளை விஸ்தரிப்புச் செய்ய பர்மிஷன் அளிக்க வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். குறுகிய தூரத்தில் உள்ள

1967 ஜூன் 23]

[திரு. கே. சகாதேவ கண்டர்]

இடங்களுக்கிடையே உள்ள மக்களுக்குப் பெரும் கஷ்டமாக இருக்கிறது. சில சமயங்களில் வியாதியஸ்தர்களை—பிரசவ கேஸ்களைக்—கொண்டு போக முடியவில்லை. வண்டியில் வைத்துக் கொண்டு போகும்போது வழியிலேயே கூட உயிர் அழக்கும் நிலைமை இருக்கிறது. இதைப் பற்றி அரசாங்கம் சிந்தித்து குறுகிய அளவுக்கு உள்ள பஸ் ரூட்டுகளுக்குப் பர்மிஷன் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மீண்டும், விவசாயிகள் விவசாய வருமான வரிக்குக் கணக்குக் காட்ட வேண்டாத நிலைமைக்குப் பரிசீலனை செய்து, காம்பவுண்ட் தீர்வை விதிக்க அரசாங்கம் முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொண்டு எனது உரையை முடித்துக்கொள்கிறேன், வணக்கம்.

* திரு. க. மு. ராஜகோபால்: மதிப்பிற்குரிய தற்காலிக அவைத் தலைவர் அவர்களே, இந்த 1967–68-ம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தை நமது மாண்புமிகு நிதி அமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் இங்கே தாக்கல் செய்ததைப்பற்றி எதிர் வரிசையில் உள்ளவர்கள் சிலர் கேலியும் கிண்டலும் பேசியது மாத்திரமல்லாமல் தண்ணீர் குடத்தைக் கூடப் பெரிதாக எடுத்துப் பேசினார்கள். எனது மதிப்பிற்குரிய நண்பர் ஒருவர் 'என்ன ஐயா பெரிய திட்டம் தீட்டி விட்டார்கள்? ஒரு படி அரிசித் திட்டம் கூட யார் போடச் சொன்னது?' என்று கேட்டார்கள். அவர் கூட இங்கே இருக்கிறார். அப்போதே நான் சொன்னேன், 'ஒரு படி அரிசித் திட்டம் உங்களுக்கல்ல, ஏழை எளிய மக்களுக்காக' என்று. ஒரு படி அரிசித் திட்டத்தைப்பற்றிக் கிண்டல் பேசுகிற, முன்பு இருந்த சர்க்காரில் இருந்த நண்பர்கள், சோற்றுப் பிரச்னைக்கு மூன்று ஐந்தாண்டுத் திட்டங்கள் போட்டு, அந்தப் பிரச்னை தீர வழி கண்டார்களா, வழி காண முடிந்ததா. அதற்கு என்ன என்ன செய்தார்கள். என்பதைப்பற்றி ஒருசில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன்.

இந்த சோற்றுப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு என்ன என்ன செய்யவேண்டுமென்று செய்தார்கள் என்பதிலே பன்றி வளர்ப்பு ஒன்று. பன்றியை வளர்த்து அந்தப் பன்றியை நல்ல முறையில் பயன்படுத்தி உணவுப் பிரச்னையைத் தீர்க்கலாம் என்று பஞ்சாயத்து யூனியனிலே கொடுக்கப்பட்டது. அந்தப் பன்றிகள் என்ன ஆனது என்று தெரியவில்லை. ஆடு வளர்ப்புத் திட்டம் என்ற திட்டத்தின் மூலம் ஆட்டுக்கறியை மக்களுக்குக் கொடுத்து சோற்றுப் பிரச்னையைத் தீர்க்கமுடியும் என்ற திட்டத்தை முந்தைய சர்க்கார், இங்கே இருக்கிற ஆட்டுக்கும் நீலகிரியில் இருக்கிற ஆட்டுக்கும் கலப்புத் திருமணத்தைச் செய்து வைத்தார்கள். இதற்கும் அதற்கும் பொருத்தம் இல்லாமல், அது ஒரு பூனைக்கும் இது ஒரு எலிக்கும் போகும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அடுத்து மீனை வளர்த்து, மீன் உணவு நல்ல சுவையான உணவு, மீன் உணவை



1967 ஜூன் 23]

[திரு. க. மு. ராஜகோபால்]

மக்களுக்குக் கொடுத்து சோற்றுப் பிரச்னையைத் தீர்க்க முடியும் என்ற அந்தத் திட்டம் எந்த நிலையை அடைந்தது? மீன்களை வளர்ப்பதற்காகச் செலவு செய்யப்பட்ட தொகை என்ன ஆனது? மீன் தொட்டிகள் கட்டப்பட்டு அதிலே குஞ்சுகளைக் கொண்டு விட்டார்கள். இங்கே காய்கிற காய்ச்சலில் குஞ்சுகள் அத்தனையும் செத்துவிட்டன. அத்தனை அக்கிரமத்தையும் செய்துவிட்டு, கருத் தடை என்ற பெயராலே மக்கள் பெருக்கத்தைத் தடுக்க முடியவில்லை என்று ஏற்பட்ட பிறகு, பழங்களைச் சாப்பிடு, பால் சாப்பிடு என்று சொன்னார்கள். சாப்பிடுவதற்குப் பழங்கள் இல்லையென்றால், புல்லைச் சாப்பிடு என்று சொன்னார்கள். கடைசியிலே எலிக்கறி சாப்பிடு என்று சொல்லி—எலிக் கறி சாப்பிடும் பழக்கப்பட்ட இனம் ஒன்று இருக்கிறது என்று தெரியாமல் சொல்லிவிட்டார்களோ என்னவோ—அதற்குப் பிறகு திங்கட்கிழமை சோறு தின்னாதே, வியாழக்கிழமை சோறு தின்னாதே என்று கிருஷ்ண ஜெயந்தி, ராம ஜெயந்தி என்ற பெயரால் சொல்லுவது போலச் சொன்னார்கள். நாட்டு மக்கள் எதிர்பார்த்த அளவுக்கு உணவு உற்பத்தியைப் பெருக்க முடியவில்லை. முன்னாள் முதல் அமைச்சர் அவர்கள் 'இந்த நாட்டிலே நல்ல முறையிலே ஒரு எதிர்க் கட்சி இருக்குமானால் அதை நான் பாராட்டுகிறேன், பாராட்டுகிறேன்' என்று பொது மேடைகளிலே பேசினார்கள். அந்த அளவுக்குக் கொடுத்து வைத்த பக்குவத்தில் இந்த ஐந்தாண்டு காலத்திற்கு எதிர்க் கட்சியாக இருந்து நல்லதோர் விளக்கத்தைக் கொடுத்து, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி ஏற்பட்டிருக்கிற இந்த ஐந்தாண்டு காலத்தில், எங்கள் தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள் கொண்டுவந்திருக்கிற சீரிய திட்டத்தை ஏற்றுக் கொண்டாலும், ஏற்றுக் கொள்ளாவிட்டாலும், என்ன செய்ய வேண்டும் என்பதை இந்த மன்றத்தில் எடுத்துச் சொல்லவேண்டும் என்று மிக்க பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். இனிமேலாகிலும், கேலிக்கு இடம் இல்லாமல் இந்தச் சட்டமன்றத்தில் பணிபுரிய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து என்னுடைய பகுதியிலே, உத்திரமேரூர் ஏரி என்ற ஒரு பெரிய ஏரி இருக்கிறது. செய்யாற்றில் அணை கட்டப்பட்டு, அந்த அணைக்கட்டு மூலம் கால்வாய் வந்து, ஏரிக்குத் தண்ணீர் பாய்கிறது. 1966-ம் 10-வது மாதத்தில் அடித்த புயலின் காரணமாக, ஏரி இருக்கிற பகுதிகளிலே சில இடங்களில் உடைப்பு ஏற்பட்டிருக்கிறது. மழை பெய்தால் கூட ஏரிக்குத் தண்ணீர் நிரம்பமுடியாத நிலை இருக்கிறது. கிட்டத்தட்ட 10,000 ஏக்கர் நிலங்களுக்கு பாயக்கூடியது அந்த ஏரித் தண்ணீர். போன சர்க்கார் அதைக் கவனியாமல் அப்படியே விட்டுவிட்டது. உடனடியாக எங்கே எங்கே மட்டை உடைசல் இருக்கிறதோ, அதையெல்லாம் செப்பனிட்டுச் சீர் செய்ய, அந்த அளவுக்குச் சிறு பாசன, பெரிய பாசன வசதிகளை அமைச்சர் அவர்கள் உடனடியாகக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[1967 ஜூன் 23

[திரு. க. மு. ராஜகோபால்]

மின்சார போர்டு ஒன்று இருக்கிறது. நிலத்தைச் சீர்திருத்தி விட்டு, கிணற்றையும் தோண்டிவிட்டு, அதற்கு வேண்டிய மின்சார பம்பு செட்டுகள் அமைத்து, எல்லாம் செய்து ஆபீசுக்குச் செல்கிற நேரத்தில், என்ன காரணமோ தெரியவில்லை, 4, 5 ஆண்டுகளுக்கு நிறுத்தி வைக்கப்படுகிறது பல இடங்களில். குறிப்பாக கடன் வாங்குகிறார்கள். ஆண்டு ஒன்றுக்கு அந்தக் கடனை பல விவசாயி களிடம் ரூ. 50, 100 என்று வாங்குகிறார்கள். பாலாறு சர்டிபி கேட் என்று ஒன்று கேட்கப்படுகிறது. பாலாறு சர்டிபிகேட் வாங்கு வதற்குப் பல தொல்லைகளை அனுபவிக்க வேண்டியிருக்கிறது. விவசாயிகள். பாலாறு சர்டிபிகேட் என்பதையே எடுத்துவிட வேண்டும். 200 அடி, 2,000 அடி என்றெல்லாம் சொல்கிறார்கள். அப்படியிருந்தால் கூடப் பரவாயில்லை. கல்லும், காட்டுமான உத்திரமேரூர் பகுதியில் இந்தப் பாலாறு சர்டிபிகேட் கேட்கிறார்கள். அங்கே இந்தப் பாலாறு சிஸ்டத்தையே நீக்கி, ஏழை விவசாயி களுக்கு இந்தத் தொல்லையில்லாமல் அறவே நீக்கி, அவர்களுக்கு மின்சார வசதி செய்து கொடுப்பதுபற்றி உறுதி செய்தால், குறிப் பாக 2, 3 வருஷங்களில் இந்த நாட்டில் நல்ல முறையில் விவசாய உற்பத்தியை அதிகரிக்க முடியும் என்று சொல்லிக்கொண்டு, எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பு அளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி செலுத்திக் கொண்டு, எனது உரையை முடித்துக்கொள் கிறேன். வணக்கம்.

* திரு. ஏ. ஆர். பெருமாள் : இந்த விவாதத்திலே பேசுவதற்கு எனக்கும் ஒரு வாய்ப்பு தந்தமைக்காக என்னுடைய நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கையை பெரு மதிப்பிற்குரிய பேரறிஞர் அண்ணா அவர்கள் இந்த மன்றத்தில் வாசிக்கிறபொழுது, என்னுடைய சிந்தனை கடந்த காலத்திற்குச் சென்றது. இந்த நாட்டிலே 20 ஆண்டுகளாக ஆட்சி செய்த காங்கிரஸ் சர்க்கார் கடந்த காலத்தில் பேசுகிறபொழுது 'எங்களைத் தவிர மற்றவர்கள் யாரும் இந்த நாட்டை ஆள முடியாது, அப்படி ஆட்சியை வேறு ஒருவரிடத்தில் ஒப்படைத் தால் இந்த நாடே சுடுகாடாகிவிடும், பூமி ரெண்டாகப் பிளந்து விடும், பூகம்பம் உண்டாகி பூமி வெடித்துவிடும்' என்றெல்லாம் பேசினார்கள். புது ஆட்சி அமைக்கப்பட்டு 3 மாத காலம் ஆகி விட்டது. மாநில முதல் அமைச்சர் இந்த ஆட்சியினுடைய ஒரு ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டத்தை இந்த மன்றத்தில் சமர்ப் பித்துவிட்டார்கள். பூமி பிளக்கவும் இல்லை. பூகம்பம் ஏற்பட்டு பூமி வெடிக்கவுமில்லை. எல்லாம் அமைதியாகவே இருக்கிறது. நிர்வாகம் சீராக நடக்கும் என்ற அறிகுறிகள் தென்படுகின்றன. ஒரு நல்ல அனுபவம் மிக்க, திறமைவாய்ந்த, நிர்வாகத்தில் நீண்ட காலம் பண்பட்டவர்கள் தயாரித்த ஒரு அறிக்கையைப் போல நம்முடைய மாநில முதல்வர் அவர்களுடைய அறிக்கை இருப்பது கண்டு, நான் அதை மனமார பாராட்டி வரவேற்கிறேன். அதே நேரத்தில் இந்த அறிக்கையைப் பற்றி பேசிய அத்தனை பேர்களும்



1967 ஜூன் 23]

[திரு. ஏ. ஆர். பெருமாள்]

மிகத் தெளிவாகவும், விளக்கமாகவும் இந்த அறிக்கையின் ஒவ் வொரு அங்கத்தையும், பிரித்துப் பிரித்து எடுத்துக் கூறிவிட்டார் கள். ஆகவே, ஒட்டுமொத்தமாகச் சொல்ல வேண்டுமென்றால், இந்த அறிக்கை ஏழை மக்களுடைய வாழ்வை உயர்த்துவதற்காகத் தயாரிக்கப்பட்ட அறிக்கை என்பதைத் தாழ்மையோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

குறிப்பாக ராமநாதபுரத்திலுள்ள காங்கிரஸ் நண்பர்கள் ஒரு பிரசாரத்தைச் செய்கிறார்கள். அதை மாநில முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். நம்முடைய பெருமதிப்பிற்குரிய பேரறிஞர் அண்ணா அவர்கள் தேர்தல் நேரத் தில் பேசுகிறபொழுது சொன்ன அந்த 3 படி அரிசித் திட்டத்தையும், இந்த ஆட்சி அமைக்கப்பட்ட பிற்பாடு அமைக்கப்பட்டுள்ள அமைச்சரவையில் முக்குலத்தவர் ஒருவருக்கு இடம் தராதது பற்றி யும், ஆக இரண்டையும் இணைத்து, 1967-ம் ஆண்டுக்குப் பிற்பாடு அமைக்கப்பட்டிருக்கும் அண்ணாவின் ஆட்சியில், 3 படி அரிசியும் இல்லை, முக்குலத்தவருக்கு மந்திரியும் இல்லை, என்ற ஒரு கோஷத்தை அந்தப் பிராந்தியத்தில் கிளப்பியிருக்கிறார்கள். முக் குலத்தவருக்கு அமைச்சரவையிலே இடம் அளிக்கப்படவில்லை என் கின்ற குறைபாடு எங்களுக்கு ஒரு பெரிய குறைபாடு அன்று. அதை ஒரு குறைபாடாக ஏற்றுக்கொள்ளவும் இல்லை. அவர்கள் பேசுகிறபொழுது காரணமும், விளக்கமும் கொடுப்பது பேறுகும். கடந்த காங்கிரஸ் சர்க்காரில் ஒவ்வொரு அமைச்சர் அவையிலும் முக்குலத்தவருக்கு நிச்சயம் ஒரு அமைச்சர் பதவி கொடுக்கப்பட்டு வந்தது. சென்ற அமைச்சர் அவையிலே ஒரு சபாநாயகரும், ஒரு அமைச்சரும் முக்குலத்தவராக இருந்தார்கள். 'நீங்கள் எங்களுடைய ஆட்சியை வேண்டாம் என்று உதரித் தள்ளி விட்டு, காங்கிரசுக்கு விரோதமாக வாக்களித்து, காங்கிரசுக்குப் பதிலாக வேறொரு ஆட்சியை அமைத்தீர்கள். இந்த அமைச்சர் அவையில் உங்களுக்கு அமைச்சர் இடமில்லை' என் றெல்லாம் பேசுகிறார்கள். ஜாதியின் பெயரால், ஜாதிக்கு முக்கியத் துவம் கொடுத்து, அமைச்சரவையில் இடம் கேட்பது கூடாது, அது சிறந்த அரசியல் கொள்கை இல்லை, அம்மாதிரியான குறையை நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்று மக்களுக்குத் தெளிவாக விளக்கியிருக்கிறோம். இருந்தாலும்கூட, மதுரை, ராமநாதபுரம் திருநெல்வேலி இந்த மூன்று மாவட்டங்களும் தென்பாண்டிய வட்டாரத்தில் உள்ளது. அங்கே பெரும்பகுதி மக்கள் முக் குலத்துவ மக்கள் என்று நான் சொல்லவேண்டிய அவசியமில்லை. அவர்கள் பாட்டன் காலத்திலேயே வெள்ளைக்காரன் இந்த நாட்டை ஆட்சி செய்த காலத்திலேயே வெள்ளைக்கார அரசுக்கு விரோத மாக நின்றார்கள். புலித்தேவன், பகதூர் வெள்ளையத் தேவன், சின்ன மருது, பெரிய மருது, அதற்குப் பின்னாலே எங்கள் அரும்பெரும் தலைவர் முத்துராமலிங்கத் தேவர் இவர்களெல்லாம் வெள்ளையர் களைத் தொடர்ந்து எதிர்த்துவந்த வீரபாம்பரையைச் சேர்ந்தவர்

[திரு. ஏ. ஆர். பெருமாள்]

கள். வெள்ளைக்கார ஆட்சி காலத்திலேயே ஒரு குற்றப் பரம்பரைச் சட்டத்தைக் கொண்டு வந்து, முன்னேறவிடாமல் அடக்கி, ஒடுக்கி வந்தார்கள். குறிப்பாக இந்தச் சமுதாயத்திற்கு வெள்ளைக்காரர் ஆட்சியிலிருந்தே கல்வி வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை என்பது மட்டுமல்ல. அதற்குப் பின் வந்த காங்கிரஸ் ஆட்சியையும் தொடர்ந்து எதிர்த்து வந்த காரணத்தினால், அந்த அரசாங்கமும் அந்த மக்களுக்கு எந்தவிதமான நன்மையையும் செய்யாமல் புறக்கணித்து வந்தது. அதன் காரணமாக எங்கள் அரும்பெரும் தலைவர் தேவர் பிரார்ந்தியத்திலே முதுகளத்தூர் தாலூகாவில், உதாரணத்திற்கு எடுத்துக்கொண்டால், ஒருவர்கூட டாக்டராக இது வரையில் வந்ததே கிடையாது. வெள்ளைக்காரர் ஆட்சியிலும் சரி, 20 ஆண்டுகால காங்கிரஸ் ஆட்சியிலும் சரி, ஒரு டாக்டர் கூட முதுகளத்தூர் தாலுகாவிலிருந்து வந்தது கிடையாது. என்ன கல்விச் சலுகையை அளித்தார்கள், கடந்த கால அரசாங்கம் என்ன செய்திருக்கிறது என்பதைத் தெளிவாக எடுத்துக் காட்டுவதற்காகத் தான் இதைக் குறிப்பிடுகிறேன். இது சம்பந்தமாக எங்களுடைய தலைவர் திரு. மூக்கையா தேவர் அவர்கள் மாநில முதல் அமைச்சர் அவர்களோடு பேசியதாக என்னிடம் தெரிவித்தார்கள். இதையெல்லாம் முதல் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரவேண்டும் என்பதற்காகத் தான் சொல்கிறேனே தவிர, குறைபாடாகச் சொல்லவேண்டும் என்ற நோக்கத்தோடு அல்ல.

அடுத்தபடியாக, சேலம் இரும்பாலைத் திட்டத்திற்காகவும் தூத்துக்குடி ஆழ்கடல் திட்டத்திற்காகவும், மத்திய சர்க்காரோடு பேசி நிற்கும் நாம். தூத்துக்குடி திட்டத்திலே எவ்வளவு அக்கறை காட்டுகிறோமோ, அதில் சிறிதளவாவது சேதுசமுத்திரத் திட்டத்திற்குக் காட்ட வேண்டும் என்று கனம் முதல் அமைச்சரைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, அபிவிருத்தி வேலைகள் என்று வரும்போது, அடுத்து வருகிற சர்க்கார் வேறொன்றையும் பெரிதாகச் சாதிக்க வேண்டாம் என்று எங்கள் தலைவர் தேவர் அவர்கள் அடிக்கடி சொல்லுவார்கள். காங்கிரசுக்குப் பதிலாக வருகிற சர்க்கார் வேறு எதையும் சாதிக்க முடியாவிட்டாலும், நிர்வாகச் சீர்திருத்தம், லஞ்ச ஊழலை ஒழித்தல் இவை இரண்டையுமே செய்தால், நிச்சயமாக நல்ல பலன் கிட்டும் என்று எங்கள் தலைவர் தேவர் அவர்கள் சொல்லுவார்கள். நிர்வாகச் சீர்திருத்தமும் லஞ்ச ஊழலை ஒழித்தலும் செய்தாலேயே நாட்டு மக்கள் மத்தியில் விழிப்புணர்ச்சி ஏற்படும்.

அடுத்தபடியாக, கிராம மக்கள் குறைந்தபட்சம் தேர்தலுக்குப் பிறகு, என்னுடைய தொகுதியில் மட்டுமல்ல, வேறு பல தொகுதிகளிலும் கூட, எல்லாக் கிராமங்களிலும் ஒரே மாதிரியாக மூன்று



[திரு. ஏ. ஆர். பெருமாள்]

கோரிக்கைகளை விடுக்கிறார்கள். குடி நீர் வசதி அவர்களுக்குத் தேவையாக இருக்கிறது. போக்குவரத்துச் சாலை வசதி செய்து கொடுக்க வேண்டும். ஒளியோடு வாழ மின்சார வசதி செய்து கொடுக்க வேண்டும். இவைதான் எல்லாக் கிராம மக்களுக்கும் தேவைப்படுகின்றன. இவற்றைச் செய்து கொடுக்க ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். கடந்த காலத்தில் காங்கிரஸ் சர்க்கார் கொஞ்சங்கொஞ்சமாகக் கிராம மக்களிடமிருந்து விலகிச் சென்றதால்தான் காங்கிரசுக்கு முக்கால்வாசி பலம் போய்விட்டது. பெரும்பான்மையான பலம் கிராமங்களில் தான் இருந்தது. அவர்கள் கிராம மக்களைப் புறக்கணித்ததால் தான் காங்கிரசிடம் வெறுப்புணர்ச்சி ஏற்பட்டு மக்கள் காங்கிரசைப் புறக்கணித்தார்கள். நகர மக்களைவிட கிராம மக்கள் தான் அதிகமாக இருக்கிறார்கள் என்று கருதுகிறேன். 75 சத விகிதமாவது கிராம மக்கள் இருப்பார்கள் என்கிற அடிப்படையில் நாம் காரியங்கள் செய்ய வேண்டுமென்று பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

நீண்ட நெடுங்காலமாகப் பாதிக்கப்பட்டு வந்துள்ள முக்குலத்தோர் சமுதாயத்திற்குக் கல்வி, மற்ற எல்லா வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டும் என்று முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொண்டு இங்கே பேச வாய்ப்புக் கொடுத்ததற்காக தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு என் உரையை முடிக்கின்றேன்.

* திரு. மு. இரத்தினசபாபதி: மதிப்பிற்குரிய தற்காலிகத் தலைவர் அவர்களே, இந்தச் சபையில் பேரறிஞர் அண்ணா அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிநிலை அறிக்கை மீது என் கருத்துக்களைக்கூற வாய்ப்பு அளித்ததற்குத் தங்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

தமிழகத்தைப் பொறுத்த வரையில், இங்கே உள்ள மக்கள் அனைவரும் மகிழ்ச்சியோடு எதிர்பார்த்திருந்த நிலைக்குக் குந்தகம் ஏற்படாமல் மேலும் அவர்களுக்கு மகிழ்ச்சியூட்டத்தக்க அளவில் இந்த வரவு செலவுத் திட்டம் அமைந்திருக்கிறது. அப்படிப்பட்ட அறிக்கையில் நாட்டிலுள்ள ஏழை விவசாய மக்கள் நன்மையுறும் வண்ணம் புன்செய் விவசாயம் செய்து கொண்டிருக்கும் மக்களுக்கு ஊக்கமளிக்கும் வகையில் அந்த விவசாயிகளுக்கு புன்செய் நிலத் தீர்வையை ரத்து செய்திருக்கிறார்கள். இது விவசாயப் பெருங்குடி மக்களுக்கு ஒரு பெரிய நன்மையைச் செய்ததாக இருக்கிறது. இதன் மூலம் இந்த நாட்டிலே விவசாயப் பெருங்குடி மக்கள் நன்மை அடைந்து பெருமைப்படும் அளவிற்குப் பாராட்டத்தக்கதாக இருக்கிறது.

இந்த நாட்டிலே முக்கியமானது உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்பது. இன்றைக்கு நமக்கு இருக்கக்கூடிய நிதி வசதியை வைத்துக் கொண்டு எந்த அளவிற்குப் பெருக்க முடியுமோ அதற்கு ஏற்றவாறு திட்டங்களைத் தீட்டி, அதன் மூலம்

[திரு. மு. இரத்தினசபாபதி]

உணவுப் பஞ்சத்தைத் தீர்க்கத் திட்டங்கள் போட்டிருக்கிறார்கள். சிறு வியாபாரிகளுக்கு நன்மை அளிக்கும் வகையில் பத்தாயிரம் ரூபாய் என்பதை நீக்கி, பதினையாயிரம் ரூபாய் வரை வியாபாரம் செய்பவர்களே வரி கொடுத்தால் போதும் என்ற அளவில் சிறு வியாபாரிகளுக்கு நன்மை பயக்கும் ஒரு ஏற்பாட்டைச் செய்திருக்கிறார்கள்.

இப்பொழுது கல்வியைப் பொறுத்த மட்டில், இந்த நாட்டிலுள்ள எல்லா மக்களும், எந்த ஜாதியைச் சேர்ந்திருந்தாலும், ஆயிரத்தைந்நூறு ரூபாய்க்குக் குறைந்த வருமானம் உள்ளவர்களுக்குக் கல்லூரியில் இலவசக் கல்வி வசதி செய்யப்பட்டிருக்கிறது. அரிசன நல உபகாரச் சம்பளம் இரண்டாயிரம் ரூபாய் வருமானம் உள்ளவர்கள் வரை கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதனால் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நல்ல வசதிகள் ஏற்படும். இந்த வசதிகளோடு தமிழகத்தைப் பொறுத்த வரையில், இதுவரையில், இல்லாத அளவிற்குப் புரட்சிகரமாக ஒரு பெரிய காரியத்தைச் செய்கிறார்கள். நஷ்ட ஈடு கொடுக்காமலேயே 75 மைலுக்கு மேற்பட்ட தனியார் பஸ்களை தேசீயமயமாக்குவதன் மூலம் நம் நாட்டு மக்களுக்கு நல்லதொரு சோஷலிச சர்க்கார் கிடைத்தது என்னும் அளவிற்கு நல்லதொரு ஏற்பாட்டைச் செய்திருக்கிறது. இப்படிப்பட்ட நல்ல திட்டங்களோடு நீர்ப்பாசனத்திற்காகப் பல வகையிலே ரூ. 11,69,00,000 ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த நாட்டிலுள்ள விவசாயத்திற்குப் பயன்படக்கூடிய நிலங்களை மேலும் அதிக அளவிற்குப் பயன்படுத்த நல்ல திட்டமாக வகுத்து இருக்கிறது. இத்தகைய திட்டங்களையும் முன்பு ஆளும் கட்சியாக இருந்த காங்கிரஸ் உறுப்பினர்கள் பாராட்டுகிறார்கள். ஆனால், இதற்கு மேலும் செய்யவில்லையே என்று இந்த அரசை செய்யக்கூடிய அளவிற்கு மேலும் வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்கிறார்கள். இந்த நாட்டைப் பொறுத்த வரையில், மத்திய சர்க்கார் ஒன்று இருக்கிறது. மாநில சர்க்கார்களும் இருக்கின்றன. மாநில சர்க்கார்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்யும் போது, மத்திய சர்க்கார் யஜமானர் போல, வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்காமல் இருப்பதன் காரணமாகப் பொருளாதாரத்துறையில் இன்னும் பல்வேறு வகைகளில் பற்பல திட்டங்களைத் தக்க காலத்தில் நிறைவேற்றமுடியாமல் இருக்கிறது. சங்கடப்படுகிறோம். அதே போல, கடந்த மூன்று திட்டங்கள் போட்டும் நம் குறைகள் தீர்ந்தபாடில்லை. சேலம் உருக்காலையும் தூத்துக்குடித் திட்டமும் கைவிடப்படும் நிலையில் இருப்பதாகத் தெரிகிறது. வேலையே ஆரம்பிக்கவில்லை. சேலம் உருக்காலையைப் பொருத்தவரையில், அனுகூலமான அறிவிப்பு வரவில்லை. மத்திய அரசு இந்த நாட்டின் அவ்வளவு பகுதிகளையும் ஒன்றாக நினைத்தால், 15 ஆண்டுகாலமாகச் சொல்லப்பட்டு வந்திருக்கும் அந்தத் திட்டம் நிறைவேறும் வகையில் தங்கள் நிதியிலிருந்து ஏற்பாடு செய்திருக்க வேண்டும். இன்



[திரு. மு. இரத்தினசபாபதி]

றைக்கு சேலம் உருக்காலைத் திட்டம் நிறைவேற நிதி வசதி செய்யப்படவில்லை. அதில் எந்த விதமான சங்கடமும் இருப்பதாகத் தெரியவில்லை. நான்காவது திட்டத்தில் சேர்க்கப்பட வேண்டும். இந்த நாட்டில் சுரங்க கனரகத் தொழிலுக்காக 3,751 கோடி ரூபாய் செலவிடும் அந்த அரசுக்கு இந்தத் திட்டத்தை மேற்கொள்வதால் எந்தக் குறைவும் ஏற்பட்டுவிடாது. அதேபோலத்தான் தூத்துக்குடித் திட்டத்திற்கும் 17 கோடி ரூபாய் வேண்டும். அந்த நிதியையும் ஒதுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். அப்படிச் செய்தால் தான் மத்திய சர்க்கார் மாநில சர்க்கார்களோடு கூட்டுறவு முறையில் அரசு செலுத்துவதாக அமையும். குறைகூறும் காங்கிரஸ்காரர்கள் தங்களுடைய செல்வாக்கைப் பயன்படுத்தி மத்திய சர்க்காரோடு வாதாடி, அரசியல் சட்டத்தை மாற்றியமைக்க, மாநில சர்க்கார்களுக்கு வசதிகளைத் தேடிக் கொடுக்க ஒரு தக்க சூழ்நிலையை உருவாக்க வேண்டும்.

எனது தொகுதியைப் பற்றி ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். தமிழகத்திலேயே மிகவும் பிற்போக்கான தொகுதி விளாத்திகுளம் தொகுதி. அங்கே உள்ள வைப்பாறு பாசனத்தைக் கொண்டு இரண்டு போக சாகுபடி செய்ய ராஜாபட்டி, ஆற்றங்கரை ஆக இரண்டு இடங்களிலும் அணைகளைக் கட்டி, பல குளங்களை நிரப்பினால், பல ஏக்கர் நிலங்களைப் பாசனத்திற்குக் கொண்டு வர வாய்ப்பு இருக்கிறது. இந்தத் திட்டத்தை உடனடியாக ஏற்று நடத்தி, இப்பொழுது வெறும் புன்செய் நிலமாக இருக்கக்கூடிய அந்தப் பகுதியை ஓரளவு நன்செய் நிலமாக மாற்றக்கூடிய வாய்ப்பை ஏற்படுத்தித் தரவேண்டும் என்று இந்த அரசை நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

மத்திய அரசாங்கம் தனது சீனிக் கோட்டாவைக் குறைத்ததன் காரணமாக கிராமப்புறங்களில் சீனியின் விலை கிலோகிராம் ஒன்றுக்கு மூன்றரை ரூபாய் அளவிற்கு உயர்ந்திருக்கிறது. அதையும் கண்காணித்து, கிராமப்புறங்களில் சீனி நல்ல முறையில் கிடைக்கும் வண்ணம் விநியோகம் செய்வதற்கான ஏற்பாட்டைச் செய்ய வேண்டும் என்று நான் இந்த அரசைக் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

சில பஞ்சாயத்து யூனியன்களின் கீழ் நடைபெற்று வரும் பள்ளிக்கூடங்கள் ஓராண்டு நடைபெற்ற பிறகு கல்வி இலாக்காவினால் அதற்கு அனுமதி நிராகரிக்கப்பட்டிருக்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது. விளாத்திகுளம் யூனியனில் நான்கு பள்ளிகள் ஓராண்டு காலம் நடைபெற்று வந்தும், அனுமதி நிராகரிக்கப்பட்டதன் காரணமாக, அவை தொடர்ந்து நடைபெற முடியாமலிருக்கின்றன. அதனால், அங்குள்ள மக்களுக்கு ஒரு வித அதிருப்தி ஏற்பட்டுக் கொண்டு வருகிறது. அந்த நிலைமையையும் கவனித்து, அந்த நான்கு பள்ளிகளும் தொடர்ந்து நடைபெறுவதற்கு

[திரு. மு. இரத்தினசபாபதி]

வேண்டிய ஏற்பாட்டைச் செய்ய வேண்டும் என்று அரசினரைக் கேட்டுக் கொண்டு இந்தப் பேரவையில் பேச எனக்கு வாய்ப்பு அளித்தமைக்காக தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.

* **திரு. எஸ். சிவசுப்பிரமணியன் :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த நிதி நிலை அறிக்கையின் மீது ஒருசில வார்த்தைகள் கூற நான் முன்வந்துள்ளேன். புது அரசாங்கம் பதவி ஏற்ற பிறகு எல்லா மக்களும் தங்களுக்கு நன்மை ஏற்படும் என்று எதிர் பார்த்துக் கொண்டிருந்தார்கள். நானும் அப்படியேதான் எதிர் பார்த்தேன். ஆனால், அதற்குப் பதிலாக எல்லோரும் ஏமாற்றப் பட்டார்கள். இந்த நிதி நிலை அறிக்கையைப் பார்க்கும்போது, என்.ஜி.ஓ.-க்கள் எல்லோரும் தங்களுக்கு ஒன்றுமே இல்லை என்பதை உணர்ந்து போராட்டம் செய்வதற்குத் தயாராக இருக்கிறார்கள். ஆசிரியர்கள், இந்த அரசு வந்த பிறகு தங்களுக்கு நல்லது கிடைக்கும் என்று எண்ணி, இந்த அரசுக்கு வேண்டிய நல்ல காரியங்களைச் செய்து கொண்டிருந்தார்கள். ஆனால், இப்பொழுது அவர்களும் ஏமாந்துவிட்டார்கள். அதுபோலவே விவசாயிகளும்; அது போலவே வியாபாரிகளும்; அது போலவே மற்றவர்களும். ஆகவே, இந்த நிதிநிலை அறிக்கையைப் பார்க்கும் போது, ஏற்கெனவே இருந்த அரசாங்கம் நல்லது செய்யவில்லை, இப்பொழுது வந்திருக்கக்கூடிய அரசாங்கம் நல்லது செய்யும் என்று எதிர்பார்த்த அளவிற்கு ஒன்றுமே இல்லை என்பதைத்தான் நான் இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

நில வரியைப் பொறுத்த வரையில், புன்செய்க்கு வரி இல்லை; நன்செய்க்கு வரி உண்டு. புன்செய் என்று சொன்னால், நூற்றுக் கணக்கான ஏக்கர்கள் வைத்திருந்தாலும் அவர்களுக்கு விதி விலக்கு. ஆனால், அரை ஏக்கர், கால் ஏக்கர், ஒரு ஏக்கர் நன்செய் வைத்திருக்கக்கூடிய அத்தகைய விவசாயிகளுக்கும் வரி என்ற நிலை இருப்பதைப் பார்க்கும்போது எந்த அளவிற்கு நன்செய் நிலம் வைத்திருக்கக்கூடிய விவசாயிகளுக்கு ஏமாற்றத்தை அளித்திருக்கிறது என்பதை மாத்திரம் கவனிக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** கனம் உறுப்பினர் அவர்கள் மிகுந்த அனுபவம் உள்ள உறுப்பினர். ஆகையால் அவர்கள் ஏதாவது தவறாகப் பேசினால், அதைப் பொது மக்கள் நம்பிவிடக் கூடும். அதற்காக நான் விளக்க விரும்புகிறேன். புன்செய் நிலம் நூற்றுக்கணக்கான ஏக்கர் இருந்தால் அவர்களுக்கு வரி இல்லை என்பது முழு உண்மை அல்ல. நூற்றுக்கணக்கான ஏக்கர் புன்செய் இருக்குமானால், அவர்கள் விவசாய வருமான வரிச் சட்டத்தின் கீழ் வருவார்கள்.





**திரு. எஸ். சிவசுப்பிரமணியன் :** நன்செய் நிலத்தில்தான் நெல் விளைகிறது. இப்பொழுது நெல் உற்பத்திதான் அதிகமாகத் தேவைப்படுகிறது. இப்பொழுது படியரிசித் திட்டம் கூட . . .

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** கனம் உறுப்பினர் அவர்கள் நான் சொன்ன விளக்கத்தைப்பற்றி என்ன கருதுகிறார் என்பதைத் தெரிவித்தால் நான் பேசியதற்குப் பயன் இருக்கும், அவர் தம்முடைய தவறை நீக்கிக் கொண்டார் என்றும் நாட்டு மக்கள் மகிழ்ச்சி அடைவார்கள்.

**திரு. எஸ். சிவசுப்பிரமணியன் :** நன்செய்க்கும் புன்செய்க்கும் நில வரியை ரத்து செய்துவிட்டால் நல்லது என்பதைத்தான் நான் இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். நெல் நன்செய்யிலேதான் அதிகமாக விளைகிறது. விவசாயிகளை ஏமாற்றிவிட்டார்கள் என்று நான் சொல்லும்போது, நன்செய் நிலம் வைத்திருப்பவர்களுக்கு நில வரி எடுக்கப்படாததால் அவர்களுடைய உற்சாகம் குறையக்கூடும் என்பதைத்தான் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நன்செய்க்கும் புன்செய்க்கும், ஏற்கனவே இருந்த அரசாங்கம் செய்தது போல இந்த அரசாங்கம் செய்யவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

எல்லோரும் படிக்க வேண்டும். நன்றாகப் படிக்க வேண்டும். ஆனால், குறிப்பிட்ட அளவு ஸ்பெஷல் ஃபீஸ் கட்ட வேண்டிய அவசியம் இருக்கிறது. கல்லூரிப் படிப்பு வரையில் இலவசமாகப் படிக்க ஏற்கனவே இருந்த அரசாங்கம் செய்த மாதிரி இப்போதும் எல்லோரும் இலவசமாகப் படிக்க வசதி செய்தால் நலமாக இருக்கும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

கொள்முதல் வந்ததைப் பார்க்கும்போது, உண்மையிலேயே காங்கிரஸ்காரர்கள் அதிகமாக இதில் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதுதான் என்னுடைய அபிப்பிராயமாகும். ஏற்கனவே இருந்த அரசாங்கம் போனஸ் கொடுக்க வேண்டும், விலையை ஏற்றிக் கொடுக்க வேண்டும் என்று மத்திய அரசாங்கத்தை வற்புறுத்தி, அந்த அளவில் நல்லது செய்திருக்கிறது. அதையே இந்த அரசாங்கமும் பின்பற்றி, போனஸும், விலையேற்றமும் கொடுத்து, விவசாயிகளை உற்சாகப்படுத்தினால் உணவு உற்பத்தி பெருகுவதற்கு வாய்ப்பாக இருக்கும்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** மத்திய அரசாங்கம் எடுத்துச் சொன்னபடி, போனஸும், அவர்கள் குறிப்பிட்ட விலையையும் கொடுத்துத்தான் வாங்கிக் கொண்டு வருகிறோம். நாங்கள் செய்வதை 'செய்தால் நன்றாக இருக்கும்' 'செய்தால் நன்றாக இருக்கும்' என்று கனம் உறுப்பினர் பேசிக் கொண்டே போனால், நாங்கள் அதைச் செய்யவில்லை என்பதைப் போல் ஒரு பொருள் படும். என்ன விலையை மத்திய அரசாங்கம் நிர்ணயிக்கிறதோ அந்த அதிகபட்ச விலையைக் கொடுத்துத்தான் கொள்முதல் செய்யப்படுகிறது. எதிர்பார்க்கப்பட்டதைவிட அதிகமாகத் தரப்படுகிற இடத்தில் போனஸும் தரப்படுகிறது.

**திரு. எஸ். சிவசுப்பிரமணியன்:** சேரணிப் படையைப்பற்றி ஒரு சில வார்த்தைகள் நான் கூற ஆசைப்படுகிறேன். கிராமத் தொண்டர் படை என்று அமைக்கப்பட்டு அது நல்லமுறையில் கிராமங்களில் பயன்பட்டு வந்திருக்கிறது. அது கட்சிச்சார்பற்ற முறையில் பயன்பட்டு வருகிறது. இப்பொழுது நம்முடைய அமைச்சரவை 'சேரணிப்படை' என்பதற்குச் சில லட்ச ரூபாய் தொகை ஒதுக்கி இருக்கிறது. இந்த நிலையில் ஏற்கனவே இருந்த தொண்டர் படை என்ன ஆயிற்று? அந்தத் தொண்டர் படை, கட்சிச் சார்பற்ற முறையில், நல்ல முறையில் செயல்பட்டு வந்தது. எல்லோருமே அதை ஆதரித்தார்கள். சேரணிப்படை என்று புதிதாக அமைத்து அதற்காகச் செலவிடாமல் ஏற்கனவே இருந்து வரும் தொண்டர் படையே தொடர்ந்து இருக்கும்படிச் செய்ய வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் முதல் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பதவி ஏற்றபோது, கட்சிப் பற்றற்ற அரசாங்கம் நடக்கும் என்று சொன்னார்கள். நாங்கள் வரவேற்றோம். எங்கள் கட்சி வரவேற்றது. எங்கள் தலைவர் திரு. காமராஜ் அவர்கள் கூட 'அவர்களை ஆளட்டும்' என்று சொன்னார்கள். ஆனால், இப்பொழுது என்ன நடக்கிறது? சிவப்பு கறுப்புத் துண்டு போட்டவர்கள் போலீஸ் ஸ்டேஷனிலே நுழைந்து, 'நீ இன்னது செய்', 'இவர்களை அரஸ்ட் பண்ணு' 'இவர்கள் மேல் கேஸ் போடு' என்று சொல்லுகிறார்கள். போலீஸ்காரர்கள் ஒன்றும் சொல்ல முடியவில்லை. பயப்படுகிறார்கள். இந்தப் பயம் இருக்கக் கூடாது. இந்தப் பயம் நீடிக்கும்படி விடக் கூடாது என்று முதலமைச்சர் அவர்களை நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** எந்த போலீஸ் ஸ்டேஷனில் அப்படி நடந்தது என்பதைக் கனம் உறுப்பினர் கூற முடியுமா?

**திரு. எஸ். சிவசுப்பிரமணியன்:** குறிப்பாகச் சொல்லவேண்டுமானால், சிதம்பரம் தாலுக்காவைப் பொறுத்தவரையில் பல இடங்களில் நடக்கிறது. சிதம்பரம் போலீஸ் ஸ்டேஷனிலே கூட . . .

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** ஏற்கனவேயே சிதம்பரம் தாலுக்காவிலே பரபரப்பு இருக்கிறது. அதை அதிகப்படுத்தும்படியான முறையில் கனம் உறுப்பினர் அவர்கள் இவ்வாறு பேசுவது உண்மையிலேயே நல்லதல்ல. கறுப்பு-சிவப்புத் துண்டு போட்டவர்கள் போலீஸ் ஸ்டேஷனிலே போய்த் தங்களுக்கு வேண்டிய காரியங்களை யெல்லாம் சாதிக்கிறார்கள் என்று நம்முடைய நண்பர் அவர்கள் சொல்லுவதைக் கேட்டுக்கொண்டு இனிமேல் யாராவது அப்படிப் போவார்களோ என்று எனக்கு உள்ளபடியே பயமாக இருக்கிறது (சிரிப்பு). ஆகவே, போலீஸ் இலாக்காவினருக்கு நான் தெளிவாக, திட்டவட்டமாகச் சொல்ல விரும்பு





[திரு. சி. என். அண்ணாதுரை]

கிறேன். எந்த அரசியல் வாதிகள் எதைச் சொன்னாலும்—நியாய மற்றதை அவர்கள் சொல்லுவார்களானால்—அதைக் கேட்க வேண்டும் என்ற கடமை போலீஸ் இலாகாவிற்குத் துளியும் இல்லை.

**திரு. எஸ். சிவசுப்பிரமணியன்:** போலீஸ்காரர்களும், உத்தியோகஸ்தர்களும், மற்றவர்களும் தங்கள் கடமையைச் சரிவர செய்யமுடியவில்லை என்பதைத் தான் நான் ஞாபகப்படுத்த விரும்பினேனே தவிர, வேறொன்றும் இல்லை. இதைக் கவனித்தால் நலமாக இருக்கும். உள்ளபடியே, எங்கள் ஜில்லாவில் பல இடங்களில் தகராறுகள் இருக்கின்றன. குறிப்பாக, விழுப்புரத்திலே இருக்கிறது. எங்கள் பகுதியில் நெல்லுக்கொல்லை, பேராய்பட்டு, இன்னும் பல கிராமங்களில் இருக்கின்றன. இவற்றைக் கவனிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன். இவற்றை நீடிக்கவிட்டால் நம்முடைய அரசாங்கத்திற்கு நல்லதல்ல.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** விழுப்புரத்தில் நடந்த கலவரத்திற்கும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் ஏதாவது தொடர்பு உண்டா? அப்படித் தொடர்பு உள்ள முறையில் கனம் உறுப்பினர் பேசுவது சரியா? விழுப்புரத்தில் நடந்த நிகழ்ச்சிக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் தொடர்பு இல்லை என்பதைக் கனம் உறுப்பினரே உணர்வார்கள். அது இரண்டு சமூகத்திற்கிடையே நடந்த பிரச்சினையே தவிர, கட்சி சார்பில் நடந்த பிரச்சினை அல்ல என்பதை நான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

(மணி அடிக்கப்பட்டது.)

**திரு. எஸ். சிவசுப்பிரமணியன்:** ஒரு நிமிஷம் ஆகவே, நான் பி.ப.
சொல்வதெல்லாம் இப்பொழுது இருக்கின்ற நிலைமையைத்தான் 1-00
சொல்கிறேன். இது மேலும் வளரவிடக்கூடாது என்று முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** உறுப்பினர் அவர்கள் சொல்லுகின்ற நிலைமைபோல் இல்லை. கட்சித் தோழர்கள், கட்சித் தொண்டர்கள் எல்லாம் போலீசைத் தங்கள் வழிக்கு இழுக்கிறார்கள் என்று சொல்வது தவறு. அவர்கள் சொல்வதற்கெல்லாம் போலீஸ் இலாகா செவிசாய்க்கவில்லை. ஒருசமயம் அதிகாரத்தில் உள்ளவர்கள், கறுப்பு சிவப்பு துண்டு போட்டவர்களைப் பார்த்தால், 'இவர்கள் எல்லாம் ஆட்சி செய்கின்ற கட்சி. அவர்களுடைய சின்னம் இந்தக் கறுப்பு சிவப்பு துண்டு' என்று மனமயக்கம் இருக்கக்கூடும். கனம் உறுப்பினர் அவர்கள் அணிந்திருக்கிற காவிநிறத் துண்டைப் போட்டுக்கொண்டு திருவண்ணாமலை, திருச்சி, பழனி, மதுரை போன்ற இடங்களுக்குச் சென்றால், ஒருவேளை பக்தர் வருகிறார் என்ற எண்ணம் ஏற்படக்கூடும். அப்படிப்பட்ட மயக்கம்கூட ஏற்படக்கூடாது என்று சொல்கிறேன்.

**திரு. எஸ். சிவசுப்பிரமணியன் :** என்னுடைய பகுதியிலே அத்துக்கூலிகள் அதிகம். அவர்களுக்குக் கூலி நிர்ணயம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எங்கள் பகுதியில் விவசாயிகள் அதிகம்—கூலிகள் அதிகம். ஆகவே, அவர்களுக்குக் கூலி நிர்ணயம் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன.

(மணியடிக்கப்பட்டது.)

* **திரு. கோ. பாரதி மோகன் :** சட்ட மன்றத் தற்காலிகத் தலைவர் அவர்களே, இன்றையதினம் இந்தப் பட்ஜெட்மீது பேசும் போது மத்திய சர்க்கார் சம்பந்தப்பட்ட விஷயங்களையும், மத்திய சர்க்காருடைய நிதிநிலைமையையும்பற்றி இந்தச் சபையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். பிரிட்டிஷ்காரர்கள் இந்த நாட்டை ஆண்டபோது இந்த நாட்டில் விளைந்த செல்வ ஆதாரங்கள் பூராவையும் இந்த நாட்டினுடைய அபிவிருத்திக்காகவும், இந்த நாட்டு மக்களுடைய வளர்ச்சிக்காகவும் செலவு செய்யவில்லை. அதே போல் மத்திய அரசிலே ஆட்சி செய்யும் காங்கிரஸ் அரசும் அதையே செய்கிறது. இந்தச் செல்வ ஆதாரங்கள் பூராவும் வெளிநாட்டுக் கம்பெனிகளையும், உள்நாட்டு ஏகபோக முதலாளிகளையும் நம்பியதால் இந்த நாட்டினுடைய லாபத்தை அவர்கள் அனுபவித்துக் கொண்டு வருகிறார்கள். இந்த நாட்டு மக்களுக்கு அத்தியாவசியமாக விளங்கக்கூடிய இனங்களுக்கு வேண்டிய பணம் செலவிட மத்திய அரசு மறுக்கிறது. இந்த நாட்டில் வளர்ந்துவரக்கூடிய பொதுஜனப் பெருக்கத்திற்கும், கல்வித் தேவைக்கும், இதர அபிவிருத்திகளுக்கும் வேண்டிய பொருளாதாரத்திற்கு என்ன செய்வது என்று பார்த்தால், மத்திய சர்க்கார் அந்நியர்களையே நம்ப வேண்டியிருக்கிறது. வெகுஜனத் துறையிலே வரி போட வேண்டுமென்று சொல்லி பாமர மக்கள் மீது வரியைப் போடுகிறார்கள். என்னைப் பொறுத்தவரைக்கும் மத்திய சர்க்காருக்கு ஒரு ஆலோசனையைக் கூற விரும்புகிறேன். இந்த நாட்டிலே இருக்கக்கூடிய அந்நியக் கம்பெனிகளை யெல்லாம் தேசிய உடைமையாக்கவேண்டும். ரப்பர் தோட்டங்கள், தேயிலைத் தோட்டங்கள் இவைகளை யெல்லாம் தேசிய உடைமையாக்க வேண்டும். இதேபோல் ஏற்றுமதி—இறக்குமதியை தேசிய உடமையாக்க வேண்டும். அந்நியக் கம்பெனிகளையும், ரப்பர், தேயிலைத் தோட்டங்களையும் தேசிய உடைமையாக்கினால், பாரத தேசம் பூராவுக்கும்—இந்திய தேசம் பூராவுக்கும் செலவு செய்யக்கூடிய நிலையில் முதலீடு செய்ய முடியும். இதற்குக் காங்கிரஸ்காரர்கள் தயாராக இருக்கிறார்களா என்று கேட்கிறேன். இன்றைய தினம் குழந்தைகளும் படுத்துக் கிடக்கின்றன. கூடவே ஒரு பாம்பும் படுத்துக் கிடக்கிறது. மாநில அரசுகள் எல்லாம் குழந்தைகள். மத்திய அரசு பாம்பு. மத்திய சர்க்கார் இன்றைக்கு ரயிலுக்கு, துணிகளுக்கு போடக்கூடிய வரிகளினால் எல்லா மாநில மக்களும் பாதிக்கப்படுகிறார்கள். கிராமத்தில் பாடுபடக்கூடிய மக்கள் அதிகமாக எழுதப் படிக்கத் தெரியாதவர்கள். ரயிலுக்குக் கட்டணம் உயர்ந்தது என்றால்—



ஆணி விலை உயர்ந்தது என்றால் அவைகளுக்கு எல்லாம் மாநில அரசுதான் வரி போட்டது என்று நினைக்கக்கூடிய அளவில் இருக்கிறார்கள். இந்த அடிப்படைக் கொள்கையிலே நாம் மாறுதல் செய்ய வேண்டும். அப்படிப்பட்ட மாறுதல் ஏற்பட்டால்தான் மாநிலங்களுக்கு அளிக்கக்கூடிய உதவி சரியான முறையில் ஒதுக்கித் தர முடியும்.

அடுத்தபடியாக தேச உடைமையாக்குவதைப்பற்றி தேக்கம் இருக்க வேண்டியதில்லை. உதாரணமாக எகிப்தை எடுத்துக்கொள்வோம். எகிப்தின் அதிபர் நாசர் நைல் நதி தீரத்திலே அஸ்வான் அணையைக் கட்ட வேண்டுமென்பதற்காக, ஆங்கில ஆட்சியை எதிர்த்து சூயஸ் கால்வாயை தேச உடைமையாக்கினார். சூயஸ் கால்வாயிலே வரக்கூடிய வருமானத்தை வைத்துக்கொண்டு அஸ்வான் அணையை கட்டிவிடமுடியும் என்று கூறினார். அதே போல நாம் ஏன் செய்யக் கூடாது என்று கேட்கிறேன்.

அடுத்தபடியாக நம்முடைய நிதி நிலை அறிக்கையில் இந்தியாவில் விலைவாசி உயர்ந்துகொண்டே இருக்கிறது. 1962-63-ம் ஆண்டிலிருந்து தொடர்ந்து விலைவாசி உயர்ந்துகொண்டிருக்கிறது. பாதுகாப்புச் செலவு என்ற பெயரால் 900 கோடி ரூபாய் ஒதுக்கி விரயமானதன் காரணமாக நாட்டினுடைய விலைவாசி உயர்ந்திருக்கிறது. அதுபோன்ற அனாவசியமான செலவுகளுக்குப் பணத்தை ஒதுக்க வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு துணைப்பேரவைத் தலைவர் தலைமை.**

அடுத்தபடியாக, கவர்னர் அமைப்பு முறை தேவையற்றது என்று நான் கூறுகிறேன். மேல்சபை என்பது தேவையில்லை என்று சொல்கிறேன். கவர்னர் முறை இருக்க வேண்டாமென்று கூறிக் கொள்கிறேன். கவர்னர் பதவியை ஒழிப்பதன் மூலமாக நம்முடைய நாட்டின் பணம் விரயமாகாமல் தடுக்க முடியும். மேலும் மன்னர்களுக்குக் கொடுக்கக்கூடிய நஷ்ட ஈடுகளை—ஜமீன்தார்களுக்குக் கொடுக்க வேண்டிய நஷ்ட ஈடுகளை அறவே நீக்க வேண்டும். ஜமீன்தார்கள் என்பது ஒரு கொடுமையான வர்க்கமாகும். கிராமங்களில் பாடுபடக்கூடிய மக்களுக்கு நாம் உதவ வேண்டும்.

அடுத்தபடியாக, என்.ஜி.ஓ-க்கள் நிலையை எண்ணிப் பார்க்க வேண்டும். என்.ஜி.ஓ-க்கள் கறுப்பு பாட்ஜ் அணிந்து வரக்கூடிய அவல நிலை இருக்கிறது. அவர்களுடைய குறைகளை உடனடியாகப் போக்க வேண்டும். அவர்களுக்குச் சம்பள உயர்வும், பாதுகாப்பும், வீட்டு வசதியும் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். திராவிட முன்னேற்றக் கழக மந்திரி சபை பூரண ஆதரவளித்து இதுபோன்ற விஷயத்தில் கவனம் செலுத்த வேண்டும். இதுபோல் மத்திய சர்க்கார் சிப்பந்திகள் தங்களின் உரிமைகளுக்

[திரு. கோ. பாரதி மோகன்]

காக போராடுகிறார்கள். ராஜ்ய சர்க்கார் சிப்பந்திகளும் இந்தப் போராட்டத்தை ஆதரிக்க வேண்டும். தங்களுக்கும் சட்ட பூர்வமான ஸ்தாபனம் இருக்க அவர்கள் பாடுபட வேண்டும்.

அடுத்தது நிலச்சீர்திருத்தப் பிரச்சினை. இந்த நாட்டிலே, உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் என்று சொல்லி வந்தார்கள். உழவும் தொழிலும் இணைந்தே இருப்பது. விவசாயமும், தொழிலும் இல்லையென்றால் பாரத தேசம்--இந்தியா தேசம் சரியான முறையில் இயங்காது. அதுதான் இந்த நாட்டினுடைய அடிப்படைச் செல்வமாகும். இன்றையதினம் நிலச்சீர்திருத்தம் என்ற முக்கியமான விஷயத்தை திட்டக் கமிஷனின் நிலச் சீர் திருத்த குழுவின் ஆலோசனைகளை நம்மால் முடிந்த அளவுக்கு தமிழக சர்க்காரின் கட்டுக்கோப்பிற்கு உட்பட்டு கொண்டு வர வேண்டும். நிலமில்லாத விவசாயத் தொழிலாளர்களுக்கு இந்தப் பசலியிலேயோ நடைமுறைச் சாத்தியமான ஆண்டிலேயோ தரிசு நிலங்களை விநியோகம் செய்ய வேண்டுமென்பதை இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன். சம்பா அறுவடையாகும் நிலத்தை குறுவையாக அபிவிருத்தி செய்துகொள்ளக்கூடிய நேரத்தில், தரிசாகக் கிடக்கும் நிலங்களையும் விவசாய தொழிலாளர்களுக்கு விநியோகம் செய்தால் உற்பத்தி பெருகும். நில உச்ச வரம்பு சட்டத்தையும் பரிசீலிக்க வேண்டும். நிலம் வழங்கினால் உணவு உற்பத்தி அதிகமாக ஏற்படும். அதற்கான ஒரு நிலச் சீர்திருத்த திருத்தச் சட்டத்தைப் பிரகடனம் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மற்றொரு நிலை ஏற்பட்டிருக்கிறது. தஞ்சை ஜில்லாவில் இருக்கக்கூடிய விவசாயிகள் முன்பே குத்தகை பாக்கிக்காக நிலத்தில் இருந்து வெளியேற்றப்படுகிறார்கள். கையில் பணம் இல்லாத நிலையில் தவிப்பது ஒருபுறம், கூட்டுறவு பாங்கிகளில் வாங்கியுள்ள கடன் வசூல் தொல்லை ஒருபக்கம். எனவே உடனடியாக குத்தகை பாக்கிக்காக நிலத்தில் இருந்து வெளியேற்றப்படாதிருக்க குத்தகை வஜா செய்தாகவேண்டும். மடங்கள், தேவஸ்தானங்களுக்குச் சொந்தமான நிலங்களைக் குத்தகைக்கு வைத்திருப்பவர்களின் குத்தகையை உடனடியாக வஜா செய்ய வேண்டும். அதனால் மடங்கள், தேவஸ்தானங்களுக்கு ஒன்றும் நஷ்டம் கிடையாது. கூட்டுறவுச் சங்கங்கள் வழங்கியுள்ள கடன் வசூலை ஒத்திவைக்க வேண்டும். . . .

**திரு. ரா. ராமச்சந்திர துரை:** மதிப்பிற்குரிய துணைத் தலைவர் அவர்களே, 1967-68-ம் ஆண்டு நிதி நிலை அறிக்கையிலே பேசும் சந்தர்ப்பம் கொடுத்தமைக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த பொதுத் தேர்தலுக்குப் பின் காங்கிரஸ் கட்சியின் சார்பில் நின்று வெற்றி பெற்றுள்ள உறுப்பினர்களை காங்கிரஸ் கட்சித் தலைவர்களும், முன்னாள் அமைச்சர்களும் ஒருங்கே அழைத்து ஒரு 6 மாத காலத்திற்கு புதிதாக ஆட்சிக்கு வந்துள்ள கட்சியினருக்கு எந்தவிதமான இக்கட்டுகளும் ஏற்படுத்



[திரு. ரா. ராமச்சந்திர துரை]

தாதிருக்கும்படி கேட்டுக்கொண்டார்கள். அதன்படியே நாங்கள் இருந்தோம். இருந்தும் முதன் முதலில் நடந்த சட்ட சபைக் கூட்டத்திலும் சரி, இப்போதும் சரி திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் காங்கிரசைத் திட்டுவதையே நோக்கமாகக் கொண்டிருக்கிறார்களே தவிர காங்கிரஸ் ஆட்சியின் சாதனைகளைப் பற்றி ஒருவரும் எடுத்துக் கூறவில்லை என்பதை நான் மனவருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். பொதுவாக அவர்கள் காங்கிரஸ் கட்சியையும், காங்கிரஸ் கட்சி சட்ட மன்ற உறுப்பினர்களையும் தாக்கிப் பேசினார்கள். அதன் காரணமாகத்தான் நல்ல திட்டங்களை திராவிட முன்னேற்றக் கழகம் தமது நிதி நிலை அறிக்கையில் கொண்டுவந்துள்ள போதிலும் அதை ஏற்றுப் பாராட்டாமல் பேசக்கூடிய நிலையில் இருக்கிறார்கள். கடந்த சட்ட சபைக் கூட்டத்தின்போது எங்களது கட்சியைச் சார்ந்த சட்ட மன்ற உறுப்பினர் திரு. மார்டின் பேசிய நேரத்தில் தரக்குறைவாகப் பேசினார் என்பதாக ஒழுங்குப் பிரச்சினை கிளப்பப்பட்டது. அதே நேரத்தில் நமது மதிப்பிற்குரிய ஆசைத்தம்பி அவர்கள் இரண்டொரு தினங்களுக்கு முன்பாகக் கூடத் தரக்குறைவாகப் பேசியிருக்கிறார்கள். சட்ட மன்ற காங்கிரஸ் கட்சி உறுப்பினர் சிவசுப்பிரமணியன் அவர்களும், இந்தக் கூட்டத்திலே பேசிய மார்டின் அவர்களும்—காங்கிரஸ் கட்சிக்குப் புதிதாக வந்தவர்கள், காங்கிரஸ் கட்சியின் சாதனைகளைப் பற்றிப் பேச வந்துவிட்டார்கள் என்று சொன்னார்கள்.

**மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் நிதி நிலை அறிக்கையைப் பற்றிப் பேச வேண்டும்.

**திரு. ரா. ராமச்சந்திர துரை:** நான் சொல்ல வருவதில் ஒரு பாயின்ட் இருக்கிறது. 1957, 1962-ல் காங்கிரசை எதிர்த்துப் போட்டியிட்டவர்கள் இன்றையதினம் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களாக இருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார். இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கட்சி உறுப்பினர்களிடையேயும் அத்தகையவர்களைக் காட்ட முடியும். தேர்தலுக்கு இரண்டு மாதங்களுக்கு முன்பாக காங்கிரஸ் கட்சியில் சீட்டுக் கிடைக்கவில்லை என்றவுடன் திராவிட முன்னேற்றக் கட்சியில் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள். இந்த அமைச்சரவையில் அங்கம் வகிப்பவர்களில் ஒருவர்கூட அவ்வாறு புதிதாக அவர்களது கட்சிக்கு வந்து சேர்ந்தவர்தான் என்பதை என்னால் எடுத்துக்காட்ட முடியும்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** அமைச்சரவையில் வேறு கட்சியில் இருந்து வந்தவர் யார் அங்கம் வகிக்கிறார் என்பதை மாண்புமிகு உறுப்பினர் எடுத்துச் சொல்ல வேண்டும்.

**திரு. ரா. ராமச்சந்திர துரை:** இன்றையதினம் சபாநாயகராக இருக்கும் திரு. ஆதித்தனார் . . . .

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** சபைத் தலைவரைப்பற்றி பேசுவது தவறு. அமைச்சரவையில் யார் இருக்கிறார் என்று கேட்கிறேன்.

**திரு. ரா. ராமச்சந்திர துரை:** சபையில் என்பதற்குத்தான் அமைச்சரவையில் என்று சொன்னேன்.

**மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர்:** அப்போது மாண்புமிகு உறுப்பினர் அமைச்சரவையில் ஒருவர் என்று சொன்னதை வாபஸ் பெற வேண்டும்.

**திரு. ரா. ராமச்சந்திர துரை:** நான் வாபஸ் பெற்றுக் கொள்கிறேன். அடுத்து கலப்புத் திருமணத்திற்கு ஊக்கம் அளிக்க வேண்டும் என்பதை நான் உள்ளபடியே வரவேற்கின்ற அளவில் இருக்கிறேன். கலப்புத் திருமணம் செய்துகொள்பவர்களுக்கு பத்தாயிரம் என்ற அளவில் ஒதுக்கிப் பதக்கம் வழங்குவது என்பது குறைந்த அளவில் சலுகை காட்டுவதாக இருக்கிறது. இப்படித் திருமணம் செய்துகொண்டவர்கள் அநேகமாக இருதரப்பிலும் பாதிக்கப்படுகிறார்கள். எனக்கு முன் சில சட்ட மன்ற உறுப்பினர்கள் குறிப்பிட்டதைப்போல அவர்களுக்கு உத்தியோகத்துறையில் சலுகை காட்ட வேண்டும். மேலும் 2 எக்கர் நிலம், 3 எக்கர் நிலம் என்பதாகக் கொடுப்பது நன்றாக இருக்கும் என்று கருதுகிறேன்.

புஞ்சை நிலங்களுக்கு நிலவரி ரத்து செய்திருப்பதோடு விவசாய வருமான வரியைக் கொண்டு வருகிறபோது ரூ. 3,600-க்கு மேல் வரி என்றிருப்பதை பதினையாயிரம் என்ற அளவுக்கு உயர்த்தித்தர வேண்டும். விவசாய வருமான வரி என்கிறபோது நியாயமான செலவுகளைக் கழித்துவிட்டு, வருகிற வருமானத்திற்கு வரி என்று விதிக்க வேண்டும். எந்தச் சமயத்தில் எப்படிப்பட்ட செலவு விவசாயிகளுக்கு வரும் என்று சொல்ல முடியாது. உழவு காலத்திலும் செலவு வருகிறது. நடவு காலத்திலும் வருகிறது. நாற்றுப் பறிக்கிற காலத்திலும் கூடச் செலவு—எல்லாவற்றையும் கணக்கு எழுதி வைப்பது என்பது சிரமம். அறுவடை காலத்தில் விலை வீழ்ந்துவிட்டால், நஷ்டமே கூட ஏற்படும். பருவ கோளாறு, பூச்சி இவற்றினால் உள்ள நஷ்டம் வேறு. அதிகாரிகள் எதையும் கணக்கில் எடுக்காது—உங்களுக்கு இவ்வளவு வருமானம் இருந்திருக்கும். ஆகவே இவ்வளவு வரி கட்ட வேண்டுமென்றால் விவசாயிகள் பாதிக்கப்படுவார்கள். ஆகவே ரூ. 3,600-க்கு மேல் என்பதை பதினையாயிரத்துக்கு மேல் என்று உயர்த்தித் தர வேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து நமது மதிப்பிற்குரிய சட்ட மன்ற உறுப்பினர் திரு. சிவசுப்பிரமணியன் அவர்கள் சில மாவட்டங்களில் நடந்துள்ள ஒரு சில நிகழ்ச்சிகளைப்பற்றி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள். புதுக்கோட்டை பகுதியிலே கட்சியின் பெயரால் ஒரு உறுப்பினர், உறுப்பினர் என்றால் சட்ட மன்ற உறுப்பினர்



அல்ல, கட்சியைச் சேர்ந்த ஒருவர் முனிசிபாலிட்டியிலே உள்ள இரண்டு சானிடரி இன்ஸ்பெக்டர்களும், இரண்டு ரெவின்யூ இன்ஸ்பெக்டர்களும் நடந்த தேர்தலில் காங்கிரஸ் கட்சிக்காக வேலை செய்தார்கள் என்று அமைச்சரிடத்திலே வந்து கூறி இப்பொழுது ஒருவருக்கு உடனடியாக மாற்றுதல் இருப்பதாகத் தெரிகிறது.

(மணியடிக்கப்பட்டது)

*** திரு. சோ. அழகர்சாமி:** மதிப்பிற்குரிய உப சபாநாயகர் அவர்களே, இப்பேரவையில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்ற நிதிநிலை அறிக்கையைப்பற்றி ஒரு சில கருத்துக்களைச் சொல்ல முன் வந்துள்ளேன். இந்த பட்ஜெட்டை நான் முழுமனதோடு வரவேற்பதோடு மத்திய மாநிலத் தொடர்புகளைப்பற்றி இன்றுள்ள கஷ்டமான நிலையில் சாதாரண மக்களுக்கு ஒரு சில நன்மைகளைப் பயக்கக்கூடிய முறையில் சில அடிப்படையான சலுகைகளைச் செய்துகொடுக்க முன்வந்துள்ளதை நான் பாராட்டுகிறேன்.

இன்று வேளாண்மை அபிவிருத்தியைப் பொறுத்தமட்டில் கடந்த மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட ஆரம்ப காலத்தில் 53 லட்சம் டன் உற்பத்தி இருந்ததை 70 லட்சம் டன்னாக உயர்த்த வேண்டுமென்று திட்டமிடப்பட்டும்கூட, அந்தத் திட்டத்தின் ஐந்தாண்டுகளும் முடிந்த பிறகும்கூட 52 லட்சம் டன்னாகவேதான் உற்பத்தி இருந்து வருகிறது. அதற்கு அடிப்படையான காரணம் நில உறவு முறையில் மாற்றம் ஏற்படாததுதான். நிலச்சீர்திருத்தச் சட்டம் முன்பு கொண்டுவந்தது பெயரளவிலேதான், நிலச் சீர்திருத்தச் சட்டமாக இருந்ததே தவிர உற்பத்தியிலே உற்சாகத்தோடு ஈடுபாடு கொள்ளக்கூடிய வகையில் ஏழை விவசாயிகள், விவசாயக் கூலிகள் இவர்களுக்கு அதனுடைய நன்மைகள் போய்ச் சேரவில்லை. அது மட்டுமல்ல, இப்பொழுதும்கூட உற்பத்தியிலே ஈடுபட்டிருக்கிற சாதாரண விவசாயக் கூலிகள் உற்பத்தியில் ஈடுபடுவதற்கு உற்சாகம் இல்லாமல் வாழ்க்கையிலே பயங்கரமான கஷ்டத்திலே உழன்றுகொண்டு இருக்கிறார்கள். முன்பு விவசாயக் கூலிகள் இராமங்களிலே என்ன கூலிகள் வாங்கினார்களோ அதை விடக் குறைவாகத்தான் இப்பொது கூலி வாங்குகிறார்கள். முன்பு விவசாயக் கூலிகள் நெல்லோ அல்லது வேறு தானியமோ 2 பட்டணம் படி வாங்கிவந்தார்கள். ஆனால் இப்பொழுது 1 ரூபாய் 50 பைசாதான் கூலி வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது அவர்கள் வாங்குகின்ற கூலி முன்பு அவர்கள் வாங்கிய 2 படிக்குப் பதிலாக $1\frac{1}{4}$ படி அல்லது $1\frac{1}{2}$ படி தானியம் என்ற அளவில்தான் கிடைக்கிறது. இப்படி அவர்களுடைய அடிப்படைக் கூலியே குறைவானதன் காரணமாகத்தான் அவர்கள் போதுமான வருமானமில்லாமல் விவசாய உற்பத்தியை அதிகப்படுத்தும் போது

[திரு. சோ. அழகர்சாமி]

மான ஊக்கம் இல்லாமல் இருக்கிறார்கள். உரங்கள் மற்றப் பொருட்கள் இவை கிடைப்பதற்கு ஏற்பாடுகள் இருந்தாலுமகூட கடன்கள் காலாகாலத்தில் கிடைப்பதில்லை. சாதாரண விவசாயிகள் கூட்டுறவு பாங்கு மூலம் அல்லது வேறு நிறுவனங்களின் மூலம் கடன் சுலபமாகப் பெறமுடியவில்லை. அவர்கள் விவசாயம் செய்ய வேண்டிய நேரத்தில் கடன் கிடைக்காத காரணத்தினால் அவர்கள் லேவாதேவிக்காரர்களிடத்தில் சென்று கடன் வாங்குகிறார்கள். இதனால் அவர்கள் 100 ரூபாய் கடன் வாங்கினால் அதற்கு வட்டிக்காக ஒரு மூட்டை நெல் கொடுக்கவேண்டி இருக்கிறது. ஆகவே இந்த நிலைமையைப் போக்கக்கூடிய முறையில் நில உறவு முறையிலே சீர்திருத்தங்கள் ஏற்படக்கூடிய வழியில் நிலத்திலே உற்பத்திசெய்யக்கூடியவர்கள் விரைவாகப் பலன்பெறும் அளவிலே நிலச் சீர்திருத்தச் சட்டத்திலே இருக்கக்கூடிய குறைபாடுகளை ஈடுபட்டிருக்கின்ற தொழிலாளர்கள் பெண்கள் மிகவும் கஷ்டப் சட்டத்திலிருந்து நீக்கி மாறுதல் செய்ய வேண்டியது அவசியம். தஞ்சை ஜில்லாவில் உற்பத்தி பெருகாததின் காரணத்தைப்பற்றி அங்கே சென்றுவந்த அமெரிக்க நிபுணர் ஒருவர் கூறியிருக்கிறார். அவர் கூறியிருப்பது என்னவென்றால் இன்றுள்ள நில உறவு முறை தான் உற்பத்தி பெருகாததற்குக் காரணம் என்று. ஆகவே நில உறவு முறையில் மாறுதல்களை ஏற்படுத்துவதற்கு கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயத்திற்கு அடுத்தபடியாக இருப்பது கைத்தறித் தொழில். ஒரே ஒரு இடத்தில்மட்டும்தான் பட்ஜெட்டில் கைத்தறியைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. தமிழகத்திலே 30 லட்சம் பேர்கள் இந்தத் தொழிலை நம்பித்தான் வாழ்கிறார்கள். அவர்கள் 1952-ம் ஆண்டிலே என்ன நிலையில் இருந்தார்களோ அதே நிலையில் தான் இப்பொழுதும் இருந்துகொண்டிருக்கிறார்கள். கைத்தறித் தொழிலில் துணித் தேக்கம் ஏற்பட்டு பல கூட்டுறவு நெசவுச் சங்கங்கள் மூடப்பட்டுவிட்டன. கைத்தறித் தொழிலில் பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். அவர்கள் பட்டினியாலும் பஞ்சத்தாலும் வாடிக்கொண்டு இருக்கிறார்கள். அவர்கள் பெற்றுவந்த அரைகுறைக் கூலியும் அவர்களுக்கு இப்பொழுது கிடைக்கவில்லை. அவர்களுடைய கஷ்டத்தைப் போக்க குறைந்த விலையிலே அவர்களுக்கு நூல் கிடைக்கச் செய்யவும் தாராளமாக அவர்களுக்குக் கூட்டுறவு பாங்குகள் மூலம் பண உதவிகள் கிடைக்கச் செய்யவும் வழிவகை காண வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நிலவரி நீக்கம் என்பது ஒரு சரியான ஏற்பாடு. நஞ்சை நிலங்கள் சம்பந்தமாகவும் 30 ரூபாயோ அல்லது 3 ஏக்கர் நஞ்சை நிலம் உள்ளவர்களுக்கு வரி கிடையாது என்று சலுகை கொடுக்கலாம்.



[திரு. சோ. அழகர்சாமி]

வருமான வரி விவசாயிகளுக்குப் போடப்பட்டு இருக்கிறது. அது
அவர்களுக்குக் கஷ்டத்தைக் கொடுக்குமென்று சிலர் சொல்கிறார்
கள். அவர்கள் கணக்கு வைத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்
வதும் முடியாத காரியம். உங்களுக்கு 10 ஏக்கர் அல்லது 15
ஏக்கர் புஞ்சை நிலம் இருக்கிறது. அதற்கு வருமான வரி என்று
யூகமாக இவ்வளவு வரிப் போடுகிறோம் என்று சொன்னால்
சாதாரணமாக அவர்கள் கணக்குகளை வைத்துக்கொள்ள
வேண்டுமே என்ற அச்சம் இருக்கிறது. அந்த அச்சத்தைப்
போக்கக்கூடிய முறையில் சாதாரண விவசாயிகளுக்கு உதவி
செய்ய வேண்டிய வழிவகைகள் செய்யவேண்டும்.

கைத்தறித் தொழில் சம்பந்தமாக சொன்னால் ஸ்ரீவில்லிபுத்தூரில்
கூட்டுறவுச் சங்கங்களில் 1.. லட்சம் ரூபாய்க்கு கைத்தறி ஜவுளித்
தேக்கம் ஏற்பட்டிருக்கிறது. மதுரையில் ஆர்.டி.ஓ. ஆபீஸ் முன்
பாக கை நெசவுத் தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தி இருக்
கிறார்கள். ஆரணியிலே 2 ஆயிரம் கைத்தறிகள் வேலை இல்லாமல்
தூங்கிக் கொண்டு இருக்கின்றன. அதைப் போக்க வேண்டும். என்
னுடைய தொகுதியாகிய கோவில்பட்டி தாலூகா வறண்ட பிர
தேசம். அங்கே உற்பத்தியைப் பெருக்குவதற்கு ஏற்ற முறையிலே
பூமிக்குக் கீழே 150 அடி ஆழத்திற்குக் குழாய்க் கிணறுகள் வெட்டி
நன்னீரைக் கொண்டுவந்து அதன்மூலம் உற்பத்தியைப் பெருக்க
லாம். இதைச் செய்வதற்காக ஒரு நிபுணர் குழு அமைத்து அவர்
கள் பரிசீலனை செய்ததற்குப் பிறகு இந்தத் திட்டத்தைக் கொண்டு
வரலாம். கீரியாறு திட்டம் பல ஆண்டுகளாக . நிறைவேற்றப்
படாமல் இருந்து வருகிறது ஆகவே இந்தத் திட்டத்தை உடனடி
யாக நிறைவேற்றினால் 2, 3 வட்டாரங்களுக்கு இதனால் பலன்
ஏற்படும். கோயில்பட்டித் தொகுதியிலே விவசாயத் தொழி
லாளர்கள் கைத்தறித் தொழிலாளர்கள் இவர்களுக்குக் குறைந்த
விலையிலே உணவுப் பொருட்கள் கிடைக்காமல் மிகவும் கஷ்டப்
பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அங்கே அரிசி படி 2 ரூபாய்
அளவிற்கு விற்கிறது. முன்பு அங்கே குடும்பக் கார்டுக்கு அரிசி
கொடுக்கப்பட்டது. ஆனால் இப்பொழுது அங்கே கொடுக்கப்பட
வில்லை. அங்கே அரிசி சப்ளை செய்வதற்கு வேண்டிய நடவடிக்கை
எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். புதிதாக வரிகள்
போட்டதில் கார்மீது போடப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது.
ஆனால் விற்பனை வரியை 2½ சத வீதத்திலிருந்து 3 சத வீதமாக
உயர்த்தியிருக்க வேண்டியதில்லை. நாம் நியாயமாக வசூலிக்க
வேண்டிய வரியைச் சரியான முறையில் வசூல் செய்தால் குறைந்த
பட்சம் 20 கோடி ரூபாய் அல்லது குறைந்தது 10 கோடி ரூபா
யாவது அதிகம் கிடைக்கும். ஆகவே இப்படிப்பட்ட புதிய வரி
போட வேண்டிய சூழ்நிலை இருக்காது. ஆகவே வசூலிக்க வேண்டிய

[திரு. சோ. அழகர்சாமி]

வரியை நல்லமுறையிலே கண்டிப்பாக சரியாக வசூலித்தால் அதுவே நல்ல வருவாயைக் கொடுக்குமென்று நினைக்கிறேன். விலை வாசிகள் ஏற்றத்தாலே என்.ஜி.ஓ-க்கள், ஸ்தல ஸ்தாபன ஊழியர்கள், ஆசிரியர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இவர்களுக்கு எல்லாம் பஞ்சப்படியை உயர்த்துவது மிகவும் அவசியம். இதைப்பற்றியும் யோசிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மற்றப் பொருள் களின் விலையையும் குறைப்பதற்கு யோசனை செய்ய வேண்டும். (மணியடிக்கப்பட்டது). இத்துடன் என்னுடைய உரையை முடித் துக்கொள்கிறேன்.

பி. ப. 1-30 மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர்: இத்துடன் இப் பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவடைகின்றன. இப் பேரவையின் கூட்டம் மீண்டும் நாளை காலை 9 மணியளவில் தொடங்கும்.

**பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.**



## A. *Statutory Rules and Orders.*

195. *Notification issued with G.O. Ms. No. 3826, Home, dated the 8th November 1966 regarding levy of concessional rate of tax in respect of the motor vehicles belonging to the local bodies and used exclusively for compost work. [Laid on the Table of the House under section 11 (2) of the Madras Motor Vehicles Taxation Act, 1931 (Madras Act III of 1931).]*

196. *Notification issued with G.O. Ms. No. 719, Home, dated the 3rd March 1967, exempting from payment of tax leviable under the Madras Motor Vehicles (Taxation of Passengers and Goods) Act, 1952 in respect of passengers, luggage or goods carried in Motor Vehicles plying on temporary permits between Madras and Tirupathi. [Laid on the Table of the House under section 16 (5) of the Madras Motor Vehicles (Taxation of Passengers and Goods) Act, 1952 (Madras Act XVI of 1952).]*

197. *Notification issued with G.O. Ms. No. 731, Home, dated the 3rd March 1967, regarding collection of tax at reduced rate in respect of the Luxury Coach bearing registration number MDJ 3922 belonging to the Jaya Vilas Service, Tiruchirappalli with effect on and from 1st January 1967, to 30th September 1967. [Laid on the Table of the House under section II (2) of the Madras Motor Vehicles Taxation Act, 1931 (Madras Act III of 1931).]*

198. *Notification issued with G.O. Ms. No. 460, Home, dated the 11th February 1967, regarding levy of concessional rate of tax in respect of the vehicle MSR 692 belonging to the Indian Institute of Technology, Madras, with effect on and from the 20th May 1966. [Laid on the Table of the House under section 11 (2) of the Madras Motor Vehicles Taxation Act, 1931 (Madras Act III of 1931).]*

199. *Notification issued with G.O. Ms. No. 67, Home, dated the 7th January 1967, regarding grace time for payment of tax for quarter ending 31st March 1967 in respect of stage carriages and public carriers. [Laid on the Table of the House under section 11 (2) of the Madras Motor Vehicles Taxation Act, 1931 (Madras Act III of 1931).]*

200. *Notification issued with G.O. Ms. No. 2893, Home dated the 29th August 1966, exempting from the payment of tax leviable under the Madras Motor Vehicles Taxation Act, 1931 in respect of Willys Jeep bearing registration No. MSR 1667 belonging to the Co-operative for American Relief Everywhere, incorporated, Madras. [Laid on the Table of the House under section 11 (2) of the Madras Motor Vehicles Taxation Act, 1931 (Madras Act III of 1931).]*

## B. Reports, Notifications and other papers

***Nil.***

## இணைப்பு.

[27ம் பக்கத்திலுள்ள அடிக் குறிப்பைக் காண்க.]

### வாக்கெடுப்புக்கு எடுத்துக்கொள்ளப்படவேண்டிய மானியக் கோரிக்கைகளின் வரிசையும், தேதியும்.

| தேதி. | கோரிக்கை எண். | மானியக் கோரிக்கைகள். |
|---|---|---|
| புதன் 28—6—1967 | III | பொது விற்பனைவரியும், ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிர்வாகம். |
| வியாழன் 29—6—1967 | X | நீதி நிர்வாகம். |
| | XI | சிறைச்சாலைகள். |
| | V | பத்திரப் பதிவுத்துறை. |
| | XIX | கூட்டுறவு. |
| வெள்ளி 30—6—1967 | VI | மாநிலச் சட்டப் பேரவை. |
| | VII | தேர்தல்கள். |
| | VIII | மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள். |
| சனி 1—7—1967 | XIII | கல்வி. |
| திங்கள் 3—7—1967 | I | நிலவரித் துறை. |
| | IV | முத்திரைத் தாள்கள்—நிர்வாகம். |
| | XXXI | பஞ்சத் தணிப்பு. |
| | XXXVII | ஜமீன்தார்களுக்கு இழப்பு ஈடு. |
| செவ்வாய் 4—7—1967 | II | மோட்டார் வண்டிச் சட்டங்கள்—நிர்வாகம். |
| | XXX | மோட்டார் போக்குவரத்துத் திட்டங்கள். |
| | XLIII | மோட்டார் போக்குவரத்துத் திட்டங்களுக்கான மூலதனச் செலவு. |
| புதன் 5—7—1967 | XII | போலீஸ். |
| வியாழன் 6—7—1967 | XIV | மருத்துவம். |
| | XV | பொதுச் சுகாதாரம். |
| | XXXVIII | பொதுச் சுகாதார மூலதனச் செலவு. |
| வெள்ளி 7-7—1967 | XVI | வேளாண்மை. |
| | XVII | மீன்வளம். |
| | XVIII | விலங்கின வளர்ப்பு. |
| | XXXIX | வேளாண்மை மூலதனச் செலவு. |
| | XXXV | காட்டு வளத்துறை. |
| | XXI | சின்கோனா. |
| | XLIV | காட்டுவள மூலதனச் செலவு. |



N67- 2

| தேதி. | கோரிக்கை எண். | மானியக் கோரிக்கைகள். |
|---|---|---|
| சனி 8—7—1967 | XX | தொழில்கள். |
| | XL | தொழில் வளர்ச்சிக்கான மூலதனச் செலவு. |
| திங்கள் 10—7—1967 | XXVI | பாசனம். |
| | XLI | பாசன மூலதனச் செலவு. |
| | XXVII | பொதுப்பணிகள்—பணிகள். |
| | XXVIII | பொதுப்பணிகள் — பணியாளரும், கருவிகளும், இயந்திரச் சாதனங்களும். |
| | XLII | பொதுப்பணிகள் மூலதனச் செலவுகள். |
| செவ்வாய் 11—7—1967 | XLVI | அரசாங்க வாணிகத் திட்டங்களுக்கான மூலதனச் செலவு. |
| | XLVII | மாநில அரசு வழங்கும் கடன்களும், முன் பணங்களும். |
| | XXIV | தொழிலாளர் நலனும், தொழிற்சாலைகளும். |
| | IX | மாவட்ட நிர்வாகமும், பல்வகையும். |
| புதன் 12—7—1967 | XXXIII | பல்வகை. |
| | XXXVI | ஏனைய பல்வகை இழப்பீடுகளும், ஒதுக்கீடுகளும். |
| | XXXII | ஓய்வு ஊதியங்கள். |
| | XLV | ஓய்வு ஊதியங்களை மொத்தமாக்குதல். |
| வியாழன் 13—7—1967 | XXXIV | எழுதுபொருள் அச்சுத்துறை, |
| | XXII | கதர். |
| | [illegible]III | சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் முதலியன. |
| | [illegible] | பொதுப்பணிகள்—உதவி மானியங்கள். |
| வெள்ளி 14—7—1967 | [illegible]V | ஆதிவாசிகள், அரிசனங்கள், ஏனைய பின்தங்கிய வகுப்பினர் நலன். |
| சனி 15—7—1967 | | நிதி ஒதுக்க மசோதாவை அறிமுகம் செய்தல். நிதி ஒதுக்க மசோதாவை ஆலோசித்தலும், நிறைவேற்றுதலும். |

24—6—1967-ஆம் தேதி பிற்பகலில், அரசினர் மசோதாக்கள் ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, நிறைவேற்றப்படும்.

65002